Journal of
The Thanjavur Maharaja Serfoji's

# SARASVATI MAHAL LIBRARY

EDITOR
**S. SIVAGNANAM** M. A.,
*Administrative Officer*
SARASVATI MAHAL LIBRARY
THANJAVUR.

Vol. XLVIII Nos. 1, 2, 3 & 4

PUBLISHED BY DIRECTOR
**THE SARASVATI MAHAL LIBRARY**
THANJAVUR.

ANNUAL SUBSCRIPTION Rs. 50/-
A. D. 2002

Journal of

THE THANJAVUR MAHARAJA SERFOJI'S

# SARASVATI MAHAL LIBRARY

EDITOR

**S. SIVAGNANAM, M. A.,**
Administrative Officer,
SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.

Vol. XLVIII Nos. 1, 2, 3 & 4

PUBLISHED BY DIRECTOR

**THE SARASVATI MAHAL LIBRARY**

THANJAVUR.

ANNUAL SUBSCRIPTION Rs. 50-00

A. D. 2002.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XLVIII A. D. 2002 Saka 1924 No. 1, 2, 3 & 4

# முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் ஆராய்ச்சிப் பருவ இதழ் தொகுதி 48-னைத் தற்பொழுது ஆய்வாளர்கள், அறிஞர்கள் மற்றும் வாசகர்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விதழில் சுவடியியல் நோக்கிலான தமிழ், வடமொழி படைப்புகள் இடம் பெற்றுள்ளன.

இப்பருவ இதழில் **"உவமைத்திறன்"** எனும் இலக்கியக் கட்டுரையும், **"சரசுவதி மகால் நூலகத்திலுள்ள நிகண்டுகள் ஒரு பார்வை"** எனும் ஒரு கட்டுரையும், **"சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம்"** எனும் குறுஞ்சுவடிப் பதிப்பும் ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் இடம்பெற்றுள்ளன.

இப்பருவ இதழை அணிசெய்யும் படைப்புகளைப் பதிப்பித்துள்ள நிருவாக அலுவலர் அவர்களுக்கும், நூலகப் பண்டிதர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இவ்விதழ் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள இப்பருவ இதழின் ஆசிரியரான நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இதழ் வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இதழைச் செம்மையுற அச்சிட்டுத் தந்த கணினி பிரிவினருக்கும், அச்சகப் பணியாளர்களுக்கும், இவ்விதழ் சிறக்க உதவிய ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

இவ்விதழினை அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

**சி. கோசலராமன்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
*17 - 9 - 2002*

# பருவஇதழ்ப் படைப்புகள் - சுருக்க அறிமுகம்

**அ. பஞ்சநாதன்**, எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்
சரசுவதி மகால் நூலகம்.

இப்பருவ இதழில் தமிழ் - வடமொழி ஆகிய மொழிகளைச் சார்ந்த கட்டுரைகளும், படைப்புகளும் இடம்பெற்றுள்ளன.

**உவமைத்திறன்**

இலக்கியத்தில் குறிப்பாக கவிதைகளில் உவமை மற்றும் உருவகம் தனிச்சிறப்புற்று விளங்குவன. அவ்வுமைத்திறனைப் பற்றி இந்நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்கள் சிறப்பாக எழுதியுள்ளார்.

**நூலகத்திலுள்ள நிகண்டுகள் ஒருபார்வை**

இதில் நிகண்டுகளின் தோற்றம், வடமொழி நிகண்டுகள், தமிழ் நிகண்டுகள் பற்றிய தொகுப்புகளை இந்நூலக, நூலகர் நிலை II திருமதி. க. ராமதிலகம் அவர்கள் எழுதியுள்ளார்.

**சதுர்விம்சதிமூர்த்தி லட்சணம்**

சதுர்விம்சதிமூர்த்திலட்சணம் எனும் இப்படைப்பு இருபத்துநான்கு மூர்த்திகளின் லட்சணங்களை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. மேலும் பல்வேறு தியான சுலோகங்களையும் இந்நூலின் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளார். இந்நூலினை நூலக வடமொழிப் பண்டிதர் திரு. ஆ. வீரராகவன் அவர்கள் தமிழ் பொழிப்புரையுடன் பதிப்பித்துள்ளார்.

## வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
மற்றும்
**இயக்குநர்,**
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர் - 613 009.

# பொருளடக்கம்


1. உவமைத்திறன் - 1 - 22
   சாமி. சிவஞானம்,
   நிருவாக அலுவலர்

2. நூலகத்திலுள்ள நிகண்டுகள் ஒரு பார்வை - 1 - 8
   க. இராமதிலகம்,
   நூலகர் - II

3. சதுர்விம்சதிமூர்த்திலட்சணம் - 1 - 120
   நியாய சிரோமணி
   ஆ. வீரராகவன்,
   சமஸ்கிருதப்பண்டிதர்.

# உவமைத் திறன்

**சாமி. சிவஞானம், எம்.ஏ.,**
*நிருவாக அலுவலர்,*
*சரசுவதி மகால் நூலகம்,*
*தஞ்சாவூர்.*

# உவமைத் திறன்

*சாமி. சிவஞானம், எம்.ஏ.,*
*(நிருவாக அலுவர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.)*

இலக்கியத்தில் குறிப்பாகக் கவிதைகளில் உவமை மற்றும் உருவகம் தனிச்சிறப்புற்று விளங்குவன. இதை ஆங்கில இலக்கியத்தில் (Similies) என்று கூறுவர்.

தமிழ் இலக்கித்தைப் பொறுத்தவரை இவற்றைக் காப்பியங்களிலும் கவிதைகளிலும் அழகூட்டும் ஆபரணங்களாகவே கொள்ளப்படுகிறது. இத்தகைய உவம அணிகள் இல்லாமலேயே கருப்பொருளை அகலமாகவும், ஆழமாகவும் அழகாகவும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள் நமது தமிழ் கூறும் நல்லுலகக் கவிஞர்கள். ஆனால் தொல்காப்பியத்தின் உவமவியல் பகுதிக்கு உரை கூறும் இளம்பூரணர் இத்தகைய உவமைகளின் பயனைக் கூறும்போது ''இதனால் பயன் என்ன மதிப்பதோ எனின் புலன் அல்லாதன புலனாகலும், அலங்காரமாகிக் கேட்போருக்கு இன்பம் பயத்தலும் ''எனக் குறிப்பிடுகிறார். இதேபோன்று அப்பையதீட்சிதர் எழுதிய சித்திரமீமாம்சா நூலில் உவமை பற்றிக் கூறப்படும் கருத்தொன்றைப் பரிதிமாற்கலைஞர் கீழ்க்கண்டவாறு மொழி பெயர்த்துள்ளார்கள்:-

**''உவமை என்னும் ஒருபெருங் கூத்தி**
**பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து**
**யாப்பறி புலவர் இதயம்**
**நீப்பது மகிழ்ச்சிப் பூப்ப நடிக்குமே''.**

தொல்காப்பியர் இவ்வுவமையை, வினை, பயன், மெய், உரு என நான்காகப் பிரித்துக் காட்டுகிறார். ஆனால் இதை ஓர் அணியாகக் கொள்ளவில்லை. அணி இலக்கணமாகக் கூறினார். இதற்குப் பின் வீரசோழியம் இயற்றிய புத்தமித்திரனார், அணியை ஒரு அதிகாரமாகத் தொகுத்தார். தண்டி ஆசிரியர் ஒரு தனி நூலாக ''**காவியாதரிசத்தை**'' ப் படைத்தார். பின், மாறன் அலங்காரம், முத்துவீரியம், குவலயானந்தம் ( 1 - 2 பகுதிகள்)சந்திராலோகம் ஆகிய நூல்கள் அணியிலக்கணம் கூறப்போந்தன.

இவற்றைத் தவிர இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்களும் அணி பற்றி கூறியுள்ளன. ஆங்கிலத்தில்,

**(Simile)** உவமை அணி
**(Metaphor)**உருவக அணி
**(Personification)**திணைமயங்கணி
**(Pathetic Fallacy)**அஃறிணை இரங்கணி
**(Apostrophe)**விளியணி
**(Exclamation)**வியப்பணி
**(Hyperbole)**உயர்வுநவிற்சியணி
**(Climax)**ஏறணி
**(Anticlimax)**இறங்கணி
**(Interrogation)**விடைவேண்டா வினாவணி
**(Anti thesis)**முரண்தொடையணி
**(Paradox)**முரண் உரையணி
**(Oxymoron)**முரணழியணி
**(Pun)**சிலேடையணி
**(Metonymy)**ஆகுபெயரணி
**(Litotes)**எதிர்ப்பத மறுத்துரையணி
**(Eupehmism)**மங்கல வழக்கணி
**(Irony)**மறைபொருளணி
**(Dramatic Irony)**நாடகமறை பொருளணி
**(Sarcasm)**வசைமொழியணி

என அணிகள் பல வகையில் கூறப்படுகின்றன. இருப்பினும் ஆங்கிலக் கவிதை மரபில் காப்பிய உவமை (EPIC SIMILIES) அணிகளே மிகவும் போற்றப்படுகின்றன. சான்றாக மில்டன் (MILTON)எனும் காப்பிய வல்லான் துறக்க நீக்கம் (Paradise Lost) துறக்கமீட்சி (Paradise Regained)போன்ற இறவாப்புகழ் பெற்ற ஆங்கிலக் காப்பியங்களில் கையாளும் உவமைகளைத் திறனாய்வாளர்கள் மிகவும் பாராட்டுவார்கள். இதில் கருத்து உடன்பாடும், முரண்பாடும் உண்டு. மில்டனின் காப்பிய உவமை அணிகளை மிகவும் உயர்வானதாகவும் பரந்த விரிவெல்லை கொண்டதாகவும் உவமேயப் பொருளின் தன்மையை எடுத்து நலங்கூட்டுவதோடு மட்டுமின்றிக் காப்பியத்தின் ஒட்டுமொத்த அழகிற்கும் அணி செய்வன என ஒரு தரப்பு ஆய்வாளர்கள் பெருமிதம் கொள்வர். மற்றொரு தரப்புத் திறனாய்வாளர்கள் அவைகள் காப்பிய ஆற்றொழுக்கினின்றும் பிரிந்து செல்கின்றன எனவும், தேவையற்ற கனமான உருவகங்களை ஏற்படுத்தி வாசகர்கள் காப்பியப்

பொருண்மைக்குக் காட்டவேண்டிய ஆர்வத்தைக் குறைத்தும், குலைத்தும் விடுகின்றன எனக் குறைகாண்பர். ஆனால் மில்டனின் காப்பிய உவமையணிகள் புகழ் பெற்றவை; போற்றப்படுபவை.

*ஒரு சான்று :-*

கடவுளுக்கும் சாத்தான் தலைமையில் கூடிய தேவர்களுக்கும் இடை ஏற்பட்ட மோதலில் சாத்தானும் அவனைச் சார்ந்தவர்களும் துறக்கத்தினின்றும் வீசியெறியப்படுகின்றனர். சாத்தானும் அவன் கூட்டாளிகளும், நரகில் எரியும் தீப்பரப்பில் விழுந்துகிடக்கின்றனர். எங்கும் இருள், குழப்பம், தீயில் ஒளியில்லை. ஆனால் வருத்தும் வெம்மை உண்டு; சாத்தன் சிறிது சிறிதாகத் தன் நிலை உணர்கிறான். வருத்துகிறான்; தலை உயர்த்திப் பார்க்கிறான்; அவன் உடல் வெந்தீயில் மூழ்கிக் கிடக்கிறது. இங்குச் சாத்தனின் உடல் கிடக்கும் பிரமாண்டத் தோற்றத்தைக் கவிஞன் 'லெவியதன் (Leviathan) எனும் மாபெரும் உருக்கொண்ட திமிங்கிலத்திற்கு ஒப்பிடுகிறான்.

".................. or the sea beast
Leviathan, which God of all his works
created hugeness that swim th' ocean stream"

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த அளவில் கவிஞன் தன் கற்பனையை முடித்துக் கொள்ளவில்லை, இரவில் வழிதவறிய மாலுமிகள் இந்தத் திமிங்கிலத்தினை ஒரு தீவாகக் கருதித் தங்களுடைய கப்பலை இழுத்து அதில் கட்டிடுவிட்டு நீண்ட இரவில் விடியலை நோக்கிக் காத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் சாத்தனின் வண்மையையும் கொடுமனத்தை யும் கூறி அச்ச உணர்வைப் பிரதிபலிக்கவே இத்தகைய வால்போல் நீளும் உவமையணி கையாளப்படுகிறது. அணியிலக்கணத்தை எடுத்தியம்புவது இக்கட்டுரை நோக்கமன்று. ஆங்கில, வடமொழி, தமிழ்க் கவிஞர்கள் சில உவமப் பொருட்களை எந்த எந்தக் கோணத்தில் கையாண்டு எடுத்துக் கொண்ட பொருளை அழகூட்டி, மெருகேற்றி உள்ளத்தில் உவகையூட்டிக் கற்போருக்குக் களிப்பெய்திடப் பாடியுள்ளனர் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரை நோக்கமாகும். எனவே முன்பே கூறியிருப்பது போன்று படிப்போருக்கு, புலன் அல்லாதவற்றைப் புலப்படுத்தி உள்ளதால் உவகை தந்தும், மகிழ்ச்சி கூட்டியும் நிற்கும் அளவிலேயே இக்கட்டுரை செல்கிறது.

*ஒரு சான்று :*

கம்பனில் மந்தரை பரதனுக்கு முடிசூட்டவேண்டும் என்ற கருத்தைக் கைகேயி மனதில்

மிக ஆழமாக ஊன்றுகிறாள். முதலில் இதை ஏற்காத கைகேயி கூனியின் மதிநுட்பமான விவாதங்களில் விழுகிறாள். கூனியின் நுண்ணறிவால் கைகேயி ''தூய சிந்தை திரிந்தது''; பின் நிர்ப்பந்தத்தில் சிக்கி உழல்கிறாள் , அதனால் ''கொடுமை பூண்டாள் '' அவள் பூண்ட தீமை எப்பேற்பட்டது. ''தீயவையாயினும் சிறந்த தீயாள்''. ''தன்னேரில்லாத் தீயவள்'' இவ்வாறு கைகேயியின் மனம் மாறிய நிலையைக் கம்பன் கூறும்போது இரவின் வருகையால் செக்கர் நீங்கி இருள் பரவிய வானகத்துக்கு மந்தரை உரையால் செம்மை நீங்கி இருண்ட கைகேயியின் மனத்தை உவமையாகக் கூறுவான். இப்போது கொடுமையை மனதில் அளந்த கைகேயியின் கொடுமையின் அளவைக் குறிப்பிடும் கம்பன், வாமனனாக அவதரித்த திருமால் மாவலியிடம் மூன்றடி நிலத்தைத் தானமாகப் பெற்றவுடன் வானளாவ வளர்ந்து ஓர் அடியால் நிலவுலகையும், ஓரடியால் வானுலகையும் அளந்த நெடுமைக்குச் சமமாகக் கொடுமை பூண்டதாக அளந்து காட்டுகிறான் கம்பன் :-

**''கழற்கால் மாயன்**
**நெடுமையால் அன்று அளந்த உலகெல்லாம்**
**தன் மனத்தே நினைந்து செய்யும்**
**கொடுமையால் அளந்தாள்''** *எனக் கூறுகிறான் கவிஞன்.*

இவ்வுவமத்தில் கைகேயி பூண்ட கொடுமையின் செறிவு மற்றும் உயரம் தெரிகிறது. கைகேயி பூண்ட கொடுமை மனதிலே பூண்ட கொடுமை என்பதால் அக்கொடுமை கைகேயியின் பண்பில் இயல்பாக இருப்பதன்று, மாவலிக்கு மாயன் நிக்கிரகக் கருணை கொண்டு விமோசனம் தருகிறான். பின்னாள் இராமனே தயரதனிடம் '' தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரமெனக்குத் தருக'' என்று கேட்டு, கைகேயியையும் பரதனையும் தயரதன் மனைவியாகவும் மகனாகவும் ஏற்கச் செய்கிறான். இங்கு கொடுமை பூண்ட கைகேயிக்கு தயரதனிடமிருந்து கருணைப் பெற்றுத் தருகிறான் காப்பியத் தலைவன் இராமன். இங்கு இந்த அரிய கருத்தும் மறைபொருளாகக் கூறப்படுகிறது. எனவே மனதில் உவகை ஊட்டுவது மட்டுமின்றி, சிந்திக்கவும் வைக்கும் திறம்படைத்தவை இவ்வுவமைகள்.

கவிஞர்கள் காலங்காலமாகக் காட்டும் சில உவமப் பொருட்கள் பல்வேறு கவிஞர்களின் பார்வையில், சிந்தனையில் எவ்வாறு ஏற்றம் பெறுகின்றன என்பதைக் காண்போம்.

**<u>அமைப்பாக்கம் :</u>** **1. மில்டன்**
**2. கம்பன்**
**3. காளிதாசன்**

ஆங்கிலக் காப்பிய உயர் கவிஞன் மில்டன் தன்னம்பிக்கை மிகக் கொண்டவன். அவன் கூறும்போது **''இந்த உலகமே அழிந்தாலும் அழியாத - அழிக்கவியலாத ஒரு காப்பியத்தைப் படைப்பேன்''** என்றான். பின்னால் வயது, வறுமை ஆகியவற்றால் பார்வையிழந்தும் வறுமையில் வாடியும் துன்புற்றபோதும் மனஉறுதி தளராதவன். மகாகவி பாரதியார் கூறும் ''மனதில் உறுதி'' கொண்டவன். அவன் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் சுவர்க்க நீக்கம், சுவர்க்க மிட்சி எனும் இருபெரும் காப்பியங்களைப் படைத்தான். அவை ஆங்கில இலக்கிய உலகு வாழும்வரை வாழும் உயர்வும் விழுப்பொருளும் கொண்டவை. அக்கவிஞனின் கூற்றில் வெல்லவியலாத மனத்திண்மை (unconquerable will) உயர்த்திக் கூறப்படும். ஆனால் நம் பாரத நாட்டுக் கவிஞர்கள் இந்த மன உறுதியும் நுண்மாண் நுழைபுலமும் கொண்டு விளங்கினாலும் அவையடக்கம் மிக்கவர்கள். அதனால் தாம் படைக்கும் காப்பிலங்களில் அவையடக்கத்தை ஒரு அங்கமாகக் கொண்டு பாடும் பண்பாளர்கள். அவர்கள் கூறும் அவையடக்கப் பகுதிகளிலிருந்து சில உவமைகள் :

***மகாகவி காளிதாசன் :***

பார்வதியும் பரமனும் உலகத்திற்குத் தாய் தந்தையர்; அவர்கள் சொல்லும் பொருளும் போல் சேர்ந்திருந்தனர். தனக்கு சொல், அதன் பொருள் ஆகியவை அவர்களின் அருளால் கிட்ட வேண்டும் எனக் கவிஞன் வணங்குகிறான். மேலும் சூரிய வம்சம் சூரியனிடமிருந்து தோன்றியது என்றும், பெருமை மிக்கது என்றும், தானோ மிகக் குறைந்த அறிவினை உடையவன் என்றும் கூறுகிறான். தனது காப்பியமியற்றும் ஆசை எவ்வாறு இருக்கிறதென்றால் கடக்க முடியாத கடலைச் சிறு படகின் மூலம் ஒருவன் கடக்க விரும்புவது போல உள்ளது என்றும் மேலும் அக்கவிஞன்

> **''அறிவற்ற நான் மாக்கவியின் புகழை அடைய விரும்புகிறேன். இது எப்படி இருக்கிறதென்றால் உயரமான மனிதனால் மட்டுமே பறிக்கக்கூடிய பழத்தை ஒரு குள்ளன் பறிக்கக் கொள்ளும் முயல்வு போல் உள்ளது''**

என்று கூறித் தன் அவையடக்கத்தைத் தெரிவிக்கிறார்.

***கம்பன் :***

பூனை ஒன்று பாற்கடல் முழுதும் பருக நினைத்தால் அது நடவாதசெயல். அதுபோல் இராமகாதை என்பது விரிந்தது, பரந்தது. அதை முழுதும் எடுத்துக்

கூறுவதென்பது அரிதாகும்.. எனினும் பூனை பேராசையால் பாற்கடல் பருக நினைப்பது போல் தானும் ஆசையினால் இயன்றவரை இராமகாதையைக் கூறுவதாகக் கூறுவார். இதோ அந்த இனிய பாடல்,

**''ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென**
**ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்**
**காசில் கொற்றத்திராமன் கதையரோ''.**

மேலும் தன்கவியின் இயல்பு கூறம்போது, பெருங்கவிஞர்கள் பாடிய பல துறைப்பட்ட விருத்தவகைகளால் இயன்ற கவிதைகளுக்கு உறைவிடமாகப் பொருந்திய செவிகளுக்குத் தன் பாடல்களைக் கூறினால் அவை யாழிசையாகிய தேனைப் பருகிய அசுணம் என்னும் சிறந்த விலங்கு செவிகளுக்குப் பறையொலி கேட்பது போலத் துன்பம் பயக்கும் என்று கூறுகிறான் கம்பன். இத்தகைய தனது முயற்சிக்கான குற்றம் பொறுக்கவேண்டும் என்று கூறுகிறான் கவிஞன். எப்படி? பைத்தியம் பிடித்தவர், அறிவில்லாதார் மற்றும் பத்தி உடையோர் கூறியவை ஆராயப் பாலதல்ல :-

**''பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்**
**பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ''**

பின்னால் **''கம்பன் என்றொரு மானுடன்''** என பாரதியார் வியந்து மகிழ்ந்து கூறும் கம்பனின் அவையடக்கம் தான் எத்துணை பெரியது!

*கதிரவன் :-*

*தோற்றம் :*

நற்றமிழ்ப் புலவர் நக்கீரன் திருமுருகாற்றுப்படையில் அமரர் இடர்தீர்த்த முருகனின் தோற்றத்தை

**''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**
**பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டா, அங்(கு)''**

எனக் கூறுகிறார். காலைக்கதிரவனைக் கடலிடத்தே கண்டாற்போல் முருகன் தோற்றமளிக்கிறான். இதற்கு உரைகூறும் நச்சினார்க்கினியர் இவ்வுவமத்தைத் தொழில் மற்றும் வண்ண உவமமாகக் கொள்ள வேண்டும் எனக் கூறுகிறார். ஞாயிறு இருளைக்

கெடுத்து ஒளியை உலகிற்கு அளிப்பதுபோல, தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலினால் தொழில் உவமமாகவும், தன்னைக் கட்புலனால நோக்குவார்க்குக் கடலின் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் போல மயிலின் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார். ''பலர்புகழ்'' என்பதற்கு எல்லாச் சமயத்தாராலும் புகழப்படுகின்ற என நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பாரிதியார், ஆகியோர் உரை காண்பர், கவிப்பெருமாள் பொதுவாகப் பலராலும் எனவும், பழைய உரையாசிரியர் ''தனது ஒளியால் காட்சியின் பயன் கொள்வார்'' எனவும் பொருள் கூறுவார்கள். முருகப் பெருமானின் தோற்ற எழில் மற்றும் அவனது அருள்திறன் அனைத்தும் இவ்விரண்டு அடிகள் கூறும் உவம மூலம் விளக்கப் பெறுகின்றது.

அடுத்துக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் அயோத்தி நகரின் எழிலை வியந்தோதும் விதத்தைக் காணலாம். வட்டவடிவமும் பேரொளி யும் கொண்ட கதிரவன் காலையில் தோன்றும் போது அகன்றும், நண்பகலில் உருவளவாய்ப் பொருந்தியும் மறையும் மாலைப்போதில் மீண்டும் அகன்றும் தோன்றும் அதனால் அச்சூரிய மண்டலம் நகரைச் சூழ்ந்தமைந்துள்ள பொன்னாலாகிய மதில்களின் நெருப்புப் போலும் செந்நிற மணிகள் பதிக்கப் பெற்றுள்ள அயோத்தி என்னும் நங்கையின் நிழலைப்போல விளங்கியது என மறுப்புவமையாகக் கையாள்வான். இங்குச் சூரிய மண்டலம் அயோத்தியில் நிழலென விளங்கியது என்பான் கம்பன். உவமேயப் பொருளின் ஏற்றத்தாலும் எழிலாலும் உவமானப் பொருள் தாழ்கிறது. இப்பாடலில் அமைந்துள்ள மற்றொரு நலமும் நோக்கற்பாலது - கதிரவன் காலையிலும் மாலையிலும் பேரொளி குன்றி நண்பகலில் மட்டும் பேரொளி வீசித்திகழக் காரணம் அவ்வேளை நகரின் நேர் வானில் உலவுவதால் அயோத்தி நகரின் பேரொளி கதிரவன் மேல் வீசுதலே காரணம் எனவும் கொள்ளலாம். இதோ அப்பாடல்.

**''எழுமிடத் தகன்றிடை யொன்றி எல்படு**
**பொழுதிடைப் போதலின் புரிசைப் பொன்நகர்**
**அழன்மணி திருத்திய அயோத்தியாளுடை**
**நிழலெனப் பொலியுமால் நேமிவான்சுடர் ''**

*(பாலகாண்டம் - நகரப்படலம் 41)*

மகாகவி காளிதாசர் இரகுவம்ச காவியத்தில், மனு வம்சத்தில் திலீபன் என்ற அரசன் பிறந்தான். அவன் நல்ல உடல் வனப்பும், உள்ள வளமும் கொண்டவன்; அவன்

மக்களிடம் வரிவசூல் செய்கிறான்; அது கவியின் கருத்தில் எவ்வாறு ஏற்றம் பெறுகிறது? கதிரவன் நிலத்தினின்றும், கடலினின்றும் நீரை ஆவியாகக் கொள்கிறான். பின் பன்மடங்கு மழையாக அளிக்கிறான். அதைப் போன்று திலீபனும் மக்களிடம் வரியைப் பெற்று அதைப் பன்மடங்காக்கித் திரும்பவும் அவர்களுக்கே நன்மை செய்கிறான். கதிரவன் நீரை ஆவியாகக் கொண்டு சென்று நன் மழை தருவது போல மக்கள் நலனுக்காகவே வரி வசூலிக்கிறான் திலீபன் எனக் கூறுவார் மகாகவி.

***கதிரவன் மறைவு :-***

முன்கூறியவாறு ஆங்கிலக் கவிஞன் மில்டன் இத்தகைய உவமைகளைக் கையாள்வதில் ஒப்பற்றவன். அவன் படைப்பான **(Comus)** எனும் சிறு காப்பியத்தில் ஒரு காட்சி.

மாலை கரைந்து கொண்டிருக்கிறது; விண்ணிலே இடையர்களுக்கு வழி காட்டும் தாரகைகள் மலர்ந்திருக்கின்றன; பகலை விழுங்க இரவு நெருங்குகிறது; கதிரவன் அட்லாண்டிக் சமுத்திரத்தில் விழுகிறான்; அவ்வாறு மறையும் நோக்கம் தான் என்ன? பகலெல்லாம் பயணித்த பகலவனின் தேரின் அச்சாணி வெம்மையடைந்து விட்டதாம்! எனவே மறுநாள் தொடங்கும் பயணத்திற்காக அவற்றை அட்லாண்டிக் கடலில் குளிர்வித்துத் தயார் செய்கிறானாம் கதிரவன் !

நமது கம்பன் பார்வையில் மறையும் கதிரவன் காட்டும் காட்சிதான் என்ன? அகலிகைப் படலத்தில் ஒரு காட்சி விசுவாமித்திரர், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் சோனையாற்றை அடைந்தனர். அந்நேரம் கதிரவன் மேலைக் கடலில் விழுகிறான். அவன் மறைந்த காட்சி கவிஞன் கண்ணுக்கும் கருத்திற்கும் எவ்வாறு தோன்றுகிறது? மறுநாள் கதிரவன் தன் உதயத்தின் போது அம்மூவருக்கும் குளிர்ச்சியைப் பொழிவதற்காகத் தன் உருவத்தில் கொதித்துக் கொண்டிருக்கின்ற வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டு அருணனுடைய கண்பார்வையின் வேகத்துக்கும் முந்திச் செல்லும் கடிவாளம் அணிந்த குதிரைகள் பூட்டப்பட்ட தேரொடும் கடலில் குளிப்பது போலத் தோன்றியது. ''கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான் போல் கடல் குளித்தான் '' எனக் கூறுகிறான் கவிஞன். கதிரவனின் இயல்பு நிலையைத் தற்குறிப்பேற்ற அணியாகக் கவிஞன் காட்டும் அழகு எண்ணி மகிழக் கூடியது.

**மகாகவி காளிதாசனின் குமாரசம்பவத்தில் ஒரு காட்சி**

தேவர்கள் சிவபிரானது மகனைத் தமது சேனைக்குத் தலைவனாகக் கொண்டு வெற்றியடைய விரும்புகின்றனர். சிவபிரான் தனித்திருந்து மனதைத் தத்துவப் பொருளில் வைத்துத் தியானத்தில் இருக்கிறார். பார்வதியினிடத்துச் சிவபிரான் அன்பு கொள்ள வேண்டும். இதற்கு மாறனின் துணை நாடுகின்றனர். முதலில் மறுத்த மன்மதன் பின் இவ்வேண்டுகோளை ஏற்கிறான் மாறனின் நண்பன் வசந்தன், சிவனார் வனத்தில் மன்மதனுக்கு உதவி செய்ய வசந்தன் வருகிறான். வசந்தத்தின் அடையாளமாகத் தென்றல் வீசுகிறது. இங்குக் காலமல்லாத காலத்தில் வசந்தம் வந்து விட்டதால் கதிரவன் வடதிசை நோக்கிச் செல்கிறான். உண்மையில் அவன் வடதிசை செல்லும் காலமல்ல·அது. உரிய காலம் வருமுன்பே கதிரவன் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றதால் தென்திசை எனும் நாயகி ஏக்கத்தினால் விடும் பெருமூச்சு போல் காற்று வீசியது என்கிறார் மகாகவி!

சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தில் கதிரவன் மறையும் காட்சியைக் காட்டும் அழகு நயமிது:- சுந்தரருக்கும் பரவையாருக்கும் இடை காமன் தன் மலரம்பும் கரும்பு வில்லும் கொண்டு நடுநின்றான். இருவரும் மாறிப்புக்கு இதயமெய்தினர். பின் பிரிகின்றனர். மாலைநேரம் சுந்தரர் பரவையின் நினைவிலே அவரைக்காணத் தேவாசிரிய மண்டபத்தில் காத்திருக்கிறார். ஆரூர் இறைவன் இனிய பரவையைத் தந்து அதன் மூலம் உயிரையும் தருவார் என எண்ணுகிறார். ஏங்குகிறார், அப்போது கதிரவன் கடலில் புகும் காட்சி எவ்வாறு தோன்றுகிறது?

நற்புகழ் நம்பிகளது மனம் விரும்பிய மின் இடைப் பரவையாராகிய இனிய அமுதத்தைக் கடலைக் கடந்து போய்க் காட்டுவேன் என்று சொல்வது போல ஏழு நிறக்குதிரைகள் பூட்டிய தேரில் வரும் கதிரவன் மேலைக் கடலில் விழுகின்றான். அமுதமலை கடலுக்கு அப்பால் உள்ளதென்றும் அது வந்தால் இறந்தாரும் உயிர் பெறுவர் எனக் கந்தபுராணம் மற்றும் இராமாயணம் கூறும் உருவகமும் தற்குறிப்பேற்றமும் விரவிடும் கலவையணி இது. கதிரவன், நம்பிகளுக்குத் தன்னால் இயன்ற பணியைச் செய்து அவரது திருவருள் பெற எண்ணினான் என்ற குறிப்பால் அமைந்த இப்பாடல் சுவைதான் என்னே! இதோ அந்த வைரவரிப் பாடல்:-

**''நாட்டு நல்லிசை நாவலூரன் சிந்தை**
**வேட்ட மின்னிடை இன்னமுதத்தினைக்**
**காட்டுவன் கடலைக் கடைந்தென்பபோல்**
**பூட்டுமேழ் பரித்தேரோன் கடல்புக''**

*நிலா*

நிலாவைப் போற்றிப் புகழாத கவிஞர்களே இல்லை எனலாம்; கூடும் காதலர்களுக்கும் இன்ப உணர்வையும், பிரியும் போது துன்ப உணர்வை அளிப்பதும் காதலன் இல்லாதபோது வந்த தலைவியின் தனிமையைக் கேலி செய்வதாகவும் கூறுவது புலவர்களின் வழக்கமான கற்பனைகள்.

**ஸ்ரீகாந்த மகாபுராண வீரமாகேந்திர காண்டத்தில் ஒரு காட்சி:-**

அருள்மிகு முருப்பெருமானின் தூதனாக வீரபாகுத்தேவர் வீரமகேந்திரபட்டினம் செல்கிறார். அங்குச் சூரனின் ஆணைப்படி சந்திரன், சூரியன், அக்னி ஆகியோர் அசுரன் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்து வருவதைக் காண்கிறார் இன்ப வேட்கையில் திளைக்கும் அசுரமாதர்கள் எழில் நிலவைப் பிடித்து அமுதைப்பருகிப் பின் அந்த வெண்ணிலவை, மக்கள் இளநிரைப் பருகி மட்டையை எறிவதுபோல மாளிகையின் சன்னல்களின் வழியாக எறிகிறார்களாம். இன்பத்திளைப்பின் எல்லைக்கே கொண்டு செல்லும் அரிய காட்சியிது.

*இளங்கோ அடிகள்*

திங்களினின் வருகை கூறும் காட்சி

பாண்டிய மன்னர் இளம் வயதினர். ஆயினும் ஆற்றல் சால் அரசர், பகைவரைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ய வல்லவர்; போரிலே மாட்சிமை கொண்ட பாண்டிய மன்னன் குலத்தின் முதல்வன் சந்திரன்; மாலைப் பொழுதிலே செவ்வானிலே பிறைவடிவினனாய்த் தோன்றினாலும் வருத்தந்தரும் மாலைக் குறும்புகளை எதிர்த்து அதனை வென்று ஓட்டினான். முறைமைத் திரிபேதும் இல்லாதவனாகப் பால்போன்ற தன் நிலவுக் கதிர்களை எங்கணும் பரப்பி, பன்மீன்களுக்கிடையே ஆட்சி செலுத்தும் திங்கள் எனும் செல்வன் உலகினை விளக்கஞ் செய்த நிலவுப் பொழுது என்பதை

**''இளையர் ஆயினும் பகை அரசு கடியும்**
**செருமாண் தென்னவர் குலமுதல் ஆகலின்**
**அந்திவானத்து, வெண்பிறை தோன்றிப்**
**புன்கண் மாலைக் குறும்பு எறிந்து ஓட்டிப்**
**பான்மையின் திரியாது பாற்கதிர் பரப்பி**
**மீன் அரசு ஆண்ட வெள்ளி விளக்கத்து''**

என்ற அந்திமாலைச் சிறப்புச்செய்காதை அடிகளால் அறியலாம்.

*கம்பன் பார்வையில் :-*

நிலா முளைக்கிறது, எப்படி? சீதையைத் தேடிச் செல்லும் அனுமன் தன் நெடிய வடிவைக் குறுக்கிக் கொண்டு குன்றில் தங்குகிறான். கொடியவன் ஒருவனது பாவம்போல் எல்லா இடங்களிலும் இருள் ஆட்சி செய்கிறது:-

***பின் நிலா முளைக்கிறது;***

அறம் எனும் பயிர், கொடிய தீவினை சுடுதலால் வன்மை தீர்ந்து அறக் காய்ந்துவிட்டது. மாருதி என்னும் பெயரையுடைய மாவீரன் என்னும் மழைவந்து பாதுகாக்க வற்றிய அறம் என்னும் முளை மீண்டும் துளிர்க்கிறது. இதைப்போன்று சந்திரன் எழுகிறான். இந்த உவமானத்தில் உட்பொருளும் நோக்கற்பாலது. அறத்தலைவன் இராகவன், அவனின் உறுதுணைவன் அனுமன். எனவே அவனும் அறத்தின் அடிப்படையில் வாழ்பவன், பின்னால் இராகவனே அனுமனை

**''நின்னின் தோன்றினோம், நெறியில் தோன்றினாய்''**

*(மருத்துவமலைப் படலம்)*

என்று கூறி நன்றிப் பெருக்காற்றுகிறான். நிலவு முளைக்கும் காட்சி கூறும் கம்பனின் கவித்துவமிக்க அப்பாடல்:-

**''தீண்ட அருந் தீவினை தீக்கந் தீந்து போய்**
**மாண்ட அற உலர்ந்தது மாருதிப் பெயர்**
**ஆண்தகை மாரி வந்து அளிக்க ஆயிடை**
**ஈண்டு அறமி முளைத்தென முளைத்தது இந்துவே.''**

(ஊர் தேடு படலம்)

**மகாகவி காளிதாசன்**

இரகுவம்சத்தில் திலீபன் மகன் இரகு எல்லாவகைச் செல்வங்களையும்பெற்றுள்ள தந்தை திலீபனின் கண்காணிப்பில் திடமான உடலுறுப்புகளைப் பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். இது எத்தன்மை கொண்டது? சூரியனின் கதிர்கள் சந்திரனுள் புகுந்து அதை ஒளியுடன் வளரச் செய்வது போலிருந்ததாம்! திலீபனுக்குச் சூரியனும், திலீபனது செல்வத்திற்குச் சூரிய கிரணங்களும், ரகுவிற்குச் சந்திரனும், இரகுவின் அங்க

வளர்ச்சிக்குச் சந்திரனுடைய கலை வளர்ச்சியும் உவமானங்கள். மேலும் கதிரவன் கதிர் மணிகளால் வான் நிலவு ஒளிபெறுகிறது என்ற அறிவியல் கூற்றும் நினைவுகூரத்தக்கது.

நிலமகள்

**வள்ளுவப் பேராசான்**

''உழவு'' அதிகாரத்தில் நிலத்தை ''நிலமகளாக '' உருவகித்து 'அவள் நகைப்பதாகவும் கூறுகிறார். யாரைக்கண்டு நகைக்கிறாள்? எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால் நிலமகள் தன்னுள் சிரித்துக் கொள்வாள். அப்பாடல்

**"இலமெ என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமெ என்னும் நல்லாள் நகும்.''** என்பது.

**இளங்கோ அடிகள்**

கண்ணகியின் பிரிவாற்றாமையையும், கோவலனுடன் கூடிய மாதவியின் நிலையையும் கூறும், இருவேறு மயக்க நிலை அழகைப் பார்ப்போம். மாலைவேளை, ஒற்றைச் சக்கரத்தினை உடைய கதிரவன் தன் விரி கதிர்கள் மூலம் உலகை ஆள்பவன் . இங்கு அவன் நிலமகளின் காதலனாக வும், விண்ணிடை விரிந்து ஒளிபரப்பும் திங்கள் நிலமகளின் மகனாகவும் உருவகிக்கப்பட்டு இருவரையும் காணாமல் கவழும் நிலமகள் தோற்றம் எப்படியிருக்கிறது. தன் முகமாகிய அடிவானம் பசலை படர்ந்து, செவ்விதழ் மலர்க் கண்கள் முழுதும் நீர் நிறைந்து வழிய, உடல் முழுதும் நடுக்கம் கொண்டவளாகக் கடலை ஆடையாகப் புனைந்து நெஞ்சம் கலங்கி நிற்கும் மாலைப்பொழுது என்று கூறும் நயம் படித்து இன்புறத்தக்கது.

நம்மைக் கற்பனை எல்லைக்கே இட்டுச் செல்லும் அந்த இனிய வரிகள் :-

**''விரிகதிர் பரப்பி உலகம் முழுதும் ஆண்ட**
**ஒரு தனித்திகிரி உரவோன் காணேன்**
**அங்கண் வானத்து, அணி நிலாவிரிக்கும்**
**திங்கள்அும் செல்வன் யாண்டுஉளன் கொல்?**

**திசைமுகம் பசந்து, செம்மலர்க் கண்கள்**
**முழுநீர் வார முழுமையும் பனித்துத் .**
**திரைநீர் ஆடை இருநில மடந்தை**
**அரைசு கெடுத்து, அலம் வரும் அல்லற் காலை.''**

வில்லிபுத்தூரார் கற்பனையிலும் நிலமகள் கடலையே ஆடையாக உடுத்திக் காட்சி தருவதாகக் கூறுகிறார்.

**''உவரலைப் புணியாடை உலகுடை வேந்தர்காணக்**
**கவர்தரப் புகறி என்றான் கண்ணருள் *சிறிது* மில்லான்''**

காளிதாசன், குமார சம்பவத்தில் கூறும் ஒரு காட்சி இன்புறத்தக்கது. இமயமலையின் தொடர்ச்சி கிழக்கிலும் மேற்கிலும் விரிந்து பரந்துகிடப்பதால் அதனைப் பாரத தேசத்தின் அகலத்தை அளக்கும் அளவுகோல் எனக் கூறுகிறார். அவ்விமயத்தில் வசிக்கும் அப்சரஸ்திரீகள் எனும் தேவமாதர்கள் காதலர்களைச் சந்திப்பதற்கு முன் ஒப்பனை செய்து கொள்கின்றனர். அவர்கள் அழகிற்குத் தேவையான பலவண்ண செங்காவிப் பொடிகள் அம்மலையின் சிகரங்களில் ஏராளமாக உள்ளன. செங்காவிப் பொடிகளின் சிவப்பு வண்ணம் மலைச் சிகரங்களில் காற்றில் சிதறிக்கிடக்கின்ற மேகங்களில் பிரதிபலிக்கின்றன. எனவே கதிரவன் மறையுமுன்பே மாலைக்காலம் வந்துவிட்டது என்ற எண்ணத்தை உண்டாக்குவதற்குக் காரணமாக இருந்தன, இச் செங்காவிப் பொடிகள். என்ன உயர்வான கற்பனை வளம்!

**மேலும் காளிதாசரின் மேகசந்தேசத்தில் ஒரு காட்சி :-**

யட்சன் என்பவன் தன் காதலியைப் பிரிந்து வாடுகிறான். இங்குக் காதல் மேலீட்டால் மேகத்தைத் தன் காதலிக்குத் தூதுவிடுவதாக அமைகிறது பாடல்.

மேகமே ! நீ செல்லும் வழியில் அடுத்துத் தங்குமிடம் ஆம்ரகூடம் என்ற மலை, முன்பு அம்மலையில் உன்டான காட்டுத்தீ, செடிகள் உலர்தல், நீர் நிலைகளில் வறட்சி ஏற்படுத்துதல் முதலான இன்னல்களை நீ மழை பெய்ததால் நீக்கி உள்ளாய் எனவே உனது பயணக் களைப்பாற்றிக் கொள்ள அம்மலை அருகில் சென்றால் அது உன்னைத் தலையாலே தாங்கும்.

ஒரு கல்லாத புல்லன் கூட தனக்கு உதவி செய்தவன் தன் வீட்டிற்கு வருவானாயின்

அவனை உபசரித்துப் போற்றுவான். எனவே பலவகையிலும் இந்த மலைக்கு உதவிய உன்னை இம்மலை உபசரிக்கும். வடமொழியில் ''அர்த்தாந்தரந்யாச அலங்காரம்'' எனும் இவ்வணியில் அமைந்த இவ்வுவமை மிகச் சிறந்த அணியாம்.

ஷெல்லி கவிஞன் **'மேகம்'** என்ற கவிதையில் அஃறிணைப் பொருளை உயர்திணைப் பொருளாக உருவகித்துக் கூறும் **(Personification)**'உவமைகள் பல்கிக் காணப்படுகின்றன.

ஷெல்லியின் 'மேகம்' **(The Cloud)** என்ற கவிதையில் உருவக அணியில் அஃறிணைப் பொருளை உயர்திணைப் பொருளாக உருவகித்து கற்பனைவானின் உயரத்திற்கே நம்மை இட்டுச் செல்கிறார் ஷெல்லி. இந்தக் கவிதையில் பல உவமைகளும் உருவகவணிகளும் நிறைந்துள்ளன. மேகம் உயிர் பெற்று, உணர்வு பெற்று உரைப்பதாக அமைந்துள்ளது இக்கவிதை. இக்கவிதையிலிருந்து சில தேன்துளிகள்:-

மேகம் ஆழ்கடலிலிருந்தும் அருவிகளிலிருந்தும் வாடும் வண்ண மலர்களுக்கு வான்மழையாய் பொழிகிறது, அசைந்தாடும் மரக்கிளைகளிலும் கொடிகளிலும் தாயின் தாலாட்டிலே திளைத்து அவள் நெஞ்சமஞ்சத்திலே உறங்கும் சேய்களென துளிர்கள் கண்ணயர்ந்தன; பின் மழைத்துளி பட்டு அவை கண்விழிக்கின்றன; ஆலங்கட்டி மழை பொழிகிறது; பசுமை வயல்களெல்லாம் வெள்ளை நிறத்தை விரும்பி ஏற்றன. மேகம் சிரிப்பதே வேகமான இடியாம்; மேகத்திலும் பனிச் சிதறல்கள் பரவுகின்றன. அவை மலைமீது தலைவிரிக்கும் 'பைன்' மரங்களில் விழுந்து அவற்றை வியப்பிலும், திகைப்பிலும் ஆழ்த்துகின்றன. கடுமையாக வீசும் காற்றின் கரங்களில் அயரும் மேகத்திற்கு வெண்பனி சூழும் மலையுச்சியே தலையணை விரிக்கின்றது. மின்னல் மேகத்தின் பயணத்திற்கு வழியமைக்கிறது. காற்றில் மேகம் அமைந்திட்ட உயர் மாடத்தில் மின்னல் அமர்ந்தது. 'மேகத்தின்கீழ் மண்டலச் சிறைக் கூடத்தில் இடியொலி கேட்கிறது; அவைகள் கைதிகளின் கைகளைச் சங்கிலியால் பிணிக்கப்பட்டது போலவும் அடிக்கடி விடுவித்துக் கொள்ளும் முயற்சியால் சீற்றம் உருவதாகவும் வர்ணிக்கப்படுகின்றன. மலைகளிலும் அருவிகளிலும் ஏரிகளிலும் எழில் கூட்டும் சமவெளிகளிலும், மின்னல் பயணிப்பது தன் காதலியைக் காணாமல் தேடுவது போல உள்ளது. இளம் ஞாயிறு முகிலிடை எழுகிறது . பகல் பயணத்திற்குப்பின் மேலைக் கடலில் வீழ்கிறது; அதன் வண்ணங்கள் கடலிடை கவினுற காட்சிதருகின்றன. உலக உயிர்களுக்கு உறக்கம் அன்பும் தருவதுபோல் தோன்றுகிறது; பின் மதிமகள் வருகிறாள், முகில்மேல்நடக்கிறாள். அவள் நடையொலியைத் தேவதைகள் உணர்கின்றன. அவள் நடையால் முகிலில் சில மென்மையான இடங்களில் ஏற்படும் இடைவெளி வழியாக விண்மீன்கள் மண்ணுலகைக் காண்கின்றன. சிலவேளைகளில் இந்த இடைவெளிகளின் வழியாக மதியும், விண்மீனும்

கீழே உள்ள நதியிலும் கடலிலும் தெரிகின்றன. வானத்தின் வளமான பகுதியில் சிறிது நீரில் விழுந்தது போல காட்சி தருகிறது, பான்மதியைச் சுற்றி முத்து வளையங்களை முடைகிறது முகில்; பின் விண்ணில் கூரையாய் விரிகிறது முகில், அதற்கு மலைகள் தூண்களாகத் துணை நிற்கின்றன.

**பல்வகை உவமைகளால் பாங்குறக் கூறும் இப்பாடலில் மேலும் ஒரு உருவகம் :-**

இங்கு மேகம் போரில் பெற்ற வெற்றியால் திரும்பும் வீரத்தலைவனாக வருணிக்கப்படுகிறது. வெற்றி பெற்று மீளும் தலைவனையும், படைகளையும் வரவேற்க நகர் அழகூட்டப்பட்டு பல அலங்கார வளைவுகளும் நிறுவப்படுவது இயல்பே, போரில் தோற்ற மன்னர்களை தேர்களில் கட்டி இழுத்துவருவது அக்கால வழக்கு. அதைப்போன்றே இங்கு வானவில் வரவேற்பு வளைவுகளாக, அதன் கீழ் மேகம் வீரமாக நடைபயின்று செல்கிறது . போரில் மேகத்திற்கு உதவிய மின்னல் மற்றும் பனிக்கட்டிகள் துணைநின்ற வீரர்களாக வருகின்றனர். சூரைக்காற்று மேகத்தினால் தோற்கடிக்கப்பட்டுவிட்டது போலும்! பிணைக் கைதியாக மேகத்தைப் பின் தொடர்கிறது. இப்பாடலில் இன்னும் பல படித்துப் படித்து இன்புறும் ஏற்றமுடைய உருவக அணிகள் உள்ளன.

*மழை நீர் :-*

''யாயும் யாயும்'' எனத் தொடங்கும் புகழ்பெற்ற குறுந்தொகைப் பாடல் நாம் அறிந்த ஒன்றுதான். தலைவனும் தலைவியும் கூடியபின் தலைவன் பிரிந்து விடுவானோ என ஐயுறுகிறாள் தலைவி. அதைக் குறிப்பாலுணர்கிறான் தலைவன். எனவே அவளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ''என் தாயும் நின் தாயும்'' என் தந்தையும் நின் தந்தையும், எந்தமுறையில் உறவினர்? இப்பொழுது பிரிவின்றியிருக்கும் நானும் நீயும் ஒருவரையொருவர் எவ்வாறு முன்பு அறிந்தோம், இம்மூன்றும் இல்லை. செம்மண் நிலத்தின் கண்ணே பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையடைதல் போல், அன்புடைய நம் நெஞ்சம் தாமாக ஒன்றுபட்டன'' எனக் கூறுகிறான் தலைவன். இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் உணர்ந்த சங்கப் புலவர்களில் செம்புலப் பெயனீரை உவமை கூறிய சிறப்பால் இச் செய்யுளின் ஆசிரியர் ' செம்புலப் பெயனீரார்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். அப்பாடல் :-

***''யாயும் யாயும் யாரா கியரோ***
***எந்தையும் நுந்தையு மெம்முறை கேளிர்***
***யானும் நீயு மெவ்வழி யறிதும்***
***செம்புலப் பெயனீர் போல***
***அன்புடை நெஞ்சந்தான் கலந்தனவே***

*(குறுந்தொகை - 40 ஆவது பாடல்)*

**காளிதாசனின்** இரகு வம்சத்தில் ஒரு காட்சி. திருமாலின் குணநலன்களை எடுத்துக் கூறும் தேவர்கள் :-

மழைநீரின் இயல்பான சுவை இனிப்பானது, ஆனால் அது உவர் நிலத்தில் வீழ்ந்தால் உப்பாகவும், வேறு சுவை உள்ள தரையில் விழுந்தால் அத்தரைச் சுவைகளையும் பெற்று விளங்குகிறது. அதைப் போல திருமாலின் நிலையான குணம் ''ஸத்துவ குணமாகும்''. ஆனால் அவர் கைக்கொள்ளும் குணங்களுக்கேற்பத் தொழில்களையும், பெயர்களையும் ஏற்கிறார், சத்வகுணம் காரணமாக விஷ்ணுத் தன்மையையும், ரஜோ குணம் காரணமாக பிரம்மத் தன்மையினையும் தமோ குணம் காரணமாக உருத்திரத் தன்மையையும் அடைகிறார். ஆனால் எந்நிலையிலும் மாறாமல் சத்துவக் குணத்தன்மையைக் கொண்டுள்ளார் என தேவர்கள் திருமாலுக்குப் புகழாரம் சூட்டுவதாகக் காளிதாசர் மழைநீர் உவமையைக் கையாளுகிறார்.

**தென்றல்**

கவிஞர்களின் கற்பனை வலையில் சிக்கும் மற்றொரு பொருள் தென்றல். தென்றலின் மென்மையைப் போற்றிப் புகழாத கவிஞர்களே இல்லை எனலாம்.

***இளங்கோ அடிகள்***

தென்றலின் வருகையைப் பல இடங்களிலே வருணித்துப் பாடுகிறார். கோவலனும் கண்ணகியும் திருமணத்தால் ஒன்று படுகின்றனர். அவர்களின் பெற்றோர் அவர்களைத் தனி மனைக் கண் குடியமர்த்துகின்றனர். இல்லறத்தில் இனிது திளைக்கின்றனர். திருமகளின் அரவணைப்பில் திகழ்கிறது புகார் நகரம். மயன்நின்று திருத்தியது போன்ற மணிக்கால் கட்டிலின்மேல் மாளிகையின் ஏழடுக்கு மாடிகளுள் இடைநிற்கும் நான்காவது மாடியிலே அவர்கள் காதல் வாழ்விற்கே வழிகாட்டுபவர்கள் போல இன்பமுடன் வீற்றிருந்தனர். அப்பொழுது தென்றல் வருகிறது. தென்றலின் வரவால் கோவலனும் கண்ணகியும் மகிழ்கின்றனர். அவர்கள் உள்ளம் நடு நிற்கும் படை மதனின் மலரம்புகளால் தாக்குண்டன. எழுநிலை மாடம் எய்தி இன்புறுகின்றனர்.

***இந்திரன் விழவு ஊர் எடுத்த காதையில் ஓர் இனிய காட்சி :-***

புகார் நகர் பொலிவுடன் விளங்குகிறது. காலைக் கதிரவன் வரவால் நிலமகள் உடம்பைப் போர்த்துக்கிடந்த இருள் போர்வை அகல்கிறது. பட்டும் பவளமும் சந்தனமும்

அகிலும் குறைதீர் முத்தும் மணியும் பொன்னும் குவிந்து கிடக்கும் வணிக வீதிகள் ! பல தரப்பினரும் பாங்குடன் வாழும் பட்டினபாக்கம், மருவூர்ப் பாக்கம், நாளங்காடிகள், குரவைக் கூத்தாடும் மரக்குடிமகளிர், வேந்தனின் வெற்றி கருதி நரபலியிடும் வீரமறவர்கள, இதயத்தில் இலச்சினை பொறிந்த திருமாவளவனுக்குக் குவியும் காணிக்கைக் காட்சிகள்!

செங்கோல் திறம்பி நீதி தவறினால் துன்பக் கண்ணீர் சொரியும் பாவை மன்றம், வானத்தை எட்டும் மங்கல நெடுங்கொடி வீதிகள் பொலிவும், விழாக்களின் சிறப்பும் கொண்டு விளங்குகிறது. இசையொலி பலவும் எழுகிறது. அவ்வேளை தென்றல் வீசுகிறது. எப்படி? புகையும் சாந்தும் வாடாது சிறந்து நகையாடி மகிழும் கன்னியர் கூட்டத்தின் நன் மொழிகளில்திகைத்து வாய்ப்பாட்டிசை வல்ல பாணரோடும் நகர்ப் பரத்தரோடும் களித்துத் திரிகின்ற கோவலனைப் போல இசைப்பாடும் வண்டினத்தோடும் இளவேனில் பருவத்தோடும் பொதியிலிருந்து வரும் தென்றற் காற்றாகிய மாருதம் இனிது தவழ்ந்து வருகிறதாம்!

> **''குரல் வாய்ப் பாணரொடு, நகரப் பரத்தரொடு**
> **திரிதரு மரபின் கோவலன் போல**
> **இளிவாய் வண்டினொடு, இன்இள வேனிலொடு**
> **மலயமாருதம் திருதரு மறுகில் ''** -
>
> - *இந்திர விழா ஊர் எடுத்த காதை (16)*

***கம்பனில் ஒரு காட்சி :***

இராமன் சடாயுவுக்கு வேதவிதிப்படி இறுதிக் கடன்களை செய்கிறான். இத்துன்பத்தைக் காணும் கதிரவன் தானும் நீராடி சடங்குகளைச் செய்பவன் போல் மேலைக் கடலில் வீழ்கிறான். இராம இலக்குவனர்கள் ஒரு மலையைத் தங்கும் இடமாகக் கொண்டனர். காடும் காவும் கவின்பெறு சோலைகளும், அவர்களின் துன்பத்தால் தாமும் துன்பமடைவது போன்று தேன் பெருக்கையும், அருவி நீர்பெருக்கையும் வழிய விடுகின்றன. சீதையின் பிரிவுத் துன்பமும், இராவணனின் செயலால் ஏற்படும் கோபமும், சடாயு மரணம் தந்த சோகமும், துயரமும் இவற்றை அடக்கவேண்டும் என்ற ஞானமும் தம் மனதிலேயே போரிட்டு வருத்தின. காண்பதற்கரிய கரையற்ற இரவு வருகிறது; இராகவனின் நயனத் தாமரைகள் குவியவில்லை; பரிவுத் துயரில் பெரிதும் வருந்துகிறான் இராமன். அப்பொழுதுதான் தமிழ்த் தென்றல் வருகிறது. ''வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் பூமாலையை அணிந்த சீதையினது ஒளிபொருத்திய முகம் வானத்தே காட்சி தருவதைக் கண்டேன்'' என்று இராகவன் மகிழ அவனுள் ஒரு ஆசை எழும் வண்ணம் வருகிறது, இந்த குளிர்த்தென்றல். அத்தென்றல் விண்ணிலே தோன்றிய நன் முழுமதியினைச் சீதை என

மயங்கி பிரிவாற்றாமையால் துயருரும் அவள் இருப்பதைத் தெரிவித்து அமைதிபடுத்துவான் போல் நல்லெண்ணத்துடன் வந்தனன் என்று கூறும் நயம் சிறப்புடையது. ஆகையால் அத்தென்றல் காதலால் நலிந்துருகும் இராமனுக்கு கோளராவாக ஆயிற்று எனக் கூறினார் கவிஞர். அந்நேரம் விண்ணில் வெண்மதி யும் ஒளி உமிழந்து வருகிறது. அப்பாடல்

**"வண்டு உளர் கோதைச் சீதை வாள்முகம்**
**பொலிய வானில்**
**கண்டனென் என்று வீரற்கு ஆங்கு ஒரு காதல் காட்ட**
**தண் தமிழ்த் தென்றல் என்னும் கோள் அராத் தவழும் சாரல்**
**விண் தலம் விளக்கும் செவ்வி வெண்மதி விரிந்தது அன்றே"**

*(அயோமுகிப் படலம்)*

இராமனின் பிரிவுத்துயரில் நாமும் பங்கு கொள்கிறோம் ! தென்றல் கூட இராமனின் உறங்கும் உணர்வுகளைத் தட்டி எழுப்பிய பாவத்தைச் செய்ததாகவே எண்ணுகிறோம்!

### *காளிதாசனின் தென்றல்*

இரகுவம்சத்தில் பிறந்த இரகு மன்னன் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையைத் தருபவன். தண்டனை மிக வண்மையாகவோ, மிக மென்மையாகவோ இல்லை. நீதி சார்ந்திருந்தது. அதனை மக்கள் மிகவும் போற்றினர். இதமான தென்றல் மக்களை இன்புறுத்துவது போல அதிகக் கடுமையோ மிகக் குறைவானதோ இல்லை அவனது கொற்றத்தில் நீதிமூலம் மக்களை அவன் கவர்ந்தான். மக்கள் அவனை மதித்தனர்.

### *பத்மகிரிநாதருக்கு தென்றல் விடு தூது*

பலப்பட்டடைச் சொக்கநாத பிள்ளை எனும் புலவரால் இயற்றப் பெற்ற இந்நூல் இவ்வகை நூல்களில் இணையற்றது. பத்மகிரி என்பது திண்டுக்கல்லின் திருநாமம். இத்திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அருள் மிகு பத்மகிரிநாதர் பவனி வரும்பொழுது அவரை வணங்கி அவர்பால் காதலாகி கவல்கிற தலைவி தென்றலைத் தூது விடுவதாக அமைக்கப்பட்டுள்ளது. தென்றல் மாறனுக்குத் தேர். மதனிடம் பல படைகள் உள்ளன. ஆனால் அவற்றில் எல்லாம் சிறந்தது தென்றலே, காரணம்'' அவனது யானை இருள், அது கதிரவனைக் கண்ட காலை ஒடி ஒளிந்துவிடும், அவனது குதிரை, கிளி, அது பூனையைக் கண்டால் பறந்தோடி விடும். அவன் சேனை பெண்கள்; அவர்கள் யானைப் படையாகிய இருளைக் கண்டால் தூங்கி விடுவார்கள்.

அவனது நாற்படைகளுள்ளே தென்றல் படையே சிறப்புடையது. அர்த்தரதம் முதலிய "மூன்று வகை இரதங்களையும் வென்ற மகாரதம், என்பதற்குரியது மாறனது தென்றல் இரதமே " எனக் கூறுகிறார்.

**இதோ அத்தேன் துளிகள் :-**

**"தோன்று படை யைந்துடையான் தூயபடை நாலுக்குள்**
**மூன்று படைக்கு முதற்படையே - ஆன்றமதன்**
**ஆணை பருதியைக் கண்டாலொளிக்கு மே குதிரை**
**பனையைக் கண்டாற் பறந்து போய்விடும் - சேனையெனும்**
**பெண்படை தானானைப் பெரும்படையைக் கண்ட வுடன்**
**கண்படை கொள்ளுமே கட்டுரையாய்!**

குமரகுருபர சுவாமிகள் இயற்றிய "மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில்" தென்னன் தமிழினுடன் தென்றல் பிறந்தது என்று பாடுவார்.

**"தென்னன் தமிழினுடன் பிறந்த சிறுகால்**
**அரும்பத் தீயரும்பும்"**

என்று கூறும் கவிநயம் மென்மையானது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்கை வருணனையில் ஓர் ஒப்பற்ற கவிஞர் இயற்கையின் எழிலார் செல்வங்களும், காட்சிகளும், குளிர் பனி இலைகளும், சருகுகளும், அவர் கவிதை அரங்கில் காலார நடப்பவை; புரட்சிச் சிந்தனைகளுக் கு இடையே இந்த மென்மை அவரது இதயத்தை தனதாக்கிக் கொள்ளத் தவறுவதில்லை; புரட்சிக் கவிஞர் தென்றலைப் பற்றிய பாடல்களிலிருந்து சில கருத்துக்கள்:-

தென்பொதிகைத் தருவது தென்றல், நடுங்கச் செய்யும் வாடைக் காற்றால் நலிவுறும் நாடுகள் பல, ஆனால் செந்தமிழ் நாட்டில் வாடைக் காற்று சில காலங்களிலும் தென்றல் காற்று சில காலங்களிலும் வீசுகிறது. இத்தென்றல் சாலை ஓர மனிதனைத் தொடும்; சாளரங்கள் விரிந்த வீட்டில் உள்ளவர்கள் மீதும் பரவும், அதனால்

**"தென்னாடு பெற்ற செல்வத்**
**தென்றலே உன் இன்பத்தைத்**
**தென்னாட்டுக் கல்லால் வேறே**
**எந்நாட்டில் தெரியச் செய்தாய்"**

மற்றொரு இனிய பாடல் :-

குளிரும் நறுமணமும் கொண்ட சந்தனக் காடுகள் நிறைந்த பொதிகை மலையிலே நுழைந்து தென்றல் குளிர்வடைகிறது. பின் பூக்காட்டின் இடைபுகுந்து மணம் பெறுகிறது. வண்டிசைப் பண்ணில் செவியின்பம் பெறுகிறது. இப்படி நாளும் வளர்கின்ற தென்றலின் வரவை வாழ்த்தாதார் யார் உளர்?

இதோ இனிய பாடல் :-

**''குளிர்நறும் சந்தம் சார்**
**பொதிகையில் குளித்தும் ஆங்கே**
**தளிர் நறுமலரின் ஊடே**
**மணத்தினை உண்டும், வண்டின்**
**கிளர்நறும் பண்ணில் நல்ல**
**கேள்வியை அடைந்தும், நாளும்**
**வளர்கின்றாய் தென்றலே உன்**
**வரவினை வாழ்த்தாதார் உண்டோ ?**

தென்றல் செய்யும் குறும்புகளில் சில :-

1. குழந்தையின் நெற்றியில் தொங்கும் முடியை அசைத்துவிட்டு அதன் உடலில் வழிந்தோடுகின்ற தென்றல் அந்தக் குழந்தை வைத்திருக்கும் கிலுகிலுப்பையை ஆட்டிவிட்டு போகிறது.

2. புலவர் எழுதிக் கொண்டிருக்கும் தாளைக் கிளப்புகிறது. சினக்கும் புலவருக்கு புழுதியைத் துடைத்தேன் என்ற புன்னகைக் கூறுவிட்டு போகிறதாம் இத்தென்றல் !

3. தும்பியின் கண்ணாடி போன்ற சிறகினை பின்னி படபடக்க வைக்கிறது பூவிதழ்களிலே நின்று கூத்தாடுகிறது ! தேனைச் சிந்துகிறது.

வெட் டவெளியல் சிறுவர்கள் விளையாட வைத்திருக்கும் பந்தை உருட்டி விளையாடுகிறது. கிளியின் சிறகு ஆகிய ஆடையின் ஊடே புகுந்து அதைக் கிழிக்கின்றது.

**''களிச்சிறு தும்பி பெற்ற**
**கண்ணாடிச் சிறகில் மின்னித்**
**துணிச்சிறு மலர் இதழ் மேல்**
**கூத்தாடித் துளிதேன் சிந்தி**
**வெளிச்சிறு பிள்ளையாடும்**
**பந்தோடு விளையாடிப் பின்**
**கிளிச்சிற காடை பற்றிக்**
**கிழிக்கின்றாய் தென்றலே நீ? ''**

நக்கீரத்தேவநாயனாரின் ''திருவீங்கோய் மலை எழுபது'' பாடல்களில் பல இயற்கைக் காட்சிகளை நம் மனத்திரையில் ஓட்டுவிக்கிறார் கவிஞர். சந்தனமும், நன்பலவும், கொன்றையும் கோங்கமுந்தேக்கும், வேங்கையும், வாழையும், மாவும், மூங்கிலும் எழில் கூட்டும் நெடிதுயர் மலைச் சாரலையும் தாமரை மலர்ந்த காமருசுனையினையும் கார்கொடி முல்லை மலர்ந்த கள்ளொழுகு முல்லைப் புறவத்தினையும், தீயென மலர்ந்த செழுங்காந்தள் பூக்களையும் தன்பாற் கொண்டு திகழும் ஈங்கோய்மலை இயற்கை வளம் கொண்டது. மலை நிலத்துக்கு உரிய யானை, பன்றி, ஆளி, கரி, மான், குரங்கு, மயில் ஆகிய விலங்குகளும் பறவைகளும் ஈங்கோய்மலையில் பொருந்தி வாழும் இயல்பினைக் கூறுகிறார் நக்கீரதேவநாயனார். சிவபெருமான் ஓங்காரமாய், பிரணவ உருவாய் விளங்குவதும், உயிர்கள் அனைத்திற்கும் தோன்றாத் துணையாய் நின்று துன்பம் தீர்க்கும் அருள் திறமும், அன்புசால் அடியார் வினைத் துன்பவெயிலில் காயாமல் காக்கும் சிறப்பும், உலகம் உய்ய வேதமும் கலைகளும் அருளிய சிறப்பும் கூறப்பட்டுள்ளன. திருவீங்கோய் மலையில் வாழும் மந்தி தன் குட்டிக்குத் தேனை விரலால் அளைந்து ஊட்டும் காட்சியும், இலையுதிர்ந்த இலவ மரத்தில் பூத்திருக்கும் செந்நிறப் பூக்கள் ஆண்குரங்கின் அறிவிற்கு மரம் பற்றியதாகப் படுகிறது. தீயை அணைக்க மூங்கில் தழையினை ஒடித்து புடைக்கிறது. பளிங்குப் பாறையில் படிந்து தோன்றும் பழத்தில் சாயலை உண்மையெனக் கருதி குரங்குகள் தம் கைவிரல் நகங்களால் வருந்த விரைந்து தோண்டி பார்ப்பனவாயின; செங்காந்தள் மலரில் அமரும் வண்டினைத் தீயில் முழுகியதாகக் கருதி குரங்கு ஒன்று கையை நெறிக்கிறது; வான்முகில் கண்டு தோகை விரித்தாடும் மயில். கொன்றை மரம் மலரைச் சொரிகிறது. அது கூத்தாடும் மயிலுக்கும் கொன்றை மலர் பரிசில் தரும் பாங்குபோல் உள்ளது. இளவேனிற் காலம்; பூத்து விளங்கும் மாம்பொழிவினிக் கிடையே தென்றல் வருகிறது. இத்தென்றல் பகலில் பலரும் காண முடியாமல் இரவில் நுழைவதால் இத்தென்றல் களவெழுக்க முடையதாக இருத்தல் வேண்டுமென ஆசிரியர் கருதுகிறார். அப்பாடல் :-

**''வளர்ந்த விளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை**
**அளைந்து வடுப்படுப்பான் வேண்டி - இளந்தென்றல்**
**எல்லப் புகநுழையும் ஈங்கோயே தீங்கரும்பு**
**வில்லிற்குக் கூற்றானான் வெற்பு.''**

இங்கு வளர்ந்த இளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை அளைந்து வடுப்படுப்பான் வேண்டி'' என்ற சொல்லாட்சி களவொழுக்கத்தில் இரவில் வந்தொழுகும் தலைவனுக்கும் இளவேனில் பருவத்தில் மாம்பொழிலினிடையே நுழையும் இளந்தென்றலுக்கும் பொருந்தும் வண்ணம் இருபொருள் தருவதாக அமைந்துள்ளது எண்ணி மகிழும் வண்ணம் அமைந்தது.

மேலே கூறிய உவமைகள் சில எடுத்துக் காட்டுகளே. ஒவ்வொரு கவிஞனும் கூறும் உவமைத் திறனை நாள்தோறும் நவில்தொறும் நூல் பல படித்து உணர்வதால் அறியலாம்.

...



# சரசுவதி மகால் நூலகத்திலுள்ள நிகண்டுகள் ஒரு பார்வை

திருமதி. **க. இராமதிலகம்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,

### *நிகண்டின் தோற்றம்:*

தொல்காப்பியத்துக்குப்பின் பல நூற்றாண்டுகள் கழித்து சமயத்தை பரப்புவதெற்கெனச் சமய இலக்கியங்கள் எழுந்தன. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற சமயங்கள் தம் செல்வாக்கை நிலைநாட்ட முயன்றன. அப்போது தமிழில் வடசொற்கள் கலந்தன. இச்சமயச் செய்திகளை அறியவும், வடசொற்பொருள்களைப் புரியவும் ஒப்பு நோக்கீட்டு நூல்கள் தேவைப்பட்டன. இதன்படி பிற்காலத்தில் அகராதிகள் தோன்றுவதற்கு நிகண்டுகள் வழிகோலின. கி.பி.8 ஆம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டுவரை 45 மொழி நிகண்டுகள் தோன்றியுள்ளன. இவற்றுள் நிகண்டு சுவடிகள் பதிப்பில் 23 நிகண்டுகள் மட்டும் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பெற்றுள்ளன. எஞ்சியவை பதிப்பிக்கப்பெறவில்லை.

### *நிகண்டு :*

நிகண்டு என்பது இலக்கணம் போன்றதொரு கருவி நூல் ஆகும். நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருள். உயர்திணை, அஃறிணை பற்றிய பல்வேறு பெயர்களையும் பாகுபாடு செய்து, அவற்றை தொகுத்துக் கூறுதலோடு, அச்சொற்கள் குறிக்கும் பொருள்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொது இயல்பு. எனவே மொழிப் பயிற்சிக்குக் கருவி நூலாய் அமைவது நிகண்டு ஆகும். நிகண்டு நூலினை உரிச்சொல் பனுவல் என்பது தமிழ் வழக்கு.

முதன் முதலில் நிகண்டு என்பது வடமொழியில் வேதத்திற்கு அங்கமாய், வைதிகச் சொற்களின் பொருள்களை உணர்த்தும் நூல்களுக்கு எல்லாம் இப்பெயர் வழங்கலாயிற்று.

திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி ஆகிய காலத்தால் முந்திய நிகண்டுகள் மூலபாட ஆய்வியல் அணுகு முறைகளில் அன்றி எங்ஙனம் பிழைமலியப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன என்பதைப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள்

அரும்பொருள் விளக்க நிகண்டுப் பதிப்பின் முன்னுரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

### *திவாகரம் :*

திவாகரர் இயற்றிய **'திவாகரம்'** சொற்பெயர்களைத் தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள்,செயற்கை வடிவம், பண்பு, செயல், ஒலி, ஒருசொல் பலபொருள், பலபொருள் கூட்டத்தொருசொல் என்பவனவற்றைத் தனித்தனியே பன்னிரு பகுதிகளில் பகுத்துக்காட்டும்.

திவாகரர் பாகுபடுத்தி அமைத்த அமைப்புமுறையை அடியொற்றியே பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, முதலிய பிற நூல்களும் அமைந்துள்ளன. சூடாமணி நிகண்டு முதலிய பிற நிகண்டுகளில் சில தொகுதிப் பெயர்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து வகைப்படுத்திய போதிலும் பொது அமைப்பில் திவாகரர் வகுத்த அமைப்பில் மாறுதல் இல்லை. 1835 இல் வெளிவந்த இதன் முதல் பதிப்பில் பத்து தொகுதிகளே பதிக்கப்பெற்றன.

### *பிங்கல நிகண்டு:*

திவாகரப் பாகுபாட்டை ஒட்டியே பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாதரம் முதலிய நிகண்டுகள் அமைந்துள்ளன. திவாகரத்தை அடுத்து பிங்கலரின் பிங்கலந்தை நிகண்டு வெளிவந்தது.

பிங்கல நிகண்டு திருநெல்வெலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புச் கழகம், சென்னை. முதற் பதிப்பு 1968. புத்தக எண் தமிழ் 5767 ஆகும்.

இந்நாளில் நிலைபெற்று நிற்பன சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலியனவாம். பிங்கல நிகண்டு என்பது பிங்கல முனிவர் என்னும் புலவரால் இயற்றப்பெற்றது. இவர் ஆதி திவாகரம் இயற்றிய திவாகர முனிவருடைய புதல்வர் என்பது சிலர் முடிவு. மற்றைய நிகண்டுகளிலும் இப்பிங்கல நிகண்டின் பொருள் அதிகமாகக் கூறப்படுதலின், இப்பிங்கல நிகண்டே, மற்றை நிகண்டுகளிலும் சிறந்ததாயிற்று. நன்னூல் முதலிய இலக்கண நூல்கள், இப்பிங்கல நிகண்டிற்குப் பிறகு தோன்றியவையே.

### கயாதரம் :

இராமேச்சுரத்தில் பிறந்த கயாதரர், கயாதரம் என்ற நிகண்டைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் இயற்றினார். இதில் 11 தொகுதிகள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இதில் 10500 சொற்கள் உள்ளன. இந்நிகண்டு நூலுள் பனுவல் எனும் சொல் பெருக வழங்காது நாளடைவில் மறைந்து போயிற்று. இதற்குப் பிரதியாக ''நிகண்டு'' எனும் வடமொழிப்பெயர், தமிழாகி, பெருகி, வழங்கி நிலைபெற்றுவிட்டது.

### சூடாமணி நிகண்டு :

மண்டலபுருடன் என்னும் சமணர், சூடாமணி நிகண்டைத்தொகுத்துள்ளார். அவை, விருத்தப்பாவில் உள்ளன. 11,000 சொற்கள் உள்ளன. இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தொகுத்த 17ஆம் பதிப்பாக 1957இல் வெளிவந்துள்ளது. புத்தக எண் T.1810. வித்தியானுபாலனையந்திர சாலை, சென்னையில் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது.

இதில் 1 முதல் 10 வரை தொகுதிகளாக கீழ்க்காணும் முறையில் தொகுக்கப்பெற்றுள்ளன.

1. தேவப்பெயர்த்தொகுதி
2. மக்கட்பெயர்த்தொகுதி
3. விலங்கின்பெயர்த்தொகுதி
4. மரப்பெயர்த்தொகுதி
5. இடப்பெயர்த்தொகுதி
6. பல்பொருட்பெயர்த்தொகுதி
7. செயற்கை வடிவப்பெயர்த்தொகுதி
8. பண்புபற்றிய பெயர்த்தொகுதி
9. செயல்பற்றிய பெயர்த்தொகுதி
10. ஒலிபற்றிய பெயர்த்தொகுதி

எனப் பத்து தொகுதிகளாக பகுக்கப்பட்டுள்ளன.

### வடமலை நிகண்டு :

இந்நூல் கி.பி.1700 இல் மடைசை சிதம்பர பாரதி மகன் ஈசுர பாரதி என்பவரால் இயற்றப்பெற்றது. டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். 1983இல்

முதல் பதிப்பு உ.வே.சா. நூல்நிலையம், சென்னை - 41. இந்நூல் மூன்று காண்டங்களைக்கொண்டுள்ளது.

1. ஒரு பெயர் ஒரு பொருள் காண்டம்
2. ஒரு பொருள் பல பெயர்க் காண்டம்
3. பல பெயர்க் கூட்டத்து ஒரு பெயர் காண்டம்

என அக்காண்டங்களின் பெயரை நூற்பாயிரம் உரைக்கின்றது. அகராதி நூல்களை ஆராய்ந்து திருத்திய பதிப்புகளை வெளிக்கொணர திரு. எஸ். வையாபுரிபிள்ளையவர்கள் தமது தமிழ் அகராதி முன்னுரையில் ''**பல்பொருள் சூளாமணி**'' எனும் நூலைப்பற்றிக் குறிப்பிடுகிறார். அமரகோசத்தைப் பின்பற்றி எழுதப்பெற்றது. மூன்றாம் காண்டம் கிடைக்கப்பெறவில்லை. முதலிரண்டு காண்டங்களும் ''அகராதி வரிசையில் உள்ளன'' எனக் கூறுகிறார்.

இரண்டாவது காண்டம் முற்றும் உள்ளது எனக் கண்டோம். 10 தொகுதிகளாகக் கீழ் வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

1. உயிர் வருக்கத்தொகுதி
2. ககர ,,
3. சகர ,,
4. ஞகர ,,
5. தகர ,,
6. நகர ,,
7. பகர ,,
8. மகர ,,
9. யகர ,,
10. வகர ,,

எனப் பத்து தொகுதிகள் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.

### அகராதி நிகண்டு :

இந்நூலைப் புலியூர்ச் சிதம்பர இரேவண சித்தர் இயற்றினார். அகரம் முதலான சொல்நிரல் அமைவதை இவரே முதலில் நிகண்டில் எழுத்தாண்டார். அகர வரிசையில் அமைந்த முதல் ஒப்பு நோக்கு நூல் இதுவே, தமிழ் அகராதி வரலாற்றில் இது தனியிடம் பெறும் சிறப்புடையது. அகரவரிசை அமைப்பை சுட்ட பயன்படுத்திய அகராதி என்ற பெயர் இன்று அகராதிக்குரிய நூற்பெயராகவே அமைந்துள்ளது.

டாக்டர் இரா. நாகசாமி அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. முதல் பதிப்பு 1983. உ.வே.சா. நூல்நிலைய வெளியீடு U.G.1087.

### *ஆசிரிய நிகண்டு :*

ஆண்டிப்புலவர் ஆசிரிய நிகண்டு எழுதினார். இவர்க்கு முன்னர்வந்த எல்லா நிகண்டுகளிலுமுள்ள சொற்களை இந்நிகண்டு கொண்டுள்ளது.

வீரமாமுனிவரின் சதுரகாதி நிகண்டுகள் தரும் சொற்பொருளை, அகராதி முறையில் தொகுத்து தந்துள்ளது. இவர் தமது நூலைப் பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்று நான்கு வகைப்படுத்தியுள்ளார். மற்றும் அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு, கயாதர நிகண்டு, கைலாச நிகண்டு, பிங்கல நிகண்டு என பல நிகண்டுகள் உள்ளன.

### *சமஸ்கிருத நிகண்டு :*

சமஸ்கிரு நிகண்டுகளில் முதன் முதலாய் நிற்பது அமரசிம்மர் எழுதிய நாமலிங்கானுசாசனம். சுருக்கமாய் இதை அமரகோசம் என்பர். பழமைவாய்ந்த நிகண்டுகள் வாஸஸ்பதியின் சப்தார்ணவம், விக்ரமாதித்தனின் ஸம்ஸாரவர்த்தம், ரத்ன கோசம், மாலா முதலியன.

ஆங்கில தொடர்பிற்குப் பிறகு, ஆராய்ச்சி செய்து தொகுக்கப்பட்ட பல நிகண்டுகள் ஏற்பட்டன. இவற்றுள் முக்கியமானவை வாசஸ்பத்தியம், சப்தகல்பதுருமம், ஜைனரின் அபிதான ராஜேந்திரம், சாஸ்திரங்களுக்கு உதவுமாறு தொகுக்கப்பெற்ற நியாய கோசம் முதலியன.

சோழநாட்டில் இரண்டாம் இராசராசசோழன் காலத்தில் அவ்வரசனால் ஆதரிக்கப்பட்ட கேசவசாமி என்பவர் எழுதிய நாநார்த்தார்வைஸ்க்ஷேபம். இது மிகவும் சிறப்பு வாய்ந்ததுமான நிகண்டாகும்.

13 ஆம் நூற்றாண்டு மேதினிகரர் எழுதியது மேதினி என்ற நாநார்த்த சப்தகோசம்.

14 ஆம் நூற்றாண்டு விஜயநகர சாம்ராஜ்யத்தில் இருந்தவர் எழுதிய நாநார்த்த ரத்தினமாலா, கதசிம்மனின் அனேகார்த்ததொனி மஞ்சரி. ராகவன் எழுதிய நாநார்த்த மஞ்சரி. 15 ஆம் நூற்றாண்டில் மஹீபனின் அனேகார்த்த திலகம்.

ஒரே சொல்லிற்கு இரு உருவங்கள் வரும். அவற்றை சப்தபேதம், ரூப பேதம்,

துவிரூபம் என்று சொல்வர். இப்படிப்பட்ட சொற்களைத் தொகுத்துள்ள நிகண்டுகளும் உள்ளன. அவைகளில் புருசோத்தமர் துவிரூப கோசம். மகேசுவரர் - சப்தபேதப் பிரகாசம். ஸ்ரீஹர்ஷர் துவிரூபகோசம் முதலியனவாகும்.

**'உணாதிகள்'** என்ற ஒருவகைச் சொற்றொடர்கள் பண்டைக்காலத்திலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. அவற்றிற்கான தனி உணாதிநிகண்டுகள் உண்டு (உ.ம்) மகாதேவன் - உணாதி நிகண்டு.

வினைச்சொற்களுக்கான கிரியா நிகண்டுகளும் வேற்றுமைவரா அவ்வியய சப்தங்களுக்கான நிகண்டுகளும் தொகுக்கப்பட்டன.

சமஸ்கிருத பிராகிருத கவிகளுக்குப் பழக்கப்பட்ட பிராகிருத தேசிய சொற்களுக்கு **''பையாலச்சி''** தேசிய நாம மாலா என்ற நிகண்டுகள் செய்யப்பட்டன. மொக்கலாளரின் **''அபிதான பதிபிகா''** பாலிமொழிக்கான நிகண்டு.

முகமதியர் காலத்தில் பாரசீக சப்தங்களுக்குச் சரியான சமஸ்கிருத சொற்களைக் கொடுத்த சமஸ்கிருத பாரசீக நிகண்டுகள் எழுதப்பட்டன. (உ.ம்) விஹார கிருஷ்ணதாசரின் பாரசிப்பிரகாசம், வேதாங்கராயரின் பாரசிப் பிரகாசம், ரகுநாதரின் ராஜவியவகார கோசம் முதலியனவாகும்.

வேதத்தில் வரும் சொற்களுக்குப் பிற்காலத்தில் எழுதப்பட்ட நிகண்டு முறையில் தஞ்சை மகாராஷ்டிர மன்னர் காலத்தில் பாஸ்கரராயர் ஒரு கோசம் எழுதினார். தமிழகத்திலும் தஞ்சையிலும் ஆந்திர நாட்டிலும் நிகண்டுத் துறையில் பிற்காலத்தில் பலர் பாடுபட்டனர்.

நிகண்டு நூல்களுக்கு அபிதானம், கோசம், நாமமாலை என்ற பெயர்களும் உண்டு. நிகண்டுத் துறையில் ஆக மொத்தம் அச்சிலும் சுவடியிலும் மேற்கோளிலுமாய்க் காணப்படும் நூல்கள் சுமார் எழுநூறு.

***நிருத்தம் :***

வேத சொற்களின் பொருளை ஆராயும் துறை நிருத்தம் எனப்படும். இந்த நிருத்தத்தின் ஒரு பகுதி நிகண்டு ஆகும். இப்போது நிலைத்திருக்கும் நிருத்தம் யாசுகர் என்பவரால் இயற்றப்பெற்றது. இது மூன்றுகாண்டங்களை உடையது.

1. **நைகண்டுகம்** - நிகண்டு என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர். பூமி, பொன், காற்று முதலிய பொதுப் பெயரின்கீழ் அவை தொடர்பான ஒரு பொருள் பல பெயர்களைத் தொகுத்துத் தரும்.

2. **நைகமம்** - நிகமம் என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர். ஒரு பெயர் பல பொருளைக்கூறும் பகுதியாகும்.

3. **தைவதம்** - தெய்வம் என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர். வைதிக தேவதைகள் பற்றி உரைக்கும் பகுதியாகும்.

சொல்லுக்குப் பொருள் கூறும் பொருட்டுப் பின்னர் எழுந்த தனி நூல்கள் **'நைகண்டுகம்'** என்பதன் மூலச்சொல்லாகிய **'நிகண்டு'** என்னும் பொதுப்பெயரால் வழங்கப்பட்டன. புராணம், பிரபந்தம் முதலிய பெயர்களைப் போல நிகண்டு என்னும் வடமொழிப்பெயர் தமிழ் உலகில் பெருக வழங்கி நிலைபெற்றுவிட்டது. நிகண்டு என்பதனை தமிழ்ச்சொல் எனக் கொள்வோரும் உளர்.

நிகண்டு என்னும் வழக்கு தமிழ்ப் பரப்பில் முதன்முதலில் இறையனார் அகப்பொருள் உரையில் இடுகுறியில் நூல்பெயர் பெறும் முறைக்கு காட்டுகள் குறிக்குமிடத்துதான் காணப்படுகிறது. இருப்பினும் நிகண்டு என்னும் வழக்கு சொற்பொருள் கூறும் நூலுக்கு முதன்முதல் அமைந்தது. மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு வழியாக என்று தெரிகின்றது.

### *நிகண்டுகளின் விவரப்பட்டியல்:*

| | | | |
|---|---|---|---|
| 1. | வடமலை நிகண்டு | .. | U.G.697 |
| 2. | ,, | .. | U.G.3088 |
| 3. | பிங்கலந்தை நிகண்டு | .. | T.5767 |
| 4. | ,, | .. | T.899 |
| 5. | ,, | .. | T.6296 |
| 6. | ,, | .. | T.2994 |
| 7. | ஆசிரிய நிகண்டு | .. | T.5115 |
| 8. | சூடாமணி நிகண்டு | .. | T.1810 |
| 9. | ,, | .. | T.7286 |
| 10. | அபிதான கோசம் | .. | T.6197 |
| 11. | ,, | .. | T.6764 |
| 12. | அகராதி நிகண்டு - டாக்டர் இரா. நாகசாமி | .. | U.G.3087 |
| 13. | பதினோராவது நிகண்டு உரையுடன் | .. | T.1174 |
| 14. | மண்டல புருடர் உரையுடன் | .. | T.1183 |
| 15. | அகராதி நிகண்டு | .. | T.6713 |
| 16. | நந்தீஸ்வரர் நிகண்டு | .. | T.1101 |

| | | | |
|---|---|---|---|
| 17. | சூடாமணி நிகண்டு | .. | T.6300 |
| 18. | ,, (ஆறுமுகநாவலர்) | .. | T.1465 |
| 19. | நாமதீப நிகண்டு | .. | T.8441 |

*சமஸ்கிருத நிகண்டுகளின் விவரப் பட்டியல் :*

| | | | |
|---|---|---|---|
| 1. | Ascaryacudamani - Saktibhadra | .. | S.311 |
| 2. | -do- -do- | .. | S.2608 |
| 3. | Niruktam Pt.I&II - Durgacharya | .. | S.2403 |
| 4. | -do- Vol.I Yaska | .. | S.2115 |
| 5. | Nighantu & Nirukta - Lakshman Sarup | .. | S.215 |
| 6. | Niruktam - Yaska | .. | S.2124-27 |
| 7. | ,, - Parameswarannanda | .. | S.3133 |
| 8. | ,, - Viswesvara | .. | S.3853 |
| 9. | ,, - Yaska | .. | S.3886 |
| 10. | ,, - Sivanarayana | .. | S.5985 |
| 11. | ,, - -do- | .. | S.6405 |
| 12. | Yaska's Nirukta & Nighantu | .. | S.6058 |
| 13. | ,, | .. | S.6059 |
| 14. | ,, | .. | S.6103, 6104 |
| 15. | Niurkta Samucchaya Acharya Vararuchi | .. | S.3669 |
| 16. | Nirukta Sammarsa - Vidyamarthanda | .. | S.3831 |
| 17. | Nirubta Basya - Chandramani Vidyalankar | .. | S.6562 |
| 18. | Bharathi Nurukti - Harisodhar | .. | S.6331 |
| 19. | Laghu Vidya Nighantu - Vyasa Kesavaram | .. | S.2970 |
| 20. | Nighantu Sammannaya - Yaska | .. | S.2128 - 29 |
| 21. | Hrdayadipaka Nighantu - Priyavrat Sharma | .. | S.6788 |
| 21. | Rktantram - Suyrakanta Sastri | .. | S.640 |
| 23. | Rktantram | .. | S.5895 |

...

॥ श्री ॥

# चतुर्विंशतिमूर्तिलक्षणम्

(नानाविधध्यानसहितम्)

# சதுர்விம்சதிமூர்த்தி லக்ஷணம்

(பல்வேறுவகை தியானங்களுடன்)

நியாய சிரோமணி

**ஆ. வீரராகவன்,** எம். ஏ., பி. எட்., பி. எல். ஐ. எஸ்.,

சம்ஸ்க்ருதப் பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

# विषयानुक्रमणिका

# பொருளடக்கம்


1. चतुर्विंशतिमूर्तिलक्षणम्
(சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம்) 1 - 4

2. चतुर्विंशतिमूर्तिलक्षणम्
(சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம்) 5

3. चतुर्विंशतिमूर्तिलक्षणम्
(சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம்) 6 - 29

4. अनुबन्धाः (பிற்சேர்க்கைகள்)

अ) केशवादि पञ्चाशन्मूर्तयः, शक्तयश्च
(கேசவன் முதலிய 50 மூர்த்திகளும்-சக்திகளும்) 30

आ) केशवादि द्वादशनामस्तोत्रम्
(கேசவன் முதலான பன்னிருநாம ஸ்தோத்திரம்) 31

इ) लक्ष्मीद्वादशनामस्तोत्रम्
(லக்ஷ்மீ பன்னிருநாம ஸ்தோத்திரம்) 32

ई) कृष्णादि नानाविधध्यानानि
(கிருஷ்ணன் முதலான பல்வேறு மூர்த்திகளின் தியானங்கள்) 33 - 79

उ) ध्यानरत्नावलिः
(தியானரத்னாவளி) 79 - 120

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரியபெரிய இலக்கியங்களையும் பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால் அவை மக்களுக்குப் பயன்படும்

மகாலுக்குக் கொடுப்பதன்மூலம் சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்கு தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
3 - 9 - 2002

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
மற்றும் இயக்குநர்,
*சரசுவதி மகால் நூலகம்*

# முன்னுரை

धवलनलिननिष्टं क्षीरगौरं कराब्जैः
जपवलयसरोजे पुस्तकं ज्ञानमुद्राम् ।
दधतममलवक्त्रं कल्पताराभिरामं
तुरगवदनविष्णुं नौमि देवारिजिष्णुम् ॥

**தவளநளினநிஷ்டம் க்ஷீரகௌரம் கராப்ஜை:**
**ஜபவலயஸரோஜே புஸ்தகம் ஞானமுத்ராம் ।**
**தததமமலவக்த்ரம் கல்பதாராபிராமம்**
**துரகவதனவிஷ்ணும் நௌமி தேவாரிஜிஷ்ணும் ॥**

ஆகமம் என்ற சொல்லுக்கு வேதம், இறைவனைப் பூஜிக்கும் முறையினை விளக்கும் சாஸ்த்ரம் எனப் பொருள் கொள்ளலாம். ஆகமசாஸ்த்ரம் இறைவனைப் பூஜிக்கும் முறைமட்டுமின்றி ஆலயக்கட்டுமானப்பணியினையும், மூர்த்திகளை வடிவமைக்கும் முறைகளையும் எடுத்தியம்புகின்றது.

ஆகமம் சைவம், வைணவம் என்று இருவகைப்படும். சைவாகமம் மொத்தம் 28 ஸம்ஹிதைகளைப்[1] பெற்றுள்ளது. வைணவத்தில் ஸ்ரீவைகானஸம், ஸ்ரீபாஞ்சராத்ரம் என்று ஆகமங்கள் இருவகைப்படுகின்றன. ஸ்ரீவைகானஸத்தில் ப்ருகு, மரீசி, அத்ரி, காச்யபம் என்ற நான்கு ஸம்ஹிதைகளும், ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் ஸாத்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம் போன்ற 108 ஸம்ஹிதைகளும் சிறப்புடையனவாகும்.

ஸ்ரீபாஞ்சராத்ரம் என்பது பஞ்சராத்ரிகளில் (ஐந்து இரவுகளில்) பகவானால் உபதேசிக்கப்பெற்றது. அந்த ஐந்து இரவுகளும் முறையே பிரம்மம், சிவம், இந்த்ரம், நாகம், ரிஷி என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மேற்கூறிய ஐந்து ராத்ரிகளில் (ராத்ரம் என்றால் அஹோராத்ரம் கங்குலும் பகலுமாக எனவும் பொருள் கூறப்படுகிறது) திருமாலின் ஐந்து ஆயுதாம்சமாகத் தோன்றிய சாண்டில்யர், ஔபகாயனர் மௌஞ்ச்யாயனர், கௌசிகர், பாரத்வாஜர் ஆகிய ஐவருக்கும் ஸ்ரீமந்நாராயணனாலே

---

1. சைவாகமம் கூறும் 28 ஸம்ஹிதைகள்

कामिकं योगजं चिन्त्यं कारणं त्वजितं तथा । दीप्तं सूक्ष्मं सहस्रं चांशुमान्सुप्रभेदकम् ॥
विजयं चैव निःश्वासं स्वायम्भुवमथानलम् । वीरञ्च रौरवञ्चैव मकुटं विमलं तथा ॥
चन्द्रज्ञानञ्च बिम्बञ्च प्रोद्भुतं ललितं तथा । सिद्धं सन्तानशर्वोक्तं पारमेश्वरमेव च ॥
किरणं वातुलञ्चैव अष्टाविंशतिसंहिताम् ॥

அருளப்பெற்றதால் இவ்வாகமத்திற்கு ஸ்ரீபாஞ்சராத்திர பகவத் சாஸ்த்ரம்[1] என்று பெயர். ஸ்ரீபாஞ்சராத்திரம் கூறும் ஸம்ஹிதைகளில் பெரும்பாலும் ஞானம், யோகம், க்ரியை, சர்யை ஆகிய நான்கு பாதங்கள் காணக்கிடைக்கின்றன. ஞானபாதம் பராபரதத்துவ ஞானத்தையும், யோகபாதம் மோக்ஷத்திற்கு ஹேதுவான யோகத்தினையும், க்ரியாபாதம் ஆலயம், சிற்பம் முதலியவற்றை அமைக்கும் முறைகளையும், சர்யாபாதம் பிரம்மோற்சவம் போன்ற திருவிழாக்களைக் குறித்தும் போதிக்கின்றது.

ஆலய அமைப்பினையும், பிம்ப வடிவு பற்றியும் போதிக்கும் பாத்ம ஸம்ஹிதையின் க்ரியாபாதத்திலும், கருடஸம்ஹிதையிலும் **சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம்** இடம்பெற்றுள்ளது. இந்தத் தலைப்பிலான செய்திகளைத் தாங்கி இதுகாறும் வெளிவராத நிலையில் நான்கு காகிதச் சுவடிகள் சரசுவதி மகால் நூலகத்தில் காணக்கிடைக்கின்றன. அவை இப்பதிப்பின் அடிப்படை என்பதால் அச்சுவடி நூல் தரும் செய்திகள் குறித்துச் சிறிது பார்ப்போம்.

### சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம்

சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம் என்ற தலைப்பிற்கேற்ப 24 மூர்த்திகளின் உருவ அமைப்புமுறை, அவரவர்க்குரிய ஆயுதங்கள், நிறங்கள், அணிகலன்கள் ஆகியன இச்சுவடி நூலில் கூறப்பட்டுள்ளன. கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், ஹ்ருஷிகேசன், பத்மனாபன், தாமோதரன், ஸங்கர்ஷணன், வாஸுதேவன், ப்ரத்யும்னன், அநிருத்தன், புருஷோத்தமன், அதோக்ஷஜன், ந்ருஸிம்மன், அச்யுதன், ஜனார்தனன், உபேந்த்ரன், ஹரி, க்ருஷ்ணன் ஆகியோர்களே அந்த இருபத்திநான்கு மூர்த்திகள். அவர்களுக்கு ஆயுதங்களாக சங்கு, சக்கரம், கதை, தாமரைகளையும், வலது கீழ்க்கை, வலது மேற்கை, இடது மேற்கை, இடது கீழ்க்கை என்றவாறு வலமாக ஆயுதங்களைப் பொருத்தும் முறையினையும்[2] மூர்த்திகளின் உடல் வண்ணத்தினையும், மஞ்சள் நிற உடையினையும், வனமாலை, கௌஸ்துபம் ஆகிய அணிகலன்களையும், ஸ்ரீவத்ஸம் என்ற மருவையும் ஸ்ரீபாஞ்சராத்ராகமத்தைச் சார்ந்த பாத்மகருட ஸம்ஹிதைகள் தெரிவிக்கின்றன.

---

1. प्रथमं ब्रह्मरात्रं तु द्वितीयं शिवरात्रकम् । तृतीयं इन्द्ररात्रं तु चतुर्थं नागरात्रकम् ।।
पञ्चमं ऋषिरात्रं तु पाञ्चरात्रमिति स्मृतम् ।। (भारद्वाजसंहिता - २. १२ - १३)
पञ्चायुधांशास्ते पञ्च शाण्डिल्यश्चौपगायनः । मौञ्ज्यायनः कौशिकश्च भारद्वाजश्च योगिनः ।।
पञ्चापि पृथगेकैकदिवारात्रं जगत्प्रभुः । अध्यापयामास यतस्तदेतन्मुनिपुङ्गवाः ।।
शास्त्रं स्वजनैर्लोके पाञ्चरात्रमितीयर्ते ।। (ईश्वरसंहिता - २१. ५१९ - ५३३)
லக்ஷ்மீதந்த்ரம் -முன்னுரை. அடையார் நூலக வெளியீடு, சென்னை.

2. दक्षाधः करमारभ्य बाहूनां गणना इति । (B. 256 / D. No. 15323)

கேசவாதி மாத்ருகா ந்யாஸத்திற்கும், சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணத்திற்கும் நிரம்ப வேறுபாடு உள்ளது[1]. இவர்களது ஆயுதங்களுள் சங்கத்தைக் கொண்டு இவ்விருபத்திநால்வரை ஆறு மூர்த்திகளுள்ளிட்ட நான்கு தொகுதியினராகப் பிரிக்கலாம். இவற்றுள் வலது மேற்கையில் சங்கம் பிடித்தவர்கள் முதற்தொகுதியினர் என்றும், இடது மேற்கையில் சங்கம் கொண்டவர்கள் இரண்டாம் தொகுதியினர் என்றும், இடது கீழ்க்கையில் சங்கம் உடையவர்கள் மூன்றாம் தொகுதியினர் என்றும், வலது கீழ்க்கையில் சங்கைத் தரித்தவர்கள் நான்காம் தொகுதியினர் என்றும் (4x6=24) அறியமுடிகிறது[2]. இந்த 24 மூர்த்திகளுக்கும் உதய ஆதித்தியனின் வண்ணமே உடல் நிறமாகும். இம்மூர்த்திகளுள் வாஸுதேவனுக்கு வெண்மை, பத்மநாபனுக்கு சிவப்பு, நாராயணனுக்கு மஞ்சள், ஜனார்தனனுக்கு கருப்பு நிறங்களும், ஏனைய 21 மூர்த்திகளுக்கும் அருணோதயம் போன்ற சிவப்பு நிறமும் உடல் நிறம் என்பது ஒரு சிலரின் கருத்து[3]. இவர்களைத் தேவியோடு நிறுவும் முறையினையும், வீடுபேற்றை விரும்பி நிறுவுவதாகில் தேவியின்றிய நிலையில் ஸ்தாபிப்பதையும் இச்சுவடி நூல் தெளிவாக விளக்குகின்றது. இம்மூர்த்திகளை நின்றவாறும், வீற்றிருக்கும் திருக்கோலத் திலும், கிடந்த நிலையிலும் ப்ரதிஷ்டை செய்யலாம். இவர்களைப் 'பிரதிஷ்டிப்பதால் ஆயுள் விருத்தி, அபரிமிதமான செல்வம், ஆரோக்யம் ஆகியன கிட்டும். மோக்ஷப் பயனும் உண்டென உணர்த்துகிறது இச்சாஸ்த்ரம்[4]. சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம் கூறும் நான்கு சுவடிகளுள் இரண்டு லக்ஷணத்தையும், இரண்டு வரைபடச் சுவடியாகவும் காட்சி தருகின்றன, அவ்விரண்டினுள் ஒன்று இருபத்திநான்கு மூர்த்திகளை லக்ஷணத்திற்கேற்றவாறு வண்ண ஓவியமாகத் தீட்டப்பெற்றமை குறிப்பிடத்தக்கது[5]. இருப்பினும், அவ்வண்ண ஓவியம் குறிப்பிடும் நாயகிகளின் பெயர்கள் எதனை

---

1. मातृकान्यासे -

केशवाद्याः इमे श्यामाश्चक्रशङ्खलसत्कराः । शक्तयस्तु प्रियाङ्केषु निषण्णाः सस्मिताननाः ।।
विद्युद्दाम समानाङ्ग्यः पङ्कजाभयबाहवः । (B. No. 6793 / D. No. 16195)

2. केशवो मधुसूदनस्सङ्कर्षणदामोदरौ । स वासुदेव प्रद्युम्नौ दक्षोच्च करशङ्खिनः ।।
विष्णुर्माधवानिरुद्धा पुरुषोत्तमधोक्षजाः । जनार्दनश्च वामोश्च करस्थितदरा मताः ।।
गोविन्दश्च त्रिविक्रमस्सश्रीधरोहृषीकेशौ । नृसिंह्माच्युतश्चैव वामाधः करशङ्खिनः ।।
वामनस्सनारायणः पद्मनाभ उपेन्द्रकः । हरिः कृष्णश्च दक्षाधः करशङ्ख धरो मताः ।।
(B. 256 / D. No. 15323)

3. वर्णविभागस्तु मूलरूपसवर्णका इति वचनात् मूलरूपस्य उदायदित्यवर्णत्वात् एतेषामपि मूर्तिनां उदायदित्य वर्णत्वमेवेति सिद्धान्तः । केचित् वासुदेवपद्मनाभनारायणजनार्दनानां शुक्लरक्तपीतसित-वर्णत्वम् । (B. 256 / D. No. 15323).

4. See text page No 2.

5. ஓவியங்களுக்குப் பக்க எண் 6 - 29ல் காண்க.

அடிப்படையாகக்கொண்டு எழுதப்பெற்றவை என்பதற்கு போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. இந்த கருட ஸம்ஹிதையின் சுலோகங்கள் முன்பே ஒருநூலில் குறிப்பிடப்பெற்றாலும், அந்நூலிலும் இச்சுவடி இதுவரை வெளியிடப்பெறவில்லை என்ற குறிப்புக் காணக்கிடைக்கிறது[1]. வண்ண ஓவியமும், மூர்த்திகளின் முழுமையான குறிப்புகளும் போன்ற சிறப்பான அம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்நூல் இன்னும் பற்பல மூர்த்திகளின் வடிவு பேசும் தியான சுலோகங்களைப் பிற்சேர்க்கையாகத் தாங்கியும் வெளிவருகின்றது.

**பதிப்புமுறை**

இந்நூலில் முன்னுரை, பொருளடக்கம், ஐந்து வகையான பிற்சேர்க்கைகள் (இந்நூலிற்குப் பயன்தரத்தக்க இணைப்புகள், பற்பல திருமூர்த்திகளின் தியான சுலோகங்கள்) ஆகியன அமைய தமிழ் ஒலிபெயர்ப்புடன், தமிழ் பொழிப்புரையும் கொடுத்துப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

**பயன்கள்**

இந்நூல் ஆகம ஆராய்ச்சியாளர்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும், ஆன்மீகத் துறையினருக்கும் பெருமளவில் பயன்படும்.

**நன்றியுரை**

சதுர்விம்சதிமூர்த்திலக்ஷணம் என்ற இந்த நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநருமான உயர்திரு. **சி. கோசலராமன்**, இ. ஆ. ப. அவர்களுக்கும், இந்நூலக நிருவாக அலுவலர் திரு. **சாமி. சிவஞானம்**, எம். ஏ., அவர்களுக்கும், இந்நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. **அ. பஞ்சநாதன்**, எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும், மெய்ப்புகள் திருத்த உதவிய மேனிலை சம்ஸ்கிருதப் பண்டிதர் திரு. என். ஸ்ரீநிவாசன் அவர்களுக்கும், நூலகர் II திரு. S. சுதர்ஷன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் ஒளி அச்சுக்கோப்பு-காப்பி பிரிண்டர் வழியில் செம்மையாகவும், அழகாகவும் அச்சிடப்பட்டுள்ளது. இப்பணியைச் சிறப்பாகச் செய்தளித்த திரு. R. சுப்ரமணியன் அவர்களுக்கும், திரு. க. பத்மநாபன் அவர்களுக்கும் மற்றும் இதற்குத் துணைநின்ற ஏனையோருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆ. வீரராகவன்,**
சம்ஸ்கிருத பண்டிதர்,
சரசுவதி மஹால் நூலகம்.

தஞ்சாவூர்
5 - 9 - 2002

---

1. Vaishnava Iconography. (Page No. 298). By Denial Smith. Chennai. 1969.

।। श्रीः ।।

# ।। चतुर्विंशतिमूर्तिलक्षणम् ।।

पाञ्चरात्रे पाद्मसंहितायां क्रियापादे -

चतुर्विंशतिमूर्तीनां लक्षणं कथ्यतेऽधुना ।
केशवश्चाम्बुजं शङ्खं चक्रं दण्डांश्च धारयेत् ।। १ ।।

प्रादक्षिण्येन बाहूनामन्येषां उच्यते क्रमात् ।
नारायणः शङ्खचक्रगदापद्मधरस्मृतः ।। २ ।।

माधवो गदया सार्धं चक्रशङ्खाम्बुजायुधाः ।
गोविन्दश्चक्रदण्डाब्जशङ्खायुधधरोभवेत् ।। ३ ।।

विष्णुर्गदाब्जशङ्खारिधरश्च मधुसूदनः ।
चक्रशङ्खाब्जदण्डास्त्रधरकायस्त्रिविक्रमः ।। ४ ।।

पद्मदण्डारिशङ्खास्त्रो वामनश्चाथ चक्रधृक् ।
गदाब्जदरपाणिश्च श्रीधरो धृतवारिजः ।। ५ ।।

सार्धं चक्रगदाशङ्खैर्हृषीकेशमतः श्रृणु ।
गदामूर्ध्वमुखीहस्ते मुख्ये चक्रं च धारयन् ।। ६ ।।

पद्मशङ्खधरश्श्रीमान् पद्मनाभमतः श्रृणु ।
शङ्खपद्मारिदण्डांश्च पद्मनाभःकरे धरेत् ।। ७ ।।

पद्मचक्राब्जदण्डास्त्रधरो दामोदरस्मृतः ।
अब्जशङ्खगदाचक्रधरा द्वादशमूर्तयः ।। ८ ।।

एवं कौमोदकीशङ्खचक्राम्बुजधरस्मृतः ।
वासुदेवो जगद्योनिः सङ्कर्षणमतः श्रृणु ।। ९ ।।

* NNB 12318/D.15324 Sarasvati Mahal Library, Thanjavur.

गदा शङ्खाब्जचक्राणि धारयम्श्च चतुर्भुजः ।
प्रद्युम्नश्चक्रशङ्खाभ्यां सहदण्डसरोजवान् ।। १० ।।

अनिरुद्धोरिदण्डाब्जपद्मपाणिश्चतुर्भुजः ।
चक्रपद्मधरःशङ्खदण्डवान् पुरुषोत्तमः ।। ११ ।।

अधोक्षजः पद्मदण्डचक्रशङ्खधरः स्मृतः ।
नृसिह्मो जलजगदाशङ्खचक्रधरो मतः ।। १२ ।।

अच्युतो दण्डपद्मारिशङ्खास्त्रश्च चतुर्भुजः ।
जनार्दनः पद्मचक्रशङ्खदण्डश्चतुर्भुजः ।। १३ ।।

उपेन्द्रः शङ्खदण्डारि पद्मायुध विभूषितः ।
शङ्खचक्राब्जदण्डोस्त्रो हरिस्यात्कमलासनः ।। १४ ।।

कृष्णः शङ्खगदापद्मचक्रपाणिश्चतुर्भुजः ।
दक्षिणं हस्तमारभ्य प्रादक्षिण्येन कारयेत् ।। १५ ।।

मूर्तिचिह्नानि शङ्खादीन्यायुधानि विचक्षणः ।
वासुदेव पद्मनाभो नारायणजनार्दनौ ।। १६ ।।

एतेषां वर्णभेदोऽस्ति न विशेषोऽस्ति चायुधे ।
पीताम्बरधराः सर्वे चतुर्विंशतिमूर्तयः ।। १७ ।।

श्रीवत्सकौस्तुभोरस्कवनमाला विभूषितः ।
भोगार्थिरितिचेन्मूर्तिस्ताः देवीभ्यां स्थापयेत्सह ।। १८ ।।

विना ताभ्यां मोक्षकामः स्थापयेयुर्यथाविधिः ।
आसनस्थानशयनयानादिषु यथारुचि ।। १९ ।।

आयुष्यवृद्धिमतुलं आरोग्यं लभते फलम् ।
इहाद्भुतस्तु तत्रस्थो मोक्षादि फलमश्नुते ।। २० ।।

गरुडसंहितायां --

शङ्खचक्रगदापद्मधरः केशवमुच्यते ।
नारायणः पद्मगदा चक्रशङ्खधरो मतः ।। १ ।।

माधवश्चक्रशङ्खाब्ज गदायुधकरः स्मृतः ।
गोविन्दस्तु गदा पद्मदरचक्रधरो मतः ।। २ ।।

विष्णुः राजीवशङ्खारि गदाधरकरः स्मृतः ।
दरपद्मगदाचक्रकरो हि मधुसूदनः ।। ३ ।।

कौमोदकी चक्रदरकञ्जधारी त्रिविक्रमः ।
अरिकौमोदकीकञ्जदरधारी तु वामनः ।। ४।।

श्रीधरोऽरिगदाशङ्खपङ्कजाङ्ककरो मतः ।
हृषीकेशोऽरिराजीवदरकौमोदकी धरः ।। ५ ।।

पद्मनाभः पद्मचक्रगदाशङ्खधरो मतः ।
दामोदरश्शङ्खगदा चक्रपद्मधरो मतः ।। ६ ।।

सङ्कर्षणश्शङ्खकञ्ज चक्रकौमोदकी धरः ।
वासुदेवः शङ्कचक्रकञ्जकौमोदकी धरः ।। ७ ।।

दरकौमोदकी कञ्जचक्री प्रद्युम्न उच्यते ।
अनिरुद्धो गदाशङ्खवनजारिकरो मतः ।। ८ ।।

पुरुषोत्तमःपद्मदरगदाचक्रधरः स्मृतः ।
अधोक्षजो गदा शङ्खचक्रकञ्ज धरः स्मृतः ।। ९ ।।

नारसिह्मः पद्मगदाशङ्खचक्रधरो मतः ।
अच्युतस्सरसीजातश्चक्रशङ्खगदाधरः ।। १० ।।

चक्रशङ्खगदापद्मधारी चिन्त्यो जनार्दनः ।
उपेन्द्रश्च गदाचक्रकञ्जशङ्खकरो मतः ॥ ११ ॥

अरिकञ्जगदाशङ्खः करो नश्शरणं हरिः ।
कृष्णो गदापद्मचक्रशङ्कांकः प्रियतां मम ॥ १२ ॥

சதுர்விம்சதி என்றால் இருபத்துநான்கு என்ற எண்ணிக்கையைக் குறிக்கும். சதுர்விம்சதி மூர்த்திகளான கேசவன் முதல் கிருஷ்ணன் ஈறாக மூர்த்திகளின் உருவங்கள் இச்சுவடியில் கண்கவர் வண்ண ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளன. ஸ்ரீபாஞ்சராத்திர ஆகமத்தைச் சார்ந்த இந்த இருபத்துநான்கு மூர்த்திகளின் வடிவங்களையும் மற்றும் பல மூர்த்திகளின் லக்ஷணங்களையும் சிறிது பார்ப்போம்.

---

* NNB - 14793 / D. 21753 Sarasvati Mahal Library, Thanjavur.

## चतुर्विंशतिमूर्तिलक्षणम् *

| | | |
|---|---|---|
| शं   च<br>केशवः<br>प   ग | प   ग<br>नारायणः<br>शं   च | च   शं<br>माधवः<br>ग   प |
| ग   प<br>गोविन्दः<br>च   शं | प   शं<br>विष्णुः<br>ग   च | शं   प<br>मधुसूदनः<br>च   ग |
| ग   च<br>त्रिविक्रमः<br>प   शं | च   ग<br>वामनः<br>शं   प | च   ग<br>श्रीधरः<br>प   शं |
| च   प<br>हृषीकेशः<br>ग   शं | प   च<br>पद्मनाभः<br>शं   ग | शं   ग<br>दामोदरः<br>प   च |
| शं   प<br>सङ्कर्षणः<br>ग   च | शं   च<br>वासुदेवः<br>ग   प | शं   ग<br>प्रद्युम्नः<br>च   प |
| ग   शं<br>अनिरुद्धः<br>च   प | प   शं<br>पुरुषोत्तमः<br>च   ग | ग   शं<br>अधोक्षजः<br>प   च |
| प   ग<br>नारसिह्मः<br>च   शं | प   च<br>अच्युतः<br>ग   शं | च   शं<br>जनार्दनः<br>प   ग |
| ग   च<br>उपेन्द्रः<br>शं   प | च   प<br>हरिः<br>शं   ग | ग   प<br>कृष्णः<br>श   च |

* NNB. 14899 / D. 15325 Sarasvati Mahal Library, Thanjavur.

|| श्रीः ||

மூர்த்தி - கேசவன்; நாச்சியார் - ஸ்ரீ:




पङ्कजं दक्षिणे यस्य पाञ्चजन्यं तथोपरि ।
वामोपरि यस्य चक्रं गदा चाधो व्यवस्थिता ।।
आदिमूर्तेस्तु भेदोऽयं केशवेति प्रकीर्त्यते ।।

பங்கஜம் தக்ஷிணே யஸ்ய பாஞ்சஜன்யம் ததோபரி ।
வாமோபரி யஸ்ய சக்ரம் கதா சாதோ வ்யவஸ்திதா ॥
ஆதிமூர்த்தேஸ்து பேதோऽயம் கேசவேதி ப்ரகீர்த்யதே ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 161)

பொருள்: யாருக்கு வலது கீழ்க்கையில் தாமரைமலரும், வலது மேற்கையில் சங்கும், இடது மேற்கையில் சக்கரமும், இடது கீழ்க்கையில் கதையும், காணப்படுகிறதோ அவருக்குக் **கேசவன்** என்பது பெயர். கேசவனை ஆதிமூர்த்தியின் வகையைச் சார்ந்தவர் என ஹயசீர்ஷ சம்ஹிதை தெரிவிக்கிறது.

மூர்த்தி - நாராயணன்; நாச்சியார் - லக்ஷ்மி:




**नारायणः पद्मगदाचक्रशङ्खधरो मतः ॥**

நாராயண: பத்மகதாசக்ரசங்கதரோ மத: ॥

**பொருள்** : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் தாமரைமலரும், இடது மேற்கையில் கதையும் (தண்டும்), இடது கீழ்க்கையில் சக்கரமும், வலது கீழ்க்கையில் சங்கும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **நாராயணன்** எனப்படுகிறார்.

विपरीतसादृश्यम्

**दक्षिणे तु करे चोर्ध्वे पद्मं मुकुलकं न्यसेत् ।**

**अस्याधरे तु चक्रं स्यात्कालाग्निसदृशप्रभम् ॥**

**वामोर्ध्वे तु गदा न्यस्य ह्यधो हस्ताम्बुजं न्यसेत् ॥**

(Visvaksena Samhita-Vaishnava Iconography P. No. 162 - 163)

மூர்த்தி - மாதவன்; நாச்சியார் - கமலா




सव्याधः पङ्कजं यस्य पाञ्चजन्यं तथोपरि ।
दक्षिणोर्ध्वे यस्य चक्रं गदाचाधो व्यवस्थिता ।।
आदिमूर्तेस्तु भेदोऽयं माधवेति प्रकीर्त्यते ।।

ஸவ்யாத: பங்கஜம் யஸ்ய பாஞ்சஜன்யம் ததோபரி ।
தக்ஷிணோர்த்வம் யஸ்ய சக்ரம் கதாசாதோ வ்யவஸ்தித:॥
ஆதிமூர்த்தேஸ்து பேதோऽயம் மாதவேதி ப்ரகீர்த்யதே ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 164)

பொருள் : யாருக்கு இடது கீழ்க்கையில் தாமரை மலரும், இடது மேற்கையில் சங்கும், வலது மேற்கையில் சக்கரமும், வலது கீழ்க்கையில் கதையும் காணப்படுகிறதோ அந்த ஆதிமூர்த்தியின வகையைச் சேர்ந்த இம்மூர்த்தி மாதவன் எனப்படுகிறார்.




दक्षिणाधः स्थितं चक्रं गदाचास्योपरिस्थिता ।
वामोर्ध्वं संस्थितं पद्मं शङ्खंचाधो व्यवस्थितम् ।।
सङ्कर्षणस्य भेदोऽयं गोविन्देति प्रकीर्त्यते ।।

தக்ஷிணாத: ஸ்திதம் சக்ரம் கதாசாஸ்யோபரிஸ்திதா ।
வாமோர்த்வம் ஸம்ஸ்திதம் பத்மம் சங்கம் சாதோ வ்யவஸ்திதம் ॥
ஸங்கர்ஷணஸ்ய பேதோऽயம் கோவிந்தேதி ப்ரகீர்த்யதே ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 165)

பொருள் : யாருடைய வலது கீழ்க்கையில் சக்கரமும், வலது மேற்கையில் கதையும், இடது மேற்கையில் தாமரை மலரும், இடது கீழ்க்கையில் சங்கமும் உள்ளதோ அந்த மூர்த்தி ஸங்கர்ஷணனுடைய வகையைச் சேர்ந்தவரென்றும், **கோவிந்தன்** எனவும் அழைக்கப்படுகிறார்.

## மூர்த்தி - விஷ்ணு: நாச்சியார் - பத்மினி



दक्षिणोपरि पद्मं तु गदा चाधो व्यवस्थिता ।
वामोर्ध्वे पाञ्चजन्यं च चक्रं चाधो व्यवस्थितम् ।।
सङ्कर्षणस्य भेदोऽयं विष्णुरित्यभिशब्द्यते ।।

தக்ஷிணோபரி பத்மம் து கதா சாதோ வ்யவஸ்திதா ।
வாமோர்த்வே பாஞ்சஜன்யம் ச சக்ரம் சாதோ வ்யவஸ்த்திதம் ॥
ஸங்கர்ஷணஸ்ய பேதோ஽யம் விஷ்ணுரித்யபிசப்த்யதே ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 166)

பொருள் : வலது மேற்கையில் பத்மமும், வலது கீழ்க்கையில் கதையும், இடது மேற்கையில் சங்கமும், இடது கீழ்க்கையில் சக்கரமும் பொருத்தப்பெற்ற இவர் ஸங்கர்ஷணனின் வகையைச் சார்ந்தவராயும் விஷ்ணு என்றும் அழைக்கப்படுகிறார்.

மூர்த்தி - **மதுசூதனன்;** நாச்சியார் - **கமலாலயா**




**दक्षिणोपरि शङ्खं तु चक्रं चाधः प्रदृश्यते ।**
**वामोपरि तथा पद्मं गदा चाधः प्रदृश्यते ।।**
**मधुसूदननामोऽयं भेदः सङ्कर्षणस्य तु ।।**

**தக்ஷிணோபரி சங்கம் து சக்ரம் சாத: ப்ரத்ருச்யதே ।**
**வாமேபரி ததா பத்மம் கதா சாத: ப்ரத்ருச்யதே ॥**
**மதுஸூதநநாமோsயம் பேத: ஸங்கர்ஷணஸ்ய து ॥**

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 168)

**பொருள்** : வலது மேற்கையில் சங்கமும், வலது கீழ்க்கையில் சக்கரமும், இடது மேற்கையில் பத்மமும், இடது கீழ்க்கையில் கதையும் கொண்டு யாரொருவர் அமைவரோ, அவர் **மதுசூதனன்** என்றும், ஸங்கர்ஷணனின் பிரிவைச் சார்ந்தவரென்றும் ஹயசீர்ஷ சம்ஹிதை தெரிவிக்கின்றது.

மூர்த்தி - த்ரிவிக்ரமன்; நாச்சியார் - ரமா




कौमोदकी चक्रधरकञ्जधारी त्रिविक्रमः ।

கௌமோதகீ சக்ரதர கஞ்ஜதாரீ த்ரிவிக்ரம: ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் கதையும், (தண்டும்), இடது மேற்கையில் சக்கரமும், இடது கீழ்க்கையில் சங்கும், வலது கீழ்க்கையில் தாமரை மலரும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **த்ரிவிக்ரமன்** எனப்படுகிறார்

மூர்த்தி - வாமனன்; நாச்சியார் - வ்ருஷாகபாயி




अरिकौमोदकी कञ्जदरधारी तु वामनः ।

அரிகௌமோதகீ கஞ்ஜதரதாரீ து வாமன:।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் சக்கரமும், இடது மேற்கையில் கதையும் (தண்டும்), இடது கீழ்க்கையிலே தாமரைமலரும், வலது கீழ்க்கையில் சங்கும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **வாமனன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - ஸ்ரீ தரன்; நாச்சியார் - தன்யா




ऊर्ध्वदक्षस्थितं चक्रं अधः पद्मं व्यवस्थितम् ।
वामोर्ध्वं कौमुदी यस्य पाञ्चजन्यमधः स्थितम् ।।

ஊர்த்வதக்ஷஸ்த்திதம் சக்ரம் அத: பத்மம் வ்யவஸ்த்திதம் ।
வாமோர்த்வம் கௌமுதீ யஸ்ய பாஞ்சஜன்யமத: ஸ்த்திதம் ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 170)

பொருள் : மேல் வலதுகையில் சக்கரமும். வலது கீழ்க்கையில் தாமரைமலரும். இடது மேற்கையில் கதையும். பாஞ்சஜன்யத்தைக் கீழ் இடக்கையிலும் கொண்டமைகின்ற மூர்த்தி ஸ்ரீதரன் எனப்படுகிறார்.

மூர்த்தி - ஹ்ருஷீகேசன்;     நாச்சியார் - புத்தி:




दक्षिणोर्ध्वं महाचक्रं कौमुदी तदधःस्थिता ।
वामोर्ध्वं नलिनं यस्य अधश्शङ्खं विराजते ।।
हृषीकेशेति स ज्ञेयः ............................................ ।।

தக்ஷிணோர்த்வம் மஹாசக்ரம் கௌமுதீ தததஃஸ்த்திதா ।
வாமோர்த்வம் நளினம் யஸ்ய அத:சங்கம் விராஜதே ॥
ஹ்ருஷீகேசேதி ஸ ஞேய: ———————————— ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 171)

பொருள் : வலமேற்கையில் பெருஞ்சக்கரமும், கௌமுதியை (கதையை)த் தன் கீழ்க்கையிலும், இடது மேற்கையில் நளினமும் (தாமரையும்), இடது கீழ்க்கையில் சங்கும் பெற்றுத் திகழ்பவர் ஹ்ருஷீகேசன் என்று அழைக்கப்படுகின்றார்.

மூர்த்தி - பத்மநாபன்; நாச்சியார் - யக்ஜ்ஞா



दक्षिणोर्ध्वं पुण्डरीकं पाञ्चजन्यमधस्तथा ।
वामोर्ध्वं संस्थितं चक्रं कौमुदी तदधःस्थिता ।।
पद्मनाभेति सा मूर्तिः स्थापिता मोक्षदायिनी ।।

தக்ஷிணோர்த்வம் புண்டரீகம் பாஞ்சஜன்யமதஸ்ததா ।
வாமோர்த்வம் ஸம்ஸ்த்திதம் சக்ரம் கௌமுதீ தததஃஸ்த்திதா ॥
பத்மநாபேதி ஸா மூர்த்தி: ஸ்த்தாபிதா மோக்ஷதாயினீ ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography)

பொருள் : வலது மேற்கையில் தாமரையினையும் வலது கீழ்க்கையில் பாஞ்சஜன்யத்தையும். இடது மேற்கையில் சக்கரம் பொருத்தப்பெற்றும். இடது கீழ்க்கையினை கதையைக் கொண்டும் விளங்குபவர் பத்மநாபன் ஆவார். அந்த மூர்த்தியை மோஷம் தரவல்லதாய் நிறுவப்பட்டுள்ளது.

மூர்த்தி - தாமோதரன்; நாச்சியார் - இந்திரா




दक्षिणोर्ध्वं पाञ्चजन्यमधस्तात्तु कुशेशयम् ।
सव्योर्ध्वं कौमुदी देवि हेतिराजमधःस्थितः ।।

தக்ஷிணோர்த்வம் பாஞ்சஜன்யம் அதஸ்தாத்து குசேசயம் ।
ஸவ்யோர்த்வம் கௌமுதீ தேவி ஹேதிராஜமதஸ்த்தித: ॥

(Hayasirsha Samhita-Vaishnava Iconography)

பொருள் : வலது மேற்கையில் பாஞ்சஜன்னியம், கீழ்க்கையில் தாமரைமலர். இடது மேற்கரத்தில் கதை. இடது கீழ்க்கரத்தில் சக்கரம் ஆகியவற்றுடன் விளங்குபவர் **தாமோதரன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - ஸங்கர்ஷணன்; நாச்சியார் - ஹிரண்யா




सङ्कर्षणः शङ्खकञ्जचक्रकौमोदकी धरः ।

**ஸங்கர்ஷண: சங்க்ககம்ஜ சக்ர கௌமோதகீ தர: ।**

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் சங்கும், இடது மேற்கையில் தாமரையும், இடது கீழ்க்கையில் சக்கரமும், வலது கீழ்க்கையில் கதையும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **ஸங்கர்ஷணன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - வாஸுதேவன்; நாச்சியார் - ஹரிணீ




**वासुदेवः शङ्खचक्रकञ्जकौमोदकी धरः ।**

**வாஸுதேவ: சங்க்கசக்ரகஞ்ஜகௌமோதகீ தர: ।**

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் சங்கும், இடது மேற்கையில் சக்கரமும், இடது கீழ்க்கையில் தாமரைமலரும், வலது கீழ்க்கையில் கதையும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **வாஸுதேவன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - பிரத்யும்னன்;    நாச்சியார் - ஸத்யா



दरकौमोदकीकञ्जचक्री प्रद्युम्न उच्यते ।

தரகௌமோதகீகஞ்ஜசக்ரீ ப்ரத்யும்ன உச்யதே ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் சங்கும், இடது மேற்கையில் கதையும், இடது கீழ்க்கையில் தாமரைமலரும், வலது கீழ்க்கையில் சக்கரமும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி பிரத்யும்னன் எனப்படுகிறார்.

மூர்த்தி - அநிருத்தன்; நாச்சியார் - நித்யா




अनिरुद्धो गदाशङ्खवनजारिकरो मतः ।।

அநிருத்தோ கதாசங்க்கவனஜாரிகரோ மத: ॥

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் கதையும், இடது மேற்கையில் சங்கும், இடது கீழ்க்கையில் தாமரையும், வலது கீழ்க்கையில் சக்கரமும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **அநிருத்தன்** எனப்படுகிறார்.

विपरीतसादृश्यम् -

दक्षिणोऽस्य गदा देया शङ्खचक्रे तु वामतः ।

दक्षिणे च तथा पद्ममनिरुद्धस्य दापयेत् ।।

(Hayasirsha Samhita-Vaishnava Iconography P. No. 121)

மூர்த்தி - **புருஷோத்தமன்;** நாச்சியார் - **ஆனந்தினி**



**पुरुषोत्तमः पद्मदरः गदा चक्रधरस्मृतः ।**

புருஷோத்தம: பத்மதர: கதா சக்ரதர: ஸ்ம்ருத: ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் தாமரையும், இடது மேற்கையில் சங்கும், இடது கீழ்க்கையில் கதையும், வலது கீழ்க்கையில் சக்கரமும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **புருஷோத்தமன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - அதோக்ஷஜன்;    நாச்சியார் - ஆக்ஞா




**अधोक्षजः गदाशङ्खचक्रकञ्जधरस्मृतः ।**

**அதோக்ஷஜ: கதாசங்க்கசக்ரகம்ஜதர: ஸ்ம்ருத: ।**

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் கதையும், இடது மேற்கையில் சங்கும், இடது கீழ்க்கையில் சக்கரமும், வலது கீழ்க்கையில் தாமரை மலரும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **அதோக்ஷஜன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - நாரஸிம்மன்; நாச்சியார் - சுகா



नारसिह्मः पद्मगदा शङ्खचक्रधरो मतः ।

நாரஸிஹ்ம: பத்மகதா சங்க்கசக்ரதரோ மத: ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் தாமரையும், இடது மேற்கையில் கதையும், இடது கீழ்க்கையில் சங்கும், வலது கீழ்கையில் சக்கரமும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி நாரஸிம்மன் எனப்படுகிறார்.

மூர்த்தி - அச்யுதன்; நாச்சியார் - சுகந்தா



अच्युतः सरसीजातश्चक्रशङ्खगदाधरः ।

அச்யுத: ஸரஸீஜாதச்சக்ரசங்க்ககதாதர: ।

(Garuda Saṃhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் தாமரைமலரும், இடது மேற்கையில் சக்கரமும், இடது கீழ்க்கையில் சங்கும், வலது கீழ்க்கையில் கதையும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **அச்யுதன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - ஜனார்தனன்;     நாச்சியார் - சுந்தரீ




**चक्रशङ्खगदापद्मधारी चिन्त्यो जनार्दनः ।**

சக்ரசங்க்ககதாபத்மதாரீ சிந்த்யோ ஜனார்தன : ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் சக்கரமும், இடது மேற்கையில் சங்கமும், இடது கீழ்க்கையில் கதையும், வலது கீழ்க்கையில் தாமரை மலரும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி ஜனார்தனன் எனப்படுகிறார்.

மூர்த்தி - உபேந்திரன்;    நாச்சியார் - வித்யா




उपेन्द्रश्च गदाचक्रकञ्जशङ्खकरो मतः।

உபேந்த்ரச்ச கதாசக்ரகம்ஜசங்க்ககரோ மத: ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் கதையும், இடது மேற்கையில் சக்கரமும், இடது கீழ்க்கையில் தாமரையும், வலது கீழ்க்கையில் சங்கும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **உபேந்திரன்** எனப்படுகிறார்.

மூர்த்தி - ஹரி: நாச்சியார் - சுசீலா




**अरिकञ्जगदाशङ्खःकरो नश्शरणं हरिः ।**

அரிகம்ஜகதாசங்க்க:கரோ ந: சரணம் ஹரி: ।

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் சக்கரமும், இடது மேற்கையில் தாமரையும், இடது கீழ்க்கையில் கதையும், வலது கீழ்க்கையில் சங்கும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி ஹரி எனப்படுகிறார்.

மூர்த்தி - க்ருஷ்ணன்; நாச்சியார் - தக்ஷிணா



**कृष्णो गदापद्मचक्रशङ्खाङ्कः प्रीयतां मम।**

**க்ருஷ்ணோ கதாபத்மசக்ரசங்காங்க: ப்ரீயதாம் மம।**

(Garuda Samhita)

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் கதையும் (தண்டும்), இடது மேற்கையில் தாமரையும், இடது கீழ்க்கையில் ஆழியும், வலது கீழ்க்கையில் சங்கும் காணப்படுகிறது. இவ்வாறமைந்த மூர்த்தி **க்ருஷ்ணன்** எனப்படுகிறார்.

## केशवादि पञ्चाशन्मूर्तयः शक्तयश्च *

केशवः कीर्तिसंयुक्तः कान्तिर्नारायणान्विता ।।

माधवस्तुष्टिसंयुक्तो गोविन्दः पुष्टिसंयुतः ।
विष्णुस्तु धृतिसंयुक्तः शान्तियुङ्मधुसूदनः ।।

त्रिविक्रमः क्रियायुक्तो वामनो दययान्वितः ।
श्रीधरो मेधया युक्तः हृषिकेशश्च हर्षया ।।

पद्मनाभयुता श्रद्धा लज्जा दामोदरान्विता ।
वासुदेवश्च लक्ष्मीयुक् सङ्कर्षणस्सरस्वती ।।

प्रद्युम्नः प्रीतिसंयुक्तः अनिरुद्धो रति संयुतः ।
चक्री जया गदी दुर्गा शाङ्र्गी तु प्रभयान्वितः ।।

खड्गी तु सत्ययायुक्तः शङ्खी चण्डा समन्वितः ।
हली वाणी समायुक्तो मुसली च विलासिनी ।।

शूली विजयया युक्तो पाशी विरजयान्वितः ।
अङ्कुशी विश्वयायुक्तो मुकुन्दो विनदायुतः ।।

नन्दजः सुनदायुक्तो नन्दी स्मृत्या समन्वितः ।
नरो ऋद्धी नरकजित् समृद्धी शुद्धियुग्घरिः ।।

कृष्णबुद्धी@ सत्यभुक्ती सात्वतो मतिसंयुतः ।
सौरिक्षमे शूररमे जनार्दन उमान्वितः ।।

भूधरः क्लेदिनी युक्तो विश्वमूर्तिश्च क्लिन्नया ।
वैकुण्ठो वसुदा युक्तो वसुधा पुरुषोत्तमौ ।।

* मन्त्रमहोदधौ - एकविंशतितमे तरङ्गे (पृ. सं. 197-A) गौतमीयतन्त्रे द्वितीयोऽध्याये - (पृ. सं. 4 & 5), शब्दकल्पद्रुमेऽपि ।

@ भक्तीति प्रपञ्चसारे ।

बली तु परयायुक्तो बलानुजः परायणा ।
बालसूक्ष्मे वृषघ्नस्तु सन्ध्यायुक् प्रज्ञया वृषः ।।

हंसः प्रभासमायुक्तो वराहो निशयान्वितः ।
विमलोऽमोघया युक्तो नृसिंहो विद्युता युतः ।।

अनुबन्धः २

ऊर्ध्वपुण्ड्रधारणे केशवादीनां स्थानानि *

कपाले विन्यसेद्धात्रा केशवं सुसमाहितः ।
नारायणं च जठरे अर्यम्णा संयुतं तथा ।।

हृदि माधवनामानं मित्रेणेह समन्वितम् ।
गोविन्दं गलकूपे च वरुणेन प्रविन्यसेत् ।।

विष्णुं च दक्षिणे पार्श्वे चांशुना सह विन्यसेत् ।
भुजान्ते दक्षिणे न्यसेद्भगेन मधुसूदनम् ।।

त्रिविक्रमं दक्षगले न्यस्येद्विवस्वता युतम् ।
दामोदरमुपेन्द्रेण वामपार्श्वे न्यसेत् सुधीः ।।

भुजान्ते वासुदेवं च पूष्णा सह विन्यसेत् ।
पद्मनाभं पृष्ठवंशे त्वष्ट्रा सह प्रविन्यसेत् ।।

ककुद्देशेऽनिरुद्धं तं विष्णुना सह विन्यसेत् ।
द्वादशाक्षरमनुचरं विन्यसेत् ब्रह्मरन्ध्रके ।।

वासुदेवो भवेत्साक्षाद् व्यापितस्तस्य तेजसा ।

* गौतमीयतन्त्रे - तृतीयोऽध्यायः (पृ. सं. 14)

## ऊर्ध्वपुण्ड्रधारणोपयोगि लक्ष्मीस्तोत्रम् *

अस्य श्रीलक्ष्मी द्वादशनामस्तोत्रमहामन्त्रस्य बृहस्पति ऋषिः, अनुष्टुप् छन्दः, श्रीमहालक्ष्मीर्देवता । सर्वाभीष्टसिध्यर्थे जपे विनियोगः ।

श्रीदेवी प्रथमं नाम द्वितीयममृतोद्भवा ।
तृतीयं कमला प्रोक्ता चतुर्थं लोकनायकी ।।

पञ्चमं विष्णुपत्नी च षष्ठं श्रीवैष्णवी तथा ।
सप्तमं तु वरारोहा अष्टमं हरिवल्लभा ।।

नवमं शार्ङ्गिणी प्रोक्ता दशमं देवदेविका ।
एकादशं महालक्ष्मीर्द्वादशं लोकसुन्दरी ।।

श्रीपद्माकमलामुकुन्दमहिषी लक्ष्मीस्त्रिलोकेश्वरी-
मा क्षीराब्धिसुता विरिञ्चिजननी विद्या सरोजातिगा ।
सर्वाभीष्टफलप्रदेति सततं नामानि ये द्वादश
प्रातः शुद्धतराः पठन्ति सततं सर्वान् लभन्ते शुभान् ।।

* 8734 (a) / D. 20316, Sarasvati Mahal Library, Thanjavur.

कृष्णध्यानम् --

ध्यायेद्दिव्यरथारूढं शङ्खचक्रगदाधरम् ।
पीताम्बरधरं देवं वनमालाविभूषितम् ।।

देवकीसुत गोविन्द देव देहि जगत्पते ।
देहि मे तनयं कृष्ण रक्ष मां पुरुषोत्तम।।

க்ருஷ்ண தியானம் --

த்யாயேத்திவ்யரதாரூடம் சங்கசக்ரகதாதரம் ।
பீதாம்பரதரம் தேவம் வனமாலாவிபூஷிதம் ॥

தேவகீஸுத கோவிந்த தேவ தேஹி ஜகத்பதே ।
தேஹி மே தனயம் க்ருஷ்ண ரக்ஷ மாம் புருஷோத்தம ॥

பொருள் : அழகியதான தேரினில் காட்சி நல்குபவரும் சங்கு, சக்கரம், கதை ஆகிய ஆயுதங்களுடன் மஞ்சள் பட்டாடை உடுத்தியவரும், வனமாலையைத் தன் அணிகலனாகப் பெற்றவரும், தேவகியின் மைந்தனுமான கிருஷ்ணமூர்த்தியே எனக்குக் குழந்தைப் பாக்கியத்தைக் கொடுத்து என்னையும் காப்பாயாக.

( xxth Catalogue 146, s. 273 / b. 6922)

सन्तानकृष्णध्यानम् --

पिबन्तं च स्तनं मातुर्मुखं संवीक्ष्य सुस्मितम् ।
अङ्गुल्यग्रे स्तनं चान्यं स्पृशन्तं च मुहुर्मुहुः ।।
यशोदाङ्गस्थितं गोपं ध्यायेत्पुत्रप्रदं सदा ।।

(श्रीतत्वनिधौ)

ஸந்தாநக்ருஷ்ண த்யானம்

பிபந்தம் ச ஸ்தனம் மாதுர்முகம் ஸம்வீக்ஷ்ய ஸுஸ்மிதம் ।
அங்குல்யக்ரே ஸ்தனம் சான்யம் ஸ்ப்ருசந்தம் ச முஹுர்முஹு: ॥
யசோதாங்கஸ்திதம் கோபம் த்யாயேத்புத்ரப்ரதம் ஸதா ॥

(ஸ்ரீதத்வநிதௌ)

பொருள் : யசோதையின் இடுப்பில் வீற்றிருப்பவனாய் ஒரு நகிலை வாயினில் வைத்து பால் அருந்தியவாறே மற்றொன்றினைக் கையினால் அடிக்கடித் தொட்டுக்கொண்டிருப்பவரான கோபாலனை எப்போதும் தியானிக்கவேண்டும்.

ग्रा. सा - किञ्चित्कुञ्चित लोचनस्य पिबतः पर्यायपीतस्तनं
सद्यः प्रस्नुतदुग्धबिन्दुमपरं हस्तेन सम्मार्जतः ।
मात्रैकाङ्गुलिलालितस्य चुबुके स्मेराननस्याधरे
शौरेः क्षीणकणान्विता निपतिता दन्तद्युतिः पातु नः ।।

(श्रीकृष्णकर्णामृते - 2 : 62)

ஒப்புமை : இருமலைபோல் எதிர்ந்தமல்லர் இருவரங்கமெரிசெய்தாய் உன்
திருமலிந்து திகழ்மார்பு தேக்கவந்தென்னல்குலேறி
ஒருமுலையை வாய்மடுத்து ஒருமுலை நெருடிக்கொண்டு
இருமுலையும் முறைமுறையாய் ஏங்கி ஏங்கி இருந்துணாயே.

(பெரியாழ்வார் திருமொழி 2-2-8)

**भक्तजीवध्यानम् - (कृष्णमङ्गलक्षेत्रे)**

भक्ताभीष्टफलप्रदाङ्घ्रियुगलं कौशेयवस्त्रान्वितं
लक्ष्मीनाथ उरस्थितः प्रविलसद्रत्नावली कौस्तुभम् ।
हस्ते शङ्खरथाङ्गपङ्कजगदाः बिभ्राणमप्राकृतं
राका चन्द्रमहं सुजातमकुटं श्रीभक्तजीवं भजे ।।

**பக்தராவித்யானம் (திருக்கண்ணமங்கை)**

பக்தாபீஷ்டபலப்ரதாங்க்ரியுகளம் கௌசேயவஸ்த்ரான்விதம்
லக்ஷ்மீநாத: உரஸ்தித: ப்ரவிலஸத்ரத்நாவளீ கொஸ்துபம் ।
ஹஸ்தே சங்கரதாங்கபங்கஜகதா: பிப்ராணமப்ராக்ருதம்
ராகா சந்த்ரமஹம் ஸுஜாதமகுடம் ஸ்ரீபக்தஜீவம் பஜே ॥

(லக்ஷ்மீபுரமாஹாத்ம்யம் - ப. எண். 74)

பொருள் : பக்தர்கள் வேண்டியவற்றையெல்லாம் அளிக்கக்கூடிய திருவடியினை உடையவரும், பட்டாடை அணிந்தவரும், இலக்குமிபிராட்டியை மார்பகத்திருத்தியவரும், ஸ்ரீவத்ஸகௌஸ்துபம், ரத்தினமாலை ஆகியவற்றால் ஜ்வலிக்கின்றவரும், கைகளில் சங்கு, சக்கரம், தாமரைமலர், கதை முதலான ஆயுதங்களைத் தரித்தும், தலையில் கிரீடம் அணிந்தும் முழு நிலவுபோல் ஒளிர்பவருமான ஸ்ரீபத்தராவியை (நான்) வணங்குகின்றேன்.

शयनकृष्णध्यानम् –

यद्वा शयीत नृपवत्पर्यङ्के शोभिते भृशम् ।
भोगीन्द्रशयने वापि महापर्यङ्कमण्डिते ।।

पृष्ठतो मौलिपार्श्वे तु रुक्मिणीं कारयेत्सुधीः ।
सत्यभामा भवेत्पादसंवाहनसमुद्यता ।।

(पाद्मे - क्रिया - xvii. 9, 10)

சயநக்ருஷ்ணத்யானம் --

யத்வா சயீத ந்ருபவத்பர்யங்கே சோபிதே ப்ருசம் ।
போகீந்த்ரசயநே வாபி மஹாபர்யங்கமண்டிதே ॥

ப்ருஷ்டதோ மௌலிபார்ச்வே து ருக்மிணீம் காரயேத்ஸுதீ: ।
ஸத்யபாமா பவேத்பாதஸம்வாஹந ஸமுத்யதா ॥

பொருள் : சயனகிருஷ்ணமூர்த்தியை அரசர்போல் கட்டிலின் மேலும், பாம்பணையிலும் உறங்குமாறு அமைக்கலாம். அவருக்குப் பின்புறம் தலைப்பகுதியில் ருக்மிணியையும், காற்பகுதியில் எம்பெருமானின் திருவடிகளைத் தாங்க முற்பட்டவளாய் சத்யபாமையையும் நிறுவவேண்டும்.

आसीनकृष्णध्यानम् –

आसीनं वा सुखं सार्धं देवीभ्यां सह विष्टरे ।
वामहस्तेन वरदं दक्षिणेनाभयप्रदम् ।।

(पाद्मे - क्रिया - xviii. 8)

ஆஸீநக்ருஷ்ணத்யாநம் -

ஆஸீநம் வா ஸுகம் ஸார்தம் தேவீப்யாம் ஸஹ விஷ்டரே ।
வாமஹஸ்தேந வரதம் தக்ஷிணேநாபயப்ரதம் ॥

பொருள் : இம்மூர்த்தியை உபய நாச்சிமார்களான ருக்மிணி ஸத்யபாமையுடன் ஏகாஸனத்தில் வீற்றிருப்பவராக வரதமுத்திரையோடு கூடிய இடதுகையுடனும், அபயம் தரும் முத்திரையுடனான வலது கையுடனும் அமைக்கவேண்டும்.

उलूकलबद्धकृष्णध्यानम् --

कदाचिदौद्धत्यमनन्तवीर्ये
हरौ विलोक्याप्रतिमं यशोदा ।
बबन्ध दाम्ना तमशेषबन्धुं
उलूकले बालविलासलोलम् ।।

नारदमुनिवरशापात्
यमलार्जुनौ वृक्षभावमापन्नौ ।
यक्षसुतौ सुविचित्रं
दाम्ना बद्धोऽप्यमोचयत्बन्धात् ।।

(कृष्णलीलातरङ्गिण्यां - द्वितीयस्तरङ्गः)

உலூகல-பத்த-க்ருஷ்ண-த்யாநம் -

கதாசிதௌத்தத்யமனந்தவீர்யே
ஹரௌ விலோக்யாப்ரதிமம் யசோதா ।
பபந்த தாம்நா தமசேஷபந்தும்
உலூகலே பாலவிலாஸலோலம் ॥

நாரதமுநிவரசாபாத்
யமளார்ஜுநௌ வ்ருக்ஷபாவமாபன்நௌ .
யக்ஷஸுதௌ ஸுவிசித்ரம்
தாம்நா பத்தோऽப்யமோசயத்பந்தாத் ॥

உரலில் கட்டப்பெற்ற கிருஷ்ணன்

பொருள் : இந்த பகவானிடத்தில் அளத்தற்கரிய பராக்ரமத்தினையும், ஒருசமயம் குறும்புத்தனத்தையும் கண்ட அசோதை பாலலீலை புரிந்த கிருஷ்ணனை கண்ணிநுண் சிறுத்தாம்பினால் உரலிலே கட்டுண்ணப்பண்ணினாள். அந்த பாலகிருஷ்ணன் நாரதமுனிவரின் சாபவசத்தால் நளகூபரமணிக்ரீவர்களாகிய யக்ஷ புதல்வர்கள் இருவரும் இரண்டு மருத மரங்களாக உருவெடுக்க அதனிடையே தான் உரலுடன் கட்டியபோதும் தவழ்ந்து சென்று சாபக்கட்டிலிருந்து அவர்களை விடுவித்தான்.

कालीयनर्तनकृष्णध्यानम् --

वामपादेन गृह्णन्तं पुच्छं वामेन पाणिना ।
दक्षिणाभयदं हस्तं नृत्यन्तं कारयेद्बुधः ।। (पाद्मे - क्रिया - xviii. 26)

காளீய-நர்த்தன-க்ருஷ்ண-த்யானம்

வாமபாதேன க்ருஹ்ணந்தம் புச்சம் வாமேன பாணினா ।
தக்ஷிணாபயதம் ஹஸ்தம் ந்ருத்யந்தம் காரயேத்புத: ॥

பொருள் : படங்கொண்ட பாம்பின் தலையில் இடது காலை ஊன்றி நிற்பவராய் இடது கையால் பாம்பின் வாலைப் பிடித்துக்கொண்டும், அபயமுத்திரையோடு கூடிய வலக்கையை உடையவருமாக இந்த காளிங்கநர்த்தன கிருஷ்ணனை அமைக்க வேண்டும்.

वेणुगानकृष्णध्यानम् –

ईषत्कुञ्चितवामाङ्घ्रि इतरेण रुजुस्थितम् ।
गच्छन्तमपि गायन्तं वंशेन परमाद्भुतम् ।।

(पाद्मे - क्रियापादे - 18 : 8)

वीणावादनतत्त्वज्ञं गानमोहित मन्मथम् ।
पार्श्वे विचिन्तयेद्देवीं राधिकां परदेवताम् ।।

(बृहद्धर्मे - ii - 6 : 19)

வேணுகான-க்ருஷ்ண-த்யானம்

ஈஷத்குஞ்சிதவாமாங்க்ரிம் இதரேண ருஜுஸ்திதம் ।
கச்சந்தமபி காயந்தம் வம்சேன பரமாத்புதம் ॥

வீணாவாதநதத்த்வஜ்ஞம் கானமோஹித மன்மதம் ।
பார்ச்வே விசிந்தயேத்தேவீம் ராதிகாம் பரதேவதாம் ॥

பொருள் : சிறிதே வளைந்த இடது காலையும், நேராக வைத்துக்கொண்டுள்ள வலது காலையும் பெற்று புல்லாங்குழலில் அற்புதமான இன்னிசையை இசைப்பவருமான இந்த வேணுகான கிருஷ்ணனை அருகில் பரதேவதையான ராதிகா தேவியுடன் அமைத்திடல் வேண்டும்.

जगन्मोहनकृष्णध्यानम् –

ईविन्यस्यैकं भुविभुवनभृत् पादमेकं च हस्तं-
मात्राजानुप्रणिहितमतस्वादुहय्यङ्गवीनम् ।
हस्ते गृह्णन् सकलजगतां सारभोक्ताहमात्मे-
त्याचक्षाणे विहरति जगन्मोहनो नन्दसूनुः ।।

(कृष्णलीलातरङ्गिण्यां - द्वितीयस्कंन्दे)

ஜகந்மோஹந-க்ருஷ்ண-த்யானம்

விந்யஸ்யைகம் புவிபுவனப்ருத் பாதமேகம் ச ஹஸ்தம்-
மாத்ராஜாநுப்ரணிஹிதமதஸ்வாதுஹய்யங்கவீனம் .
ஹஸ்தே க்ருஹ்ணன் ஸகலஜகதாம் ஸாரபோக்தாஹமாத்மே-
த்யாசக்ஷாணோ விஹரதி ஜகந்மோஹனோ நந்தஸூநு: ॥

பொருள் : ஒரு (வலது) காலையும் ஒரு (இடது) கையையும் (இடது) முழங்காலையும், மற்றொரு (வலது) கையில் நறுவெண்ணெய்யுடன் அனைத்துலக ஸாரத்தையும் விழுங்குபவன் (அனைத்துக்கும் அதிபதி) நான் என்று கூறிக்கொண்டு நந்தன் மதலையான ஜகன்மோகனகிருஷ்ணன் விளையாடுகிறான்.

## राजगोपालध्यानम् - १

बिभ्रद्दक्षिणपाणिना बहुविधैः पुष्पैःकृतं दण्डकं
भूम्युत्तम्भित हेमयष्टिशिरसि न्यस्तान्यहस्ताम्बुजः ।
नानारत्नविराजमानमकुटो दिव्याङ्गरागोज्वलः-
पायान्मां सह भीष्मकस्य सुतया श्रीराजगोपालकः ।।

ராஜகோபால-த்யானம் - 1

பிப்ரத்தக்ஷிணபாணினா பஹுவிதை: புஷ்பை: க்ருதம் தண்டகம்
பூம்யுத்தம்பித ஹேமயஷ்டிசிரஸி ந்யஸ்தான்ய ஹஸ்தாம்புஜ: ।
நாநாரத்னவிராஜமாநமகுடோ திவ்யாங்கராகோஜ்வல:
பாயான்மாம் ஸஹ பீஷ்மகஸ்ய ஸுதயா ஸ்ரீராஜகோபாலக: ॥

பொருள் : பல்வேறுவகைப் புஷ்பங்களாலான மலர்க்கோலை வலது கையினில் பெற்றவரும், பூமியில் உயர்தலையாய் நிறுத்தப்பட்ட பொற்கோலின் தலைமீது இடது கரத்தை வைத்துள்ளவரும், பல்வகை இரத்தினக் கற்களாலான கிரீடத்தை அணிந்தவரும், திவ்யமான தனது மேனியின் ஒளியால் மிளிர்பவரும், பீஷ்மகனின் மகளான ருக்மிணீயுடன் காட்சிதருபவருமான ஸ்ரீராஜகோபாலன் என்னைக் காக்கட்டும்.

## राजगोपालध्यानम् - २

श्यामाभां रक्तचेलं त्रिनतमभिनवं बर्हिबर्हावचूडं
भामा रुक्मिण्यधीशं विहरणरसिकं श्रावणे रोहिणीजम् ।

यष्टिं पाणाववामे दधतमितरदोः कूर्परे सत्यभामा-

मालम्बयासीनमीडे ग्रथिकचभरं कृष्णमत्यन्तरम्यम् ।।

(ध्यानमुक्तावली श्लो - 6 : 51)

ராஜகோபால-த்யானம் - 2

ச்யாமாபாம் ரக்தசேலம் த்ரிநதமபிநவம் பர்ஹிபர்ஹாவசூடம்
பாமா ருக்மிண்யதீசம் விஹரணரஸிகம் ச்ராவணேரோஹிணீஜம் ।
யஷ்டிம் பாணாவவாமே தததமிதரதோ: கூர்பரே ஸத்யபாமா-
மாலம்பயாஸீனமீடே க்ரதிகசபரம் க்ருஷ்ணமத்யந்தரம்யம் ॥

பொருள் : கருமை நிறத்துடன் விளங்குபவரும், சிவந்த ஆடையை உடுத்தியவரும், த்ரிபங்கியோடு புதுமையாய்க் காட்சி தருபவரும், மயிற்தோகையைத் தன் திருமுடியின் மேற்கட்டாய் அணிந்தவரும், ருக்மிணி சத்யபாமையின் அதிபதியாய் அவர்களின் நடுவே விளங்குகின்றவரும், லீலா ரசிகரும், சிராவண (ஆவணி) மாதத்தின் உரோஹிணி நாளில் அவதரித்தவரும், தன் வலது கையில் லீலா வினோதக் கோலைப் பெற்றவரும், இடது கையின் முட்டியினை சத்யபாமையின் தோள்மீது வைத்துள்ளவரும், முடிக்கொண்டையுடன் அழகாகக் காட்சிதரும் கிருஷ்ணமூர்த்தியை வணங்குகின்றேன்.

राजगोपालध्यानम् - ३

लीलायष्टिं करकिसलये दक्षिणे न्यस्य धन्यां

अंसे देव्या पुलकरुचिरे सन्निविष्टान्यबाहुः ।

मेघश्यामो जयति ललितो मेखला दत्तवेणुः

गुञ्जापीडस्फुरितचिकुरो गोपकन्या भुजङ्गः ।।

(गोपालविंशतौ वेदान्तदेशिकः)

ராஜகோபால-த்யானம் - 3

லீலாயஷ்டிம் கரகிஸலயே தக்ஷிணே ந்யஸ்ய தந்யாம்
அம்ஸே தேவ்யா புளகருசிரே ஸன்னிவிஷ்டான்யபாஹு: ।
மேகச்யாமோ ஜயதி லலிதோ மேகலா தத்தவேணு:
குஞ்ஜாபீடஸ்ப்புரிதசிகுரோ கோபகந்யா புஜங்க: ॥

பொருள் : தன்னுடைய வலது கரத்தில் லீலாயஷ்டியை உடையவரும், இடது கரத்தினை தேவியின் (நீளா தேவியின்) தோளில் பொருத்தியவரும், இடுப்பு ஒட்டியாணத்தில் புல்லாங்குழலைச் சொருகிவைத்துள்ளவரும், கூந்தலில் கட்டப்பட்ட குந்துமணி மாலையுடன் விளங்குபவரும், நீருண்ட மேகம்போல் நீலநிறமாய்க் காட்சி தருபவருமான ராஜகோபாலனைத் தியானிக்கவேண்டும்.

ஒப்புமை :

சுரிகையும் தெரிவில்லும் செண்டுகோலும்
மேலாடையும் தோழன் மார்கொண்டோட
ஒருகையால் ஒருவன் தன் தோளையூன்றி
ஆநிரையினம் மீளக்குறித்த சங்கம்
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன்
மஞ்சளும் மேனியும் வடிவுங்கண்டாள்
அருகேநின்றாள் என்பெண்நோக்கிக் கண்டாள்
அழகுகண்டு என்மகள் அயர்க்கின்றதே.

(பெரியாழ்வார் திருமொழி)

**राजगोपालध्यानम् - ४**

तिष्ठन्तं रुक्मिणीसत्यभामाभ्यां सहितं प्रभुम् ।
ईषत्कुञ्चितवामाङ्घ्रि सुस्थितेतरमद्भुतम् ।।

मेघश्यामं विशालाक्षं पीतवस्त्रं चतुर्भुजम् ।
देवी सव्यभुजं न्यस्तवामहस्तसरोरुहम् ।।

रुक्मिणीं दक्षिणे पार्श्वे सत्यभामा तथोत्तरे ।
विनतानन्दनं वापि भागे दिव्ये प्रकल्पयेत् ।।

(पाद्मे - क्रिया - viii - 2, 3, 7 & xviii - 8)

ராஜகோபால-த்யானம் - 4

திஷ்டந்தம் ருக்மிணீ ஸத்யபாமாப்யாம் ஸஹிதம் ப்ரபும் ।
ஈஷத்குஞ்சித வாமாங்க்ரிம் ஸுஸ்திதேதரமத்புதம் ॥

மேகச்யாமம் விசாலாக்ஷம் பீதவஸ்த்ரம் சதுர்புஜம் ।
தேவீ ஸவ்யபுஜம் ந்யஸ்தவாமஹஸ்தஸரோருஹம் ॥

ருக்மிணீம் தக்ஷிணே பார்ச்வே ஸத்யபாமா ததோத்தரே ।
விநதாநந்தநம் வாபி பாகே திவ்யே ப்ரகல்பயேத் ॥

பொருள் : ருக்மிணீ ஸத்யபாமை ஆகிய தேவிகளுடன் கூடியவராய் நிற்பவரும், இடது காலை சிறிது வளைத்தும், வலது காலை நேராகவும் வைத்து அற்புதமாகக் காட்சி தருபவரும், மேகம்போல் கருமை வண்ணத்துடன், தாமரை இதழையொத்த நீண்ட கண்களோடு மஞ்சள்நிற ஆடையணிந்து, நான்கு கரங்களுடன் கூடிய ராஜகோபாலனை அமைக்கவேண்டும். மேலும் இடது கையில் தாமரைமலருடன் ருக்மிணிதேவியை ராஜகோபாலனுக்குத் தென்பார்ச்வத்திலும், வலது கையில் தாமரையுடன் ஸத்யபாமாவை அவரது வடபார்ச்வத்திலும் அல்லது கருடனையும் அமைக்கலாம்.

## रुक्मिणी ध्यानम्

रुक्माभां धवलाम्बरां सरसिजं वामे करे बिभ्रतीं
कृत्वा दक्षिणमाततं स्थितवतीमुद्बद्ध धम्मिल्लकाम् ।
नामाद्यक्षरमञ्जुलां सुविलसद्धारादिभूषोज्वलां
ध्यायेद्दक्षिणतः प्रियस्य कमला चिह्नान्वितां रुक्मिणीम् ।।

(ध्यानभुक्तावली - श्लो. 9 :52)

ருக்மிணீ - த்யானம்

ருக்மாபாம் தவலாம்பராம் ஸரஸிஜம் வாமே கரே பிப்ரதீம்
க்ருத்வா தக்ஷிணமாததம் ஸ்திதவதீமுத்பத்த தம்மில்லகாம் ।
நாமாத்யக்ஷரமஞ்ஜுலாம் ஸுவிலஸத்தாராதிபூஷோஜ்வலாம்
த்யாயேத்தக்ஷிணத: ப்ரியஸ்ய கமலா சிஹ்நாந்விதாம் ருக்மிணீம் ॥

பொருள் : பொன்னிறங்கொண்டு வெண்மையான ஆடையுடன் தாமரை மலரை இடதுகரத்தில் தரித்து, வலதுகரத்தைத் தொங்கவிட்டவராய் நிற்பவரும், கூந்தலைக் கொண்டையாகக் கட்டியிருப்பவரும், பெயரின் முதலெழுத்தான ரு என்பதற்கு ஒப்ப ருசிரமாய் (அழகாய்) இருப்பவரும், கழுத்தணி முதலானவைகளை அணிந்து விளங்குபவரும், தாமரையைத் தன் அடையாளமாகக் கொண்டவரும், ஸ்ரீகிருஷ்ண பகவானின் தென்பார்ச்வத்தில் காட்சிதருபவராயும் ருக்மிணீதேவியை (அமைத்தல்) தியானித்தல் வேண்டும்.

## सत्यभामा

उच्चैर्बद्धकचां करे विदधीं वामेतरे हल्लकं
विस्तीर्णान्यकरां सबीजसहितां रक्तांशुकां श्यामलाम् ।

उन्मीलन्मणिनूपुरादि विविधालङ्काररम्याकृतिं
भामां सत्यपदादिमां नतजनत्राणोद्यतामाश्रये ।।

(ध्यानमुक्तावली. श्लो. 9 : 53)

ஸத்யபாமா

உச்சைர்பத்தகசாம் கரே விததீம் வாமேதரே ஹல்லகம்
விஸ்தீர்ணாந்யகராம் ஸபீஜஸஹிதாம் ரக்தாம்சுகாம் ச்யாமலாம் !
உந்மீலந்மணிநூபுராதி விவிதாலங்காரரம்யாக்ருதிம்
பாமாம் ஸத்யபதாதிமாம் நதஜநத்ராணோத்யதாமாச்ரயே ॥

பொருள் : நகில் பிரதேசங்களின்மீது கட்டப்பெற்ற கச்சை உடையவரும், தனது வலதுகரத்தில் சிவப்புச் செங்கழுநீர்ப் புஷ்பத்தை உடையவரும், இடதுகரத்தினைத் தொங்கவிட்டிருப்பவரும், சிவந்த உடையினை உடுத்தியிருப்பவரும், கருமை நிறமான மேனியை உடையவரும், மணிச்சதங்கை முதலான அணிகலன்களால் பிரகாசிப்பவரும், அண்டியவர்களைக் காக்கும் விருப்பங்கொண்ட ஸத்யபாமாவை ஆச்ரயிக்கிறேன்.

## अन्नाधिपतिः - I

पूर्णेन्दुबिम्बमध्यस्थे सितपद्मे विकस्वरे ।
आसीनं धवलाकारं नीलकुञ्चितमूर्धजम् ।।

दुकूलक्षौमवसनं बालयोग्यविभूषणम् ।
कलधौतमयं पात्रं पायसान्नेन पूरितम् ।।

बिभ्राणं दक्षिणे हस्ते दध्योदनमथेतरे ।
ध्यायेत् लक्षत्रयं धीमान् जपेत्तद्गतमानसः ।।

अन्नेन जुहुयाच्चाग्नौ नियतं मन्त्रवित्तमः ।
बह्वन्नत्वमवाप्नोति सर्वमिष्टं लभेत च ।।

(पाद्मसंहिता - अध्या - २८ -श्लो.-२१ - २४, ARE 1936-37, P. No. 62)

அன்னாதிபதி: - 1

பூர்ணேந்துபிம்பமத்யஸ்தே ஸிதபத்மே விகஸ்வரே ।
ஆஸீனம் தவளாகாரம் நீலகுஞ்சிதமூர்தஜம் ॥

துகூலகெஷளமவஸனம் பாலயோக்யவிபூஷணம் ।
கலதௌதமயம் பாத்ரம் பாயஸான்னேன பூரிதம் ॥

பிப்ராணம் தக்ஷிணேஹஸ்தே தத்யோதநமதேதரே ।
த்யாயேத் லக்ஷத்ரயம் தீமாந் ஜபேத்தத்கதமாநஸ: ॥

அன்னேன ஜுஹுயாச்சாக்நௌ நியதம் மந்த்ரவித்தம: ।
பஹ்வன்னத்வமவாப்நோதி ஸர்வமிஷ்டம் லபேத ச ॥

பொருள் : பூர்ணசந்த்ரபிம்பத்தின் நடுவில் மலர்ந்த வெண்டாமரைமீது வெண்ணிறத்தோடு வீற்றிருப்பவரும், மைவண்ணக் கூந்தலுடனும், பட்டாடை அணிந்தும், பாலனுக்குரிய அணிகலன்களோடும், பாயஸான்னத்தால் நிரப்பப் பெற்ற பொற்கலசத்தினைத் தனது வலது கையில் பெற்றவரும், இடது கையில் தத்யோதனத்தை வைத்திருப்பவருமான இம்மூர்த்தியை மூன்று லக்ஷம் முறை ஜபித்தும், அன்னத்தால் அக்னியில் ஹோமம் செய்தும் வணங்குபவருக்கு நிரம்ப அன்னம் கிடைப்பதுடன் நினைத்தவை அனைத்தும் கிட்டுகின்றன. இச்சிற்பத்தைத் திருவரங்கம், திருவெள்ளறைக் கோயில் மடைப்பள்ளிக்கு அருகில் காணலாம்.

## अन्नाधिपतिः - २ (अ) यशोदाबालकृष्णध्यानम्

पाणौ पायसभक्तमाहितरसं बिभ्रन्मुदा दक्षिणे-
सव्ये शारदचन्द्रमण्डलनिभं हैय्यङ्गवीनं दधत् ।
कण्ठे कल्पितपुण्डरीकनखमप्युद्दामदीप्तिं वहन्
देवो दिव्यदिगम्बरो दिशतु नः सौख्यं यशोदा शिशुः ।।
(श्रीकृष्णकर्णामृतम् - 2 : 74)

அன்னாதிபதி: - 2 (அ) யசோதா-பாலக்ருஷ்ண-த்யாநம்

பாணௌ பாயஸபக்தமாஹிதரஸம் பிப்ரன்முதா தக்ஷிணே
ஸவ்யே சாரதசந்த்ரமண்டலநிபம் ஹையங்கவீநம் ததத் ।
கண்டே கல்பிதபுண்டரீகநகமப்யுத்தாமதீப்திம் வஹந்
தேவோ திவ்யதிகம்பரோ திசது ந: ஸௌக்யம் யசோதா சிசு: ॥
(ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம் - 2:74)

பொருள் : தனது கையிணைகளில் வலக்கரத்தினில் பாயஸம் நிறைந்த குடுவையை மகிழ்ச்சியுடன் தாங்கியிருப்பவரும், இடக்கரத்தினில் சரத்கால சந்திரனுக்கு ஒப்பாக வெண்மையாய்த் திகழும் தற்போதே கடைந்தெடுத்த வெண்ணெய்யைத் தரித்தவரும், கழுத்தினில் புலி நகத்தோடு கூடிய அணிகலனை அணிந்து

விளங்குபவரும், திசைதனை ஆடையாகக் கொண்டும், அசோதையின் மகனாகவும் திகழும் தேவன் நமக்கு சௌக்யத்தைக் கொடுக்கட்டும்.

## अन्नाधिपतिः - ३ (अ) बालकृष्णध्यानम्

. . . . बालकृष्णं च नीलोन्दीवरसन्निभम् ।।

रत्नाभरणसन्दीप्तं द्विभुजं नीलकुन्तलम् ।
पायसं नवनीतं च कराभ्यां दधतं स्मरेत् ।।

(S. 6771. TMSSML, गौतमीयतन्त्रे एकविंशतितमेऽध्याये - 52 B - 53)

## அன்னாதிபதி: - 3 (அ) பாலக்ருஷ்ண-த்யானம்

. . . . பாலக்ருஷ்ணம் ச நீலோந்தீவரஸன்னிபம் ॥

ரத்னாபரணஸந்தீப்தம் த்விபுஜம் நீலகுந்தலம் ।
பாயஸம் நவநீதம் ச கராப்யாம் தததம் ஸ்மரேத் ॥

பொருள் : கருநெய்தல் மலரைப்போன்று பிரகாசிப்பவரும்; ரத்தினாபரணங்களால் மிளிர்பவரும், இருகைகளைப் பெற்றவரும், கறுங்கூந்தலை உடையவரும், தன்னிருகரங்களில் முறையே கன்னல் அமுதினையும், வெண்ணெய்யினையும் பெற்றிருப்ப வரான பாலகிருஷ்ணமூர்த்தியை தியானிக்கவேண்டும்.

## अन्नाधिपतिः ४ - अन्नपूर्णा ध्यानम्

आदाय दक्षिणकरेण सुवर्णदर्वीं
दुग्धान्नपूर्णमितरेण च रत्नपात्राम् ।
भिक्षाप्रदाननिरतां नवहेमवर्णाम्
आविस्तरां गिरिसुतां भवतीं भजामि[1] ।।

(B. 12248 / D. 19955)

## அன்னாதிபதி: 4 - அன்னபூர்ணா தியானம்

ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ணதர்வீம்
துக்தான்னபூர்ணமிதரேண ச ரத்னபாத்ராம் ।
பிக்ஷாப்ரதானநிரதாம் நவஹேமவர்ணாம்
ஆவிஸ்தராம் கிரிஸுதாம் பவதீம் பஜாமி ॥

1. भिक्षाटनावसरदत्तसुभोजनां तां-
स्वर्णप्रभां हृदि भजे महितान्नपूर्णीम् ।। मूर्तिध्याने - 64 / 27

பொருள் : வலது கையால் பொன்னிறமான அகப்பையை எடுத்துக் கொண்டும், பாலன்னம் நிரம்ப உள்ள கனகபாத்திரத்தை இடது கையினில் தரித்தும், பிக்ஷை அளிப்பதில் ஈடுபாட்டுடன் பொன்னிறத்தோடு காட்சிதரும் மலைமகளான அன்னபூர்ணாதேவியை வணங்குகிறேன்.

## अन्नाधिपतिः ५ - मीनाक्षी ध्यानम्

हस्तेनादाय दर्वीं कनकविरचितां दक्षिणेनेतरेण
प्रोद्योतं रत्नपात्रं घृतगुडसहितं पायसं हेमभूषे ।
सर्वेभ्यो दानशीले हिमगिरितनये तप्तजाम्बूनदाभे
मातर्मीनाक्षि मह्यं भगवदि वरदे देहि कल्याणि नित्यम् ।।

(B. 8665 / D. 20213)

### அன்னாதிபதி: 5 - மீனாக்ஷீ தியானம்

ஹஸ்தேநாதாய தர்வீம் கனகவிரசிதாம் தக்ஷிணேநேதரேண
ப்ரோத்யோதம் ரத்னபாத்ரம் க்ருதகுடஸஹிதம் பாயஸம் ஹேமபூஷே.
ஸர்வேப்யோ தானசீலே ஹிமகிரிதநயே தப்தஜாம்பூநதாபே
மாதர்மீனாக்ஷி மஹ்யம் பகவதி வரதே தேஹி கல்யாணி நித்யம்.

பொருள் : வலது கையில் பொன்னிறமான அகப்பையை எடுத்துக்கொண்டும், நெய், வெல்லம் ஆகியவற்றால் தயார் செய்யப்பெற்ற பாயஸம் உள்ள பொற்பாத்திரத்தை இடது கையினில் தரித்தும், அதனை அனைவருக்கும் அளிக்க விரும்புவளும், இமவானின் புதல்வியும், காய்ச்சிய இரும்பு குண்டுபோல் செந்நிறத்தால் மிளிர்பவருமான தாயே ! பகவதி ! மீனாக்ஷி ! வரம் தருபவளே ! நீ எனக்கு எப்போதும் மங்களங்களை அருள்வாயாக.

## नवनीतकृष्णध्यानम्

बालायनीलवपुषे नवकिङ्किणी सा-
जालाभिरामजगदीश दिगम्बराय ।
शार्दूलदिव्यनखभूषणभूषिताय-
मन्दस्मिताय नवनीतमुषे नमस्ते ।।

(C. V. No. 116 - P. No. 22)

நவநீதக்ருஷ்ண-த்யானம்

பாலாயநீலவபுஷே நவகிங்கிணீ ஸா-
ஜாலாபிராமஜகதீச திகம்பராய ।
சார்தூலதிவ்யநகபூஷணபூஷிதாய-
மந்தஸ்மிதாய நவநீதமுஷே நமஸ்தே ॥

பொருள் : நீலமேனியனும், பாலகனும், புதுக்கிங்கிணியை அணிந்தவரும், திசையையே ஆடையாக அணிந்தவரும், புலிநகம் கொண்ட அணிகலனை அணிந்தவரும், குறுநகை புரிபவரும், வெண்ணெய்யைத் திருடுபவருமான நவநீதகிருஷ்ணனுக்கு வணக்கம்.

## दधिवामनमूर्तिः

भुक्तागौरं नवमणिविलसद्भूषणं चन्द्रसंस्थं
भृङ्गाकारैरलकनिकरैश्शोभिवक्त्रारविन्दम् ।
हस्ताब्जाभ्यां कनककलशं शुद्धतोयाभिपूर्णं
दध्यन्नाढ्यं कनकचषकं धारयन्तं भजामः ॥

(प्रपञ्चसारसारसङ्ग्रहे - P. No. 456 & विष्णोरपामार्जने - 154 / 71)

ததிவாமனமூர்த்தி:

முக்தாகௌரம் நவமணிவிலஸத்பூஷணம் சந்த்ரஸம்ஸ்த்தம்
ப்ருங்காகாரைரலகநிகரை: சோபிவக்த்ராரவிந்தம் ।
ஹஸ்தாப்ஜாப்யாம் கனககலசம் சுத்ததோயாபிபூர்ணம்
தத்யன்னாட்யம் கனகசஷகம் தாரயந்தம் பஜாம: ॥

பொருள் : முத்துக்களைப் போன்ற வெண்மையானப் புத்தம் புதிய மணிகளாலான அணிகலன் பூண்டவரும், சந்திரனின் நடுவே அமர்ந்துள்ளவரும், வண்டுகள் மொய்க்கும்படியாய் அமைந்துள்ள கேசங்களைப் பெற்றுள்ளவரும், தாமரைக் கொப்பான முகத்தையுடையவரும், தன்னிரு தாமரைக்கைகளால் (இடது கையால்) சுத்தமான நீர்நிரம்பிய பொற்கலசத்தையும், (வலது கையால்) பொற்பாத்திரத்தில் தயிர் சாதத்தையும் தாங்கியுள்ள ததிவாமனரை வணங்குவோம்.

दधिभक्तहयग्रीवः

सव्येनहस्तेन सुधाकरीरं
अन्येन दध्योदनमादधानः ।
शशाङ्कमध्ये सितपद्मसंस्थः
पायात् सिताभः तुरगाननो नः ।।

ததிபக்தஹயக்ரீவ :

ஸவ்யேனஹஸ்தேன ஸுதாகரீரம்
அன்யேன தத்யோதனமாததான: ।
சசாங்கமத்யே ஸிதபத்மஸம்ஸ்த:
பாயாத் ஸிதாப: துரகானனோ ந: ॥

பொருள் : இடது கையினால் அம்ருதம் (நீர்) நிரம்பிய யானையின் துதிக்கைக்கு ஒப்பாகச் சிறிதே நீண்ட பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டிருப்பவரும், வலது கையினால் தயிர் சாதத்தைத் தாங்கியிருப்பவரும், நிலவின் நடுவே வெண்டாமரையில் வீற்றிருப்ப வருமான பரிமுகத்தோன் நம்மைக் காத்தருளட்டும்.

(பிரபஞ்சசாரசாரஸங்க்ரஹம் P. No. 201 - vol. II)

हयग्रीवः

वन्दे पूरितचन्द्रमण्डलगतश्वेतारविन्दासने
मन्दाकिन्यमृताब्जकुन्दकुसुमक्षीरेन्दुभासं हरिम् ।
मुद्रापुस्तकशङ्खचक्रविलसच्छ्रीमद्भुजामण्डलं
निर्यान्निर्मलभारतीपरिमलं विश्वेशमश्वाननम् ।।

(प्रपञ्चसारसारसङ्ग्रहे-द्वितीयभागे - पृ - सं. 202)

ஹயக்ரீவ:

வந்தே பூரிதசந்த்ரமண்டலகதச்வேதாரவிந்தாஸனே
மந்தாகின்யம்ருதாப்ஜகுந்தகுஸுமக்ஷீரேந்துபாஸம் ஹரிம் ।
முத்ராபுஸ்தகசங்கசக்ரவிலஸத் ச்ரீமத்புஜாமண்டலம்
நிர்யான் நிர்மலபாரதீபரிமலம் விச்வேசமச்வானனம் ॥

பொருள் : சந்திர மண்டலத்தின் நடுவில் வெண்டாமரையாகிய ஆசனத்தின்மீது கங்கை ஜலம், தாமரை, மல்லிகை, பால், திங்கள் போன்றவைபோல் தூய்மையாக விளங்குபவரும், மேல் வலது கையில் சக்கரம், மேல் இடது கையில் சங்கமும், இடது கீழ்க்கையில் புத்தகம், வலது கீழ்க்கையில் ஞானமுத்திரை ஆகியவற்றைப்

பெற்றிருப்பவரும், நிர்மலமான வாக் பரிமளத்தைக் கொடுப்பவரும், உலகநாயகனும், பரிமுகத்தோனுமான திருமாலை வணங்குகின்றேன்.

## विद्याप्रदानसङ्कर्षणमूर्तिध्यानम्

शङ्खगोक्षीरधवलं चतुर्बाहुं किरीटिनम् ।
वसानं वासः क्षौमं च पूर्णचन्द्रनिभाननम् ।।

मुक्ताभूयिष्टमाकल्पं सौवर्णमतिशोभनम् ।
दधानं मुख्यहस्तेन ज्ञानमुद्रासमन्वितम् ।।

पुस्तकं वामहस्तेन बिभ्राणं भुजयोर्द्वयोः ।
ऊर्ध्वयोः स्फाटिकं शङ्खमक्षमालां यथातथम् ।।

धवलैः कालजैः पुष्पैश्शोभितं वनमालया ।
श्वेतपद्मे सुखासीनमेवं ध्यायेत मन्त्रविद् ।।
ध्यायतो बुद्धिरमलाभवेद्ज्ञानं च पुष्कलम् ।।

(पाद्मसंहिता - चर्या - अध्या - २६)

வித்யாப்ரதான-ஸங்கர்ஷண மூர்த்தி-த்யானம்

சங்க்ககோக்ஷீரதவளம் சதுர்பாஹும் கிரீடினம் ।
வஸானம் வாஸ: க்ஷௌமம் ச பூர்ணசந்த்ரநிபானனம் ॥

முக்தாபூயிஷ்டமாகல்பம் ஸௌவர்ணமதிசோபநம் ।
ததானம் முக்யஹஸ்தேன ஞானமுத்ராஸமன்விதம் ॥

புஸ்தகம் வாமஹஸ்தேன பிப்ராணம் புஜயோர்த்வயோ: ।
ஊர்த்வயோ: ஸ்பாடிகம் சங்க்கமக்ஷமாலாம் யதாததம் ॥

தவளை: காலஜை: புஷ்பைச்சோபிதம் வனமாலயா ।
ச்வேதபத்மே ஸுகாஸீனமேவம் த்யாயேத மந்த்ரவித் ॥
த்யாயதோ புத்தி: அமலா பவேத் ஞானம் ச புஷ்கலம் ॥

பொருள் : சங்கு, பசும்பால்போன்ற வெண்ணிறம், நான்கு கைகள், கிரீடம், பட்டாடை, முழுமதியோடொத்தமுகம், ஆகியவற்றுடன் மங்களகரமான பொன்னாலும், முத்துக்களாலுமான அணிகலன்களால் திகழ்பவரும், கீழ் வலது கையில் ஞானமுத்திரை, மேல்வலதுகையில் ஸ்படிகத்திற்கு ஒப்பான சங்கு, மேல் இடது கையில் அக்ஷமாலை,

கீழ் இடது கையில் புத்தகம் முதலானவற்றுடன் காலத்தில் கிடைக்கும் வெண்ணிற புஷ்பங்களையும், வனமாலையினையும் சாத்திக்கொண்டு, வெள்ளைத்தாமரையில் வீற்றிருப்பவராக கல்வியளிக்கும் ஸங்கர்ஷணமூர்த்தியை த்யானித்தல் வேண்டும். அவ்வாறு த்யானம் செய்பவருக்கு நிர்மலமான புத்தியும், நிரம்ப அறிவும் ஏற்படும்.

## कल्किमूर्तिः

कल्किनं तु चतुर्बाहुं बहुतूणं धनुर्धरम् ॥

शङ्खचक्रधरं कुर्यात् तथा खड्गधरं प्रभुम् ।
द्विभुजं वा हयारूढं खड्गपाणिं सुरेश्वरम् ॥

(Vaishnavaiconography)

கல்கிமூர்த்தி:

கல்கினம் து சதுர்பாஹும் பஹுதூணம் தனுர்தரம் ॥

சங்கசக்ரதரம் குர்யாத் ததா கட்கதரம் ப்ரபும் ।
த்விபுஜம் வா ஹயாரூடம் கட்கபாணிம் ஸுரேச்வரம் ॥

பொருள் : நான்கு கைகள், அம்புகள் நிறைந்த அம்பராத்தூணி, வில் ஆகியவற்றுடன் கூடியவராயும், வலது கீழ்க்கையில் வாள், மேற்கையில் சக்கரம், இடது மேற்கையில் சங்கம், இடது கீழ்க்கையினைக் கடிவாளம் பிடித்திருப்பவராய்க் குதிரைமேல் சவாரி செய்யும் நிலையில் கல்கிமூர்த்தியை அமைக்கவேண்டும். சங்கு, சக்கரம் நீங்கலாக இரண்டு கைகளுடனும் அமைக்கலாம்.

## हरिहरमूर्तिः

रुद्रार्धदेहं वा कुर्यात् चतुर्बाहुं जनार्दनम् ।
ईशानं दक्षिणे पार्श्वे कुर्याच्छूल्लोष्टधारिणम् ॥

गदाचक्रधरं चान्यं मुकुटेन विभूषितम् ।
जटाचन्द्रधरं रौद्रं वैष्णवं रत्नमण्डितम् ॥
कुण्डलोद्योतितं चैकं अपरं नागकुण्डलम् ।
व्याघ्रचर्मपरीधानं अपरं वस्त्रभूषितम् ॥

ब्रह्मसूत्रधरं चैकं अन्यन्नागोपवीतकम् ।
गौरी चैकेन पार्श्वेन लक्ष्मीचैकेन संस्थिता ।।
एवं लक्षणसंयुक्तं कारयेत् हरिशङ्करम् ।।

(S. 4539. TMSSML, Hayasirshasamhita Adi xxii. 12-16 a)

ஹரிஹரமூர்த்தி

ருத்ரார்த்ததேஹம் வா குர்யாத் சதுர்பாஹும் ஜனார்தனம் ।
ஈசாநம் தக்ஷிணே பார்ச்வே குர்யாச்சூல்லோஷ்டதாரிணம் ॥

கதாசக்ரதரம் சான்யம் முகுடேந விபூஷிதம் ।
ஜடாசந்த்ரதரம் ரௌத்ரம் வைஷ்ணவம் ரத்னமண்டிதம் ॥

குண்டலோத்யோதிதம் சைகம் அபரம் நாககுண்டலம் ।
வ்யாக்ரசர்மபரீதானம் அபரம் வஸ்த்ரபூஷிதம் ॥

ப்ரஹ்மஸூத்ரதரம் சைகம் அன்யத் நாகோபவீதகம் ।
கௌரீ சைகேன பார்ச்வேன லக்ஷ்மீசைகேந ஸம்ஸ்திதா ॥
ஏவம் லக்ஷணஸம்யுக்தம் காரயேத் ஹரிசங்கரம் ॥

பொருள் : நாற்கரங்கொண்ட ஜனார்தனனின் பேர் பாதி அங்கத்தை உருத்திரனாகவும் செய்யலாம். அப்படிச் செய்யும் மூர்த்தியின் வலப்பார்ச்வத்தில் ஈசானனை சூலம், கபாலம் ஆகியவை தரித்தவராகவும், இடப்பார்ச்வத்தின் மேற்கையில் சக்கரம், கீழ்க்கையில் கதை, மகுடம் ஆகியவற்றுடன் விஷ்ணுவாகவும் அமைத்தல் வேண்டும். மேலும், சிவபெருமானை சந்திரன், நாககுண்டலம், புலித்தோல், நாகத்தாலான முப்புரிநூல் ஆகியவை அணிந்தவராய் பக்கத்தில் கௌரியுடனும், திருமாலை ரத்னகிரீடம், குண்டலம், வஸ்த்ரம், முப்புரிநூல் ஆகியவை அணிவித்து, பக்கத்தில் லக்ஷ்மியோடும் ஹரிசங்கரமூர்த்தியை நிறுவுதல் வேண்டும்.

ब्रह्मदेवः

चतुर्मुखः चतुर्बाहुः बृहज्जठरमण्डलः ।
ऊर्ध्वबद्धजटाजूटो लम्बकूर्चस्समेखलः ।।

शोभनं दक्षिणे हस्ते दद्यादस्याक्षसूत्रकम् ।
स्रुचं च दक्षिणे दद्यात् वामहस्ते च कुण्डिकाम् ।।

आज्यस्थालीं कुशोपेतां वामहस्ते नियोजयेत् ।
शङ्खचक्रगदापाणिः कार्यो वाथ चतुर्मुखः ।।

सरस्वती च सावित्री वामदक्षिणसंस्थिते ।
कर्तव्या मुनयो वाथ परिवारव्यवस्थिताः ।।
विनिविष्ट[1]स्तदा ब्रह्मा कार्यो नेष्टस्ततोन्यथा ।।

(हयशीर्षे xxi. S. 4539 / P. No. 248)

ப்ரஹ்மதேவ:

சதுர்முக: சதுர்பாஹு: ப்ருஹஜ்ஜடரமண்டல: ।
ஊர்த்வபத்தஜடாஜூடோ லம்பகூர்சஸ்ஸமேகல: ॥

சோபநம் தக்ஷிணேஹஸ்தே தத்யாதஸ்யாக்ஷஸூத்ரகம் ।
ஸ்ருசம் ச தக்ஷிணே தத்யாத் வாமஹஸ்தே ச குண்டிகாம் ॥

ஆஜ்யஸ்தாலீம் குசோபேதாம் வாமஹஸ்தே நியோஜயேத் ।
சங்கசக்ரகதாபாணி: கார்யோ வாத சதுர்முக: ॥

ஸரஸ்வதீ ச ஸாவித்ரீ வாமதக்ஷிணஸம்ஸ்திதே ।
கர்த்தவ்யா முனயோ வாத பரிவாரவ்யவஸ்திதா: ॥
விநிவிஷ்ட[1]ஸ்ததா ப்ரஹ்மா கார்யோ நேஷ்டஸ்ததோந்யதா ॥

பொருள் : பிரம்மதேவரை நான்குமுகம், நான்கு புஜம், பெரிய வயிற்றுப்பகுதி, உயரே தூக்கிக்கட்டிய ஜடாமகுடம், தொங்குகின்ற தாடி, ஒட்டியாணம் ஆகியவற்றுடன் வலது மேற்கையில் அக்ஷமாலையினையும், வலது கீழ்க்கையில் நெய்யை எடுத்து அக்னியில் சேர்க்க ஸ்ருக்கி (கரண்டியி) னையும், மேல் இடது கையில் கமண்டலத்தையும், கீழ் இடதுகையில் குசத்துடன் கூடிய நெய்ப் பாத்திரத்தையும் அமைத்தல் வேண்டும். இவரை சங்கு-சக்ர-கதாபாணியாகவும், முனிவர்களால் சூழப் பெற்றவராகவும் நிறுவலாம். அமர்ந்தகோலத்தில் மட்டுமே நிறுவுதல்வேண்டும். அவருக்கு நிறமாகப் பொன்னிறத்தையும், உடையாக பீதாம்பரத்தையும் ஸனத்குமார ஸம்ஹிதைக் குறிப்பிடுகின்றது.

---

1. हिरण्यवर्णमासीनं पीताम्बरधरं प्रभुम् । (Vaish. Icono. P. No. 247)

## चतुर्भुजरामलक्षणम्

दक्षिणोर्ध्वे भवेच्चक्रं वामोर्ध्वे शङ्खमेव च ।
दक्षिणाधो भवेद्बाणः वामाधो धनुरेव च ।।

द्विभुजं शरहस्तं वा रामं कुर्यात्सकार्मुकम् ।

(Vaish - Icono. P. No. 149)

சதுர்புஜராமலக்ஷணம்

தக்ஷிணோர்த்வே பவேச்சக்ரம் வாமோர்த்வே சங்க்கமேவ ச ।
தக்ஷிணாதோ பவேத்பாண: வாமாதோ தனுரேவ ச ॥

த்விபுஜம் சரஹஸ்தம் வா ராமம் குர்யாத்ஸகார்முகம் ।

பொருள் : இம்மூர்த்தியின் வலது மேற்கையில் ஆழியும், இடது மேற்கையில் சங்கும், வலது கீழ்க்கையிலே அம்பும், இடக்கீழ்க்கையில் வில்லும் கொண்டவாறு நான்கு தோள் இராமனைத் அமைக்கவேண்டும். வலக்கையில் அம்பும், இடக்கையில் வில்லுமாக இருதோள் இராமனையும் நிறுவலாம்.

## बलरामलक्षणम्

वामोर्ध्वं लाङ्गलं दद्यात् अधश्शङ्खं सुशोभनम् ।
मुसलं दक्षिणोर्ध्वं तु चक्रं चाधस्सुशोभनम् ।।
गदां कृपाणं वा दद्यात् संस्थाने शङ्खचक्रयोः ।।

(Vaish - Icono. P. No. 153)

பலராமலக்ஷணம்

வாமோர்த்வம் லாங்கலம் தத்யாத் அதச்சங்கம் ஸுசோபனம் ।
முஸலம் தக்ஷிணோர்த்வம் து சக்ரம் சாதஸ்ஸுசோபனம் ॥
கதாம் க்ருபாணம் வா தத்யாத் ஸம்ஸ்த்தானே சங்கசக்ரயோ: ॥

பொருள் : இடது மேற்கையில் கலப்பையும், இடது கீழ்க்கையில் சங்கத்தையும், வலது மேற்கையில் உலக்கை அல்லது கதையையும் வலது கீழ்க்கையில் சக்கரத்தையும் கொண்ட பலராமமூர்த்தியைச் செய்யவேண்டும். பலராமமூர்த்தியின் கைகளில் முறையே சங்கு, சக்கரங்களுக்குப் பதிலாக கதை (தண்டு) கத்தி (நாந்தகம்)களை ஆயுதங்களாக அமைக்கலாம்.

(स्थानक) सीतालक्षणम्

सीता श्रीरिव कर्तव्या कल्याणबहुलक्षणा ।
करण्डिकामौलिधरा कबरी वालाकैर्युता ।।

बिभ्राणा वामहस्तेन सरसीरुहकुड्मला ।
ऊरुप्रदेशविश्रान्तवामेतरभुजाथवा ।।

(Vaish - Icono. P. No. 148)

(ஸ்தாநக) ஸீதாலக்ஷணம்

ஸீதா ஸ்ரீரிவ கர்த்தவ்யா கல்யாணபஹுலக்ஷணா ।
கரண்டிகாமௌலிதரா கபரீ வாலகைர்யுதா ॥

பிப்ராணா வாமஹஸ்தேன ஸரஸீருஹ குட்மலா ।
ஊருப்ரதேச விச்ராந்த வாமேதரபுஜாதவா ॥

பொருள் : சீதையை, இலக்குமிக்குரிய அமைப்புடன் கூந்தலாலான கரண்ட மகுடம் தரித்தவராயும். அவரது. இடது கையில் தாமரைமொட்டை அமைத்தும், அவரது வலக்கையினைத் தொடைப்பகுதிவரைத் தொங்கவிடப்பட்டுள்ள நிலையிலும் நிறுவ வேண்டும்.

रामलक्षणम्

लक्ष्मणं कारयेद्वामे तथा लक्षणलक्षितम् ।
जानकीं दक्षिणे पार्श्वे देवीं वेदिसमुत्थिताम् ।।

भरतं दक्षिणे भित्तौ ससुग्रीव विभूषणम् ।
शत्रुघ्नं चाङ्गदं चैव हनुमन्तं च वामतः ।।

दिव्ये भागे स्थितस्यैव परिवारादि कल्पनम् ।
भद्रासने समासीनं त्यक्त्वा तत्सशरं धनुः ।।

अभयो दक्षिणो हस्तो वामस्तु वरदो भवेत् ।
जानकी तु सुखासीना भवेद्दक्षिणपार्श्वतः ।।
लक्ष्मणो वामपार्श्वे तु स्थितश्च रचिताञ्जलिः ।।

(Vaish - Icono. P. No. 148)

லக்ஷ்மணம் காரயேத் வாமே ததா லக்ஷணலக்ஷிதம் ।
ஜானகீம் தக்ஷிணேபார்ச்வே தேவீம் வேதிஸமுத்திதாம் ॥

பரதம் தக்ஷிணே பித்தௌ ஸஸுக்ரீவ விபூஷணம் ।
சத்ருக்னம் சாங்கதம் சைவ ஹனுமந்தம் ச வாமத: ॥

திவ்யே பாகே ஸ்திதஸ்யைவ பரிவாராதி கல்பனம் ।
பத்ராஸனே ஸமாஸீனம் த்யக்த்வா தத்ஸசரம் தநு: ॥

அபயோ தக்ஷிணோ ஹஸ்தோ வாமஸ்து வரதோ பவேத் ।
ஜானகீ து ஸுகாஸீனா பவேத் தக்ஷிணபார்ச்வத: ॥
லக்ஷ்மணோ வாமபார்ச்வே து ஸ்திதஸ்ச ரசிதாஞ்ஜலி: ॥

பொருள் : இலக்குமணனை இர்ாமனின் இடது பார்ச்வத்தில் அஞ்சலிமுத்திரை கொண்டு நின்றநிலையில் நிறுவவேண்டும். ராமனுடைய வலது பார்ச்வத்தில் வேள்விகளுக்கு இருப்பிடமான வேதியின் நடுவே அவதரித்த சீதையை அமர்ந்த நிலையில் இராமனின் தென்பார்ச்வத்திலும், பரதனைத் தென்புறச் சுவற்றிலும், இடதுபுறத்தில் சுக்ரீவன், சத்ருக்னன், அங்கதன், அனுமன் ஆகியோர்களை நின்ற நிலையிலும், இராமனை அம்பு, வில் இன்றிய நிலையில் பத்ராசனத்தில் வீற்றிருந்த நிலையிலும், வலது கையினை அபயமுத்திரையோடும், இடது கையினை வரதமுத்திரையோடும், அமைத்தல் வேண்டும்.

### भोगवामनः

नीलवर्णः चतुर्बाहुः शङ्खचक्रगदाब्जधृक् ।
सर्वान्भोगान्ददात्येष भक्तानां भोगवर्धनः ॥

### போகவாமன:

நீலவர்ண: சதுர்பாஹு: சங்கசக்ரகதாப்ஜத்ருக் ।
ஸர்வான் போகான் ததாத்யேஷ பக்தானாம் போகவர்தன: ॥
(S. 7532, P. No. 385 - Prapanchasarasarasangrah - Part II)

பொருள் : நீலநிறம், நான்கு கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றுடன் பக்தர்களுக்குப் போகத்தை அதிகரிக்கச் செய்யும் மூர்த்தியாக போகவாமனன் அனைத்துவிதமான போகத்தையும் அளிக்கின்றார்.

विश्ववामनः

पीताम्बरोत्तरीयोऽसौ मौञ्जी कौपीनधृक् हरिः ।
कमण्डलुं च दध्यन्नं दण्डं छत्रं करे दधत् ।।
यज्ञोपवीत तत्त्वाङ्गो ध्यातव्यो वामनस्सदा ।।

(S. 7532, P. No. 385 - Prapanchasarasarasangrah - Part II)

விச்வவாமன:

பீதாம்பரோத்தரீயோऽஸௌ மௌஞ்ஜீ கௌபீனத்ருக் ஹரி: ।
கமண்டலும் ச தத்யன்னம் தண்டம் சத்ரம் கரே ததத் ॥
யஜ்ஞோபவீத தத்வாங்கோ த்யாதவ்யோ வாமனஸ்ஸதா ॥

பொருள் : பீதாம்பரம், உத்தரீயம், மான்தோல், கௌபீனம், கமண்டலம், தயிர் சாதம், யக்ஞோபவீதம், தண்டம் ஆகியவற்றுடன் குடையைக் கையில் தரித்தவருமாகிய வாமனரை எப்போதும் தியானித்தல் வேண்டும்.

दैविकवासुदेवः

चतुर्भुजधरं देवं शङ्खचक्रगदाधरम् ।
अभयं दक्षिणं हस्तं वामं कट्यवलम्बितम् ।।

(विखनसोत्पत्तिचरित्रे - P. No. 12)

தைவிகவாஸுதேவன்

சதுர்புசதரம் தேவம் சங்க்கசக்ர கதாதரம் ।
அபயம் தக்ஷிணம் ஹஸ்தம் வாமம் கட்யவலம்பிதம் ॥

பொருள் : சங்கு-சக்ர-கதாதாரியான இந்த மூர்த்தியை நான்கு புயங்களுடன் மேலிருகரங்களில் வலக்கையில் சக்ரத்தையும், இடக்கையில் சங்கத்தையும் அமைத்து, கீழ் வலக்கையினை அபயமுத்திரையோடும், கீழ் இடக்கையினை கடிஹஸ்தமாகவும் நிறுவலாம். இவ்வாறு அமைக்கப்படும் மூர்த்தியினை தைவிகவாஸுதேவன் என்று விகனஸோத்பத்தி சரித்திரம்[1] கூறுகின்றது.

1. Vikhanasotpatti charitram - Etd. by. S. Sudarshan, Sarasvati Mahal Library, Thanjavur.

वासुदेवः

अस्य दक्षिणहस्ताग्रे चक्रञ्चाधस्थितोऽम्बुजम् ।
वामोर्ध्वशङ्खमन्यस्मिन् गदास्य चाप्यधोमुखम् ।।

श्रियं तु दक्षिणे पार्श्वे वामे पुष्टिं तु विन्यसेत् ।
तुष्टिं वा वामपार्श्वे तु कारयेन्मुनिसत्तम ।।

(Vaish - Icono. P. No. 118)

வாஸுதேவன்

அஸ்ய தக்ஷிணஹஸ்தாக்ரே சக்ரஞ்சாதஸ்திதோ஽ம்புஜம் ।
வாமோர்த்வசங்கமன்யஸ்மிந் கதாஸ்ய சாப்யதோமுகம் ॥

ச்ரியம் து தக்ஷிணேபார்ச்வே வாமே புஷ்டிம் து விந்யஸேத் ।
துஷ்டிம் வா வாமபார்ச்வே து காரயேன்முனிஸத்தம ॥

பொருள் : இம்மூர்த்தியினுடைய வலது மேற்கரத்தில் சக்கரமும், வலது கீழ்க்கரத்தில் தாமரையும், இடது மேற்கரத்தில் சங்கும், இடது கீழ்க்கரத்தில் கீழ்முகமாக் கதையும் அமைத்தல் வேண்டும். அமைத்தபின் லக்ஷ்மியை அவரது வலது பார்ச்வத்திலும், இடது பார்ச்வத்தில் புஷ்டியையோ அல்லது துஷ்டியையோ நிறுவலாம்.

श्रीदेवी

वामेनाम्बुरुहं करेण दधतीं विष्णोः स्थितां दक्षिणे
वामं सुस्थितमेव पादमपरं किञ्चित् वितत्यस्थितम् ।
पाणिं दक्षिणमाततं विदधीं सन्तप्तहेमप्रभां
भद्राय श्रियमाश्रये भगवतीं नाना विभूषोज्वलाम् ।।

(ध्यानमुक्तावली - श्लो. - 1 : 24)

ஸ்ரீ தேவீ

வாமேநாம்புருஹம் கரேண ததீம் விஷ்ணோ: ஸ்திதாம் தக்ஷிணே
வாமம் ஸுஸ்திதமேவ பாதமபரம் கிஞ்சித் விதத்யஸ்திதம்,
பாணிம்தக்ஷிணமாததம் விததீம் ஸந்தப்தஹேமப்ரபாம்
பத்ராய ச்ரியமாச்ரயே பகவதீம் நாநா விபூஷோஜ்வலாம்.

பொருள் : விஷ்ணுவின் வலப்பார்ச்வத்தில் நின்ற திருக்கோலத்தில் இடது கையினில் தாமரைமலரைத் தாங்கியிருப்பவளும், இடது காலை நேராக வைத்தும், வலது காலைச் சிறிது வளைத்தும் அகட்டியும், வலக்கையினைத் தொங்கவிட்டவாறும் நன்கு காய்ச்சிய பொன்போல் மிளிர்பவளும், பல பல அணிகலன்களை அணிந்து விளங்கும் பகவதியான ஸ்ரீதேவியை ஆச்ரயிக்கின்றேன்.

भूदेवी ध्यानम्

वन्दे दक्षिणपाणिना[1] कुवलयं फुल्लं सुमं बिभ्रती
कुर्वाणं विततं करं तदितरं व्यालम्बमानाङ्घ्रिकाम् ।
श्यामाभां हरिणीं तदन्यचरणं सुस्थापयन्तीं हरे-
र्नित्यं पार्श्वमुपेयुषीं प्रणमतां कल्याणसन्दायिकाम् ।।

(ध्यानमुक्तावली - श्लो. - 1 : 25)

பூதேவீ தியானம்

வந்தே தக்ஷிணபாணிநா[1] குவலயம் புல்லம் ஸுமம் பிப்ரதீம்
குர்வாணம் விததம் கரம் ததிதரம் வ்யாலம்பமாநாங்க்ரிகாம்,
ச்யாமாபாம் ஹரிணீம் ததந்யசரணம் ஸுஸ்தாபயந்தீம் ஹரே
நித்யம் பார்ச்வமுபேயுஷீம் ப்ரணமதாம் கல்யாணஸந்தாயிகாம்.

பொருள் : வலது கையினில் நெய்தல் அல்லது அல்லி மலரைத் தாங்கியிருப்பவளும், இடக்கையினைத் தொங்கவிட்டவாறும், வலது காலை நேராக வைத்தும், இடது காலைச் சிறிது அகட்டி வளைத்தும், மழை முகில்போல் கருமையாய் விளங்குபவரும், மான் போன்ற கண் இமைகளை உடையவரும், தினமும் எம்பெருமானுடைய இடப்பார்ச்வத்தில் விளங்குபவரும், தன்னை வணங்குபவர்களுக்கு மங்கலத்தை நல்கக்கூடியவருமான பூதேவியை வணங்குகிறேன்.

नरसिंहमूर्तिध्यानम्

श्रीभूमीभ्यां सहासीनं बद्धपर्यङ्कबन्धनम् ।
यद्वा भूमितले पादमेकं संस्थाप्य दक्षिणम् ।।

अपरेण सुखासीनो विष्ठरे विपुले दृढम् ।
यद्वा प्रसार्य जानूर्ध्वमुत्क्षिप्योपरि जानुनः ।।

वामे हस्तं प्रसार्यान्यहस्तं कृत्वाऽभयप्रदम् ।
दक्षिणं जानुनोऽधस्तात् स्थापयित्वा तदासने ।।

நரஸிம்மமூர்த்தி தியானம்

ஸ்ரீபூமீப்யாம் ஸஹாஸீனம் பத்தபர்யங்கபந்தனம் ।
யத்வா பூமிதலே பாதமேகம் ஸம்ஸ்த்தாப்ய தக்ஷிணம் ॥

---

1. दक्षे कल्हारसंयुक्ताम् - C. V. No. 116.

அபரேண ஸுகாஸீநோ விஷ்டரே விபுலே த்ருடம் ।
யத்வா ப்ரஸார்ய ஜாநூர்த்வமுத்க்ஷிப்யோபரி ஜாநுந: ॥

வாமே ஹஸ்தம் ப்ரஸார்யான்ய ஹஸ்தம் க்ருத்வாऽபயப்ரதம். ।
தக்ஷிணம் ஜாநுநோऽதஸ்தாத் ஸ்தாபயித்வா ததாஸனே ॥

(Vaish - Icono - P. No. 141)

பொருள் : நரஸிம்மமூர்த்தியின் வலப்பாதம் பூமியில் படுமாறு தொங்க விட்டபடிச் செய்து, இடது காலை மடக்கி சுகாஸனத்தில் அமர்ந்தநிலையில் நிறுவி, அவரது இடக்கையை இடது முழந்தாள் மேல்பரப்பியவாறு செய்து, வலது கையினை அபயமுத்திரை கொண்டமைத்தல் வேண்டும். அப்யமுத்திரைக்குப் பதிலாக வலது முழங்காலின் கீழ் பரப்பிய நிலையில் வலது கரத்தினை அமைக்கலாம். இவ்வாறு அமைக்கப்பெற்ற மூர்த்தியின் இருமருங்கிலும் அமர்ந்த கோலத்தில் திருமகளையும், மண்மகளையும் பிரதிஷ்டை செய்யவேண்டும்.

## धन्वन्तरिध्यानम्

शङ्खं चक्रं जलूकां दधदमृतघटं चापि दोर्भिश्चतुर्भिः
सूक्ष्मस्वच्छातिहृद्यां शुकपरिविलसन्मौलिमम्भोजनेत्रम् ।
कालाम्भोदोज्वलाङ्गं कटितटविलसच्चारुपीताम्बराढ्यं
वन्दे धन्वन्तरिं तं निखिलगतवनप्रौढदावाग्नि नीलम् ।।

(प्रपञ्चसारसारसङ्ग्रहे - पृ. सं. - 306 )

தன்வந்த்ரி த்யானம்

சங்கம் சக்ரம் ஜலூகாம் தததம்ருதகடம் சாபி தோர்பிச்சதுர்பி:
ஸூக்ஷ்மஸ்வச்சாதிஹ்ருத்யாம் சுகபரிவிலஸன்மௌலிமம்போஜநேத்ரம் ।
காலாம்போதோஜ்வலாங்கம் கடிதடவிலஸச்சாருபீதாம்பராட்யம்
வந்தே தன்வந்தரிம் தம் நிகிலகதவனப்ரௌடதாவாக்னி நீலம் ।

பொருள் : சங்கம், சக்ரம், அட்டைப் பூச்சி, அம்ருதகலசம் ஆகியவற்றைத் தனது நான்கு கரங்களில் தரித்திருப்பவரும், சுத்தமான (வெண்மையான) கவசம், கிரீடம், தாமரைபோன்ற கண்ணிணைகள், கார்மேகம் போன்ற உடலழகு, இடுப்பில் அழகிய மஞ்சள் வர்ணப்பட்டாடை, காட்டுத்தீயை அழிக்கவல்ல நீலநிறம் ஆகியவையுடைய தந்வந்தரி எனப்படுகின்ற திருமாலை வணங்குகின்றேன். தன்வந்தரிக்குக் கோயில் திருவரங்கத்தில் காணப்படுகிறது.

त्रिविक्रमः (தாடாளன் - சீர்காழி)

ब्रह्माण्डान्तरमेदिनी गतपदाम्भोजं नभोमण्डलं
प्रक्षिप्तान्यपदं तृतीयपदविन्यासं बलेर्मूर्धनि ।
कुर्वाणं गलशोभिकौस्तुभधरं वक्षस्थलक्ष्मीयुतं
शङ्खं चक्रमभीतिमीप्सितधरं हस्तैर्वहन्तीं भजे ।।

த்ரிவிக்ரமன்

ப்ரஹ்மாண்டாந்தரமேதினீ கதபதாம்போஜம் நபோமண்டலம்
ப்ரக்ஷிப்தான்யபதம் த்ருதீயபதவிந்யாஸம் பலேர்மூர்த்தனி ।
குர்வாணம் கலசோபிகௌஸ்துபதரம் வக்ஷஸ்தலக்ஷ்மீயுதம்
சங்கம் சக்ரமபீதிமீப்ஸிததரம் ஹஸ்தைர்வஹந்தீம் பஜே ॥

ब्रह्माण्डपृथ्वीगतपादपङ्कजं
वामाङ्घ्रिणाऽऽक्रान्तनभोऽवकाशम् ।
तृतीयपादाङ्कित दैत्यमस्तकं
त्रिविक्रमं तं शरणं प्रपद्ये ।।

ப்ரஹ்மாண்டப்ருத்வீகதபாதபங்கஜம்
வாமாங்க்ரிணா஽஽க்ராந்தநபோ஽வகாசம் ।
த்ருதீயபாதாங்கித தைத்யமஸ்தகம்
த்ரிவிக்ரமம் தம் சரணம் ப்ரபத்யே ॥
(லக்ஷ்மீபுரமாகாத்மியம்[1] - பக்கம். 69-70)

ஒரு குறளாய் இருநிலம் மூவடிமண் வேண்டி
உலகனைத்தும் ஈரடியாலொடுக்கி ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர்-தக்க கீர்த்தி
அருமறையின் திரள் நான்கும் வேள்வியைந்தும்
அங்கங்களவையாறும் இசைகளேழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும்
காழிச்சீராம விண்ணகரே சேர்மினீரே.
(பெரியதிருமொழி - திருமங்கை ஆழ்வார் 3-4-1)

---

1. Lakshmipuramahatmyam - Etd. by A. Veeraraghavan, Sarasvati Mahal Library, Thanjavur.

पक्षिराजध्यानम्

अमृतकलशहस्तं कान्ति संपूर्णदेहं
सकलविबुधवन्द्यं वेदशास्त्रैरचिन्त्यम् ।
विबुधसुलभपक्षैर्धूयमानाण्डगोळं
सकलविषविनाशं चिन्तयेत्पक्षिराजम् ।।

பக்ஷிராஜ-த்யானம்

அம்ருதகலசஹஸ்தம் காந்தி ஸம்பூர்ணதேஹம்
ஸகலவிபுதவந்த்யம் வேதசாஸ்த்ரைரசிந்த்யம் ।
விபுதஸுலபபக்ஷைர்தூயமாநாண்டகோளம்
ஸகலவிஷவிநாசம் சிந்தயேத்பக்ஷிராஜம் ॥

பொருள் : அம்ருதகலசத்தைக் கையிலேந்தியவரும், உடல் முழுவதும் ஜ்வலிக்கின்றவரும், எல்லாத் தேவர்களாலும் வணங்கப்பெற்றவரும், வேதசாஸ்திரங் களாலும் நினைக்கவொண்ணாப் புகழ்பெற்றவரும், தன்னிரு சிறகுகளின் உதவியால் உலகையே எளிதில் வலம் வரக்கூடியவரும், நஞ்சனைத்தையும் நாசம் செய்ய வல்லவருமான பறவைகட்கு அரசனைத் தியானிக்க (நினைக்க)வேண்டும்.

पञ्चमुखहनुमद्-ध्यानम्

वन्दे वानरनारसिंहखगराट्क्रोडाश्ववक्त्राञ्चितं
दिव्यालङ्करणं त्रिपञ्चनयनं देदीप्यमानं रुचा ।
हस्ताब्जैरसिखेटपुस्तकसुधाकुम्भाङ्कुशादीन्हलं
खद्योगं (खट्वाङ्गं) फणिभूरहं(हौ)च दधतं सर्वारि गर्वापहम् ।।
(S. 230 / B. 6889, xx P. No. 119)

பஞ்சமுகஹநுமத்-த்யானம்

வந்தே வானரநாரஸிம்ஹககராட்க்ரோடாச்வவக்த்ராஞ்சிதம்
திவ்யாலங்கரணம் த்ரிபஞ்சநயனம் தேதீப்யமானம் ருசா ।
ஹஸ்தாப்ஜைரஸிகேடபுஸ்தகஸுதாகும்பாங்குசாதீந்ஹலம்
கத்யோகம்(கட்வாங்கம்)பணிபூரஹம்(ஹௌ)ச ததம் ஸர்வாரி கர்வாபஹம் ॥

பொருள் : அனுமன், நரஸிம்மன், கருடன், வராஹன், குதிரை ஆகிய ஐந்து முகத்தோடும், அழகியதாக அலங்கரிக்கப்பட்டும், 15 கண்களோடு விளங்குபவரும், தன்னுடைய கரங்களில் கத்தி, கேடயம், புத்தகம், அம்ருதகலசம், அங்குசம், கலப்பை,

கட்வாங்கம், பாம்பு ஆகியவற்றைத் தரித்து அனைவருக்கும் எதிரியான கர்வத்தைப் போக்கடிப்பவரான ஐந்துமுக ஆஞ்சநேயரை வணங்குகின்றேன்.

## शिवध्यानम्

वन्दे हरं वरदशूलकपालहस्तं
साभीतिमद्रिसुतयोज्वलदेहकान्तिम् ।
वामोरुपीठगतया निजवामहस्त-
न्यस्तारुणोत्पलयुजा परिरब्धदेहम् ।।

(S. 191 / B. 6848)

சிவ-த்யானம்

வந்தே ஹரம் வரதசூலகபாலஹஸ்தம்
ஸாபீதிமத்ரிஸுதயோஜ்வலதேஹகாந்திம் ।
வாமோருபீடகதயா நிஜவாமஹஸ்த-
ந்யஸ்தாருணோத்பலயுஜா பரிரப்ததேஹம் ॥

பொருள் : வரதமுத்திரை, சூலம், கபாலம், அபயம் ஆகியவற்றைக் கைகளில் பெற்றவரும், உன்னதமான தேககாந்தியுடைய மலைமகளுடன் உறைபவரும், தன்னுடைய இடது கையை இடது தொடையில் வைத்துள்ளவரும், அருணோதயம்போல் சிவந்தும் உத்பலமலர்போலும், விபூதியால் பூசப்பெற்ற உடலை உடையவருமான சிவபெருமானை வணங்குகிறேன்.

## शङ्करनारायणध्यानम्

शूलं चक्रं पाञ्चजन्यं कपालं दधतं करैः ।
स्वस्वभूषार्धनीलार्धदेहं हरिहरं भजे ।।

(S. 7532. P. No. 404. Prapancasarasarasangraha)

சங்கரநாராயண-த்யானம்

சூலம் சக்ரம் பாஞ்சஜந்யம் கபாலம் ததம் கரை: ।
ஸ்வஸ்வபூஷார்தநீலார்ததேஹம் ஹரிஹரம் பஜே ॥

பொருள் : வலது மேற்கையில் சூலத்தையும், இடது மேற்கையில் ஆழினையும், இடது கீழ்க்கையில் பாஞ்சஜன்னியத்தையும் (சங்கினையும்) வலது கீழ்க்கையில் கபாலத்தையும் (ஓடும்) கொண்டு தத்தம் உருவத்திற்குரிய அணிகலன்களை அணிந்து நீலநிறத்தோடு கூடிய ஹரிஹரமூர்த்தியை வணங்குகிறேன்.

## सुब्रह्मण्यध्यानम्

मयूरवरमारूढो द्विभुजो बालरूपधृक् ।
कुक्कुटं वामहस्ते तु शक्तिं दक्षिणतो न्यसेत् ।।

(Hayasirsha - XXIV. S. 7532. P. No. 404.)

ஸுப்ரஹ்மண்ய-த்யானம்

மயூரவரமாரூடோ த்விபுஜோ பாலரூபத்ருக் ।
குக்குடம் வாமஹஸ்தே து சக்திம் தக்ஷிணதோ ந்யஸேத் ॥

பொருள்: பால உருவத்தினைப் போன்று இரண்டு கைகளுடன் விளங்குபவரும், உயர்ந்ததான மயிலை வாகனமாக உடையவரும், சேவலைத் தன் இடது கையிலும், சக்த்யாயுதத்தைத் தன் வலது கையிலும் அமையப்பெற்றவராய் ஸ்ரீஸுப்ரமண்யரை நிறுவவேண்டும்.

## वीरशरभध्यानम्

अष्टाङ्घ्रिश्च सहस्रबाहुरनलछाया शिरो युग्मभृत्
द्वित्रियक्षोऽतिजवो द्विपुच्छ उदितः साक्षान्नृसिंह्मं सह ।
अर्धेनापि मृगाकृतिः पुनरथोऽप्यर्धेन पक्ष्याकृतिः
श्रीवीरश्शरभः स पातु रुचिरं नीत्वा सदा मां हृदि ।।

(S. 738. P. No. 7192)

வீரசரப-த்யானம்

அஷ்டாங்க்ரிச்ச ஸஹஸ்ரபாஹுரநலசாயா சிரோ யுக்மப்ருத்
த்வித்ரியக்ஷோऽதிஜவோ த்விபுச்ச உதித: ஸாக்ஷாந்ந்ருஸிஹ்மம் ஸஹ ।
அர்தேநாபி ம்ருகாக்ருதி: புனரதோऽப்யர்தேந பக்ஷ்யாக்ருதி:
ஸ்ரீவீரச்சரப: ஸ பாது ருசிரம் நீத்வா ஸதா மாம் ஹ்ருதி ॥

பொருள் : எட்டு கால்களுடனும், ஆயிரம் கைகளுடனும், அனல், சாயை ஆகிய இரு தலைகளுடனும், ஒவ்வொரு தலைக்கும் தலா மூன்று கண்களுடனும் மிக விரைவுடனும், இரு வால்களுடனும், ஸாக்ஷாத் ந்ருஸிம்மத்தைப் போன்றும் பாதிக்கு மேல் விலங்கு உருவும், பாதியளவில் பறவை உருவும் கொண்டு விளங்கும் ஸ்ரீவீரசரபம் எப்போதும் என் மனதில் குடிகொண்டு என்னைக் காக்கட்டும்.

सरस्वतीलक्षणम्

चतुर्भुजां द्विनेत्रां च श्वेतवर्णां तथैव च ।
अक्षमालां च सव्ये तु पुस्तकं वामपार्श्वके ।।

अभयं दक्षिणे हस्ते गण्डिकां वामपार्श्वके ।
पद्मासनसमायुक्तां सर्वाभरणभूषिताम् ।।
सर्वालङ्कारसंयुक्तां सरस्वतीं प्रपूजयेत् ।।

(C.V. - P. No. 116)

ஸரஸ்வதீலக்ஷணம்

சதுர்புஜாம் த்விநேத்ராம் ச ச்வேதவர்ணாம் ததைவ ச ।
அக்ஷமாலாம் ச ஸவ்யே து புஸ்தகம் வாமபார்ச்வகே ॥

அபயம் தக்ஷிணே ஹஸ்தே கண்டிகாம் வாமபார்ச்வகே ।
பத்மாஸநஸமாயுக்தாம் ஸர்வாபரணபூஷிதாம் ॥
ஸர்வாலங்காரஸம்யுக்தாம் ஸரஸ்வதீம் ப்ரபூஜயேத் ॥

பொருள் : நாற்கரம், இரண்டு கண்கள், வெண்மையான நிறம் ஆகியவற்றுடன் அக்ஷமாலையை மேல் வலது கையிலும், புத்தகத்தை மேல் இடது கையிலும் கொண்டு, கீழ் வலது கையினை அபய முத்திரையாகவும் கீழ் இடது கையில் கமண்டலத்தையும் பெற்று, தாமரைமீது வீற்றிருப்பவரும், அணிகலன்களைப பூண்டு திகழ்பவரும், ஸகலவிதமான அலங்காரத்துடன் காட்சி தருபவருமான ஸரஸ்வதிதேவியை பூசித்து வணங்குதல் வேண்டும்.

वनदुर्गाध्यानम्

हेमप्रख्यामिन्दुखण्डात्तमौलीं
शङ्खारिष्टाभीतिहस्तां त्रिणेत्राम् ।
हेमाब्जस्थां पीतवस्त्रां प्रसन्नां
देवीं दुर्गां दिव्यरूपां नमामि ।।

(Cata XX- P. No. 180; S. No. 323 / B. 6978)

வனதுர்கா-த்யானம்

ஹேமப்ரக்யாமிந்துகண்டாத்தமௌலீம்
சங்காரிஷ்டாபீதிஹஸ்தாம் த்ரிணேத்ராம் ।

ஹேமாப்ஜஸ்தாம் பீதவஸ்த்ராம் ப்ரஸன்னாம்
தேவீம் துர்காம் திவ்யரூபாம் நமாமி ||

பொருள் : பொன்போல் ஒளிர்பவரும், பிறைச்சந்திரனை மௌலியில் புனைந்தவரும், சங்கம், சக்ரம், அபயம் ஆகியவற்றைக் கையில் கொண்டு முக்கண்ணோடு விளங்குபவரும், பொற்றாமரையில் வீற்றிருப்பவளும், மஞ்சள் ஆடையை அணிந்திருப்பவரும், கருணைபொழியும் முகத்துடன் இலங்குபவளுமான துர்காதேவியின் திவ்ய ரூபத்தை வணங்குகிறேன்.

## कुबेरध्यानम्

सुपीनदेहो यक्षेशो हारकेयूरभूषितः ।
सर्वलक्षणसम्पूर्णो गदाशङ्खधरोऽनघः ।।

नानारत्नोज्वलेनाथ मकुटेनविभूषितः ।
कर्तव्यो वामनाकारो द्विभुजो नरवाहनः ।।

(Hayasirsha XXV, S. No. 4539, P. No. 245)

குபேர-த்யானம்

ஸுபீனதேஹோ யக்ஷேசோ ஹாரகேயூரபூஷித:।
ஸர்வலக்ஷணஸம்பூர்ணோ கதாசங்கதரோऽநக: ||

நாநாரத்நோஜ்வலேநாத மகுடேனவிபூஷித:।
கர்தவ்யோ வாமநாகாரோ த்விபுஜோ நரவாஹன : ||

பொருள் : நன்கு பருத்த உடலையுடையவரும், யக்ஷர்களின் நாயகரும், கழுத்தணி, கேயூரம் (தோள்பட்டைக் கீழும் முழங்கைக்கு மேலுமுள்ள நடுப்பகுதியில் அணியும் அணி) ஆகியவற்றை அணிந்தவரும், அனைத்து லக்ஷணமும் பொருந்தியவரும், கதை, சங்கு ஆகியவற்றைத் தரித்தவரும், பாபமற்றவரும், பல்வேறு வகை ரத்னங்களால் மிளிர்கின்ற மகுடத்தால் அலங்கரிக்கப் பெற்றவரும், இருகைகளோடும், மனிதவாகனரும், குட்டை வடிவினருமாக குபேரரைச் செய்யவேண்டும்.

## क्षेत्रपालध्यानम्

क्षेत्रपालं चतुर्बाहुं करण्डीमकुटोज्वलम् ।
दंष्ट्रां करालवदनं भ्रकुटीकुटिलेक्षणम् ।।

वामे करे दण्डधरं मुख्ये वामेतरे करे ।
दधानं तर्जनीमुद्रां पाशाङ्कुशममुख्ययोः ।।

(पाद्म. क्रिया. xxii, S. 4539; P. No. 246)

க்ஷேத்ரபால-த்யானம்

க்ஷேத்ரபாலம் சதுர்பாஹும் கரண்டமகுடோஜ்வலம் ।
தம்ஷ்ட்ராம் கராளவதனம் ப்ரகுடிகுடிலேக்ஷணம் ॥

வாமே கரே தண்டதரம் முக்யே வாமேதரே கரே ।
ததானம் தர்ஜநீமுத்ராம் பாசாங்குசமமுக்யயோ: ॥

பொருள் : நான்கு கைகள், நீண்ட அமைப்பில் பூக்குடலைப் போன்று வளையங்கள் பொருந்தியதுபோல் அமைக்கப்பட்ட கரண்டமகுடம், கோரைப் பற்கள், புருவ நெறிப்புடன் கூடிய கண்கள், அச்சம்தரும் முகம், இடது கீழ்க்கையில் கோல், வலது கீழ்க்கையில் ஆள்காட்டி விரலை மட்டும் உயரே தூக்கி நடு மோதிர சிறு விரல்களைக் கட்டைவிரலால் அடக்கி மடக்கி வைத்திருக்கும் தர்ஜனீ முத்திரை, இடது மேற்கையில் பாசம் (பாசக்கயிறு) வலது மேற்கையில் அங்குசம் (கோடரி) ஆகியவை கொண்டு விளங்குபவராக க்ஷேத்ரபாலரை அமைக்கவேண்டும்.

## दक्षिणामूर्तिध्यानम्

कपर्दिनं चण्डजटाकलापं
त्रिणेत्रमिन्दुप्रतिमं स्मितोज्वलम् ।
चतुर्भुजं ज्ञानवदक्षसूत्रं
पुस्ताग्रहस्तं हृदि भावये सदा ।।

(S.118 4; 5180 / 543)

தக்ஷிணாமூர்த்தி-த்யானம்

கபர்தினம் சண்டஜடாகலாபம்
த்ரிணேத்ரமிந்துப்ரதிமம் ஸ்மிதோஜ்வலம் ।
சதுர்புஜம் ஞானவதக்ஷஸூத்ரம்
புஸ்தாக்ரஹஸ்தம் ஹ்ருதி பாவயே ஸதா ॥

பொருள் : தனது சடைமுடியினையே தலையணியாகக் கொண்டு திகழ்பவரும், மூன்று கண்களைப் பெற்றவரும், திங்களின் ஒளிபோல் மின்னுபவரும், சிறுநகையோடு காட்சி தருபவரும், நான்கு கைகளுடையவரும், ஞானமுத்திரை, அக்ஷமாலை, பரசு

(கோடரி), புஸ்தகம் ஆகியவற்றைப் பெற்றிருப்பவருமான தக்ஷிணாமூர்த்தியை எப்போதும் மனத்தினில் நினைத்தல் வேண்டும்.

## दक्षिणामूर्ति-ध्यानम्

स्फटिकरजतवर्णं मौक्तिकीमक्षमालां
अमृतकलशविद्याज्ञानमुद्रां कराब्जैः ।
दधतमुरगकक्ष्यं चन्द्रचूडं त्रिणेत्रं
विधृत विविधभूषं दक्षिणामूर्तिमीडे ।।

(S. 240 / B. 6899)

தக்ஷிணாமூர்த்தி-த்யானம்

ஸ்படிகரஜதவர்ணம் மௌக்திகீமக்ஷமாலாம்
அம்ருதகலசவித்யா ஜ்ஞாநமுத்ராம் கராப்ஜை: ।
ததமுரககக்ஷ்யம் சந்த்ரசூடம் த்ரிணேத்ரம்
வித்ருத விவிதபூஷம் தக்ஷிணாமூர்த்திமீடே ॥

பொருள் : ஸ்படிகணியைப் போன்று வெண்ணிறமான தேஹத்தை உடையவரும், முத்துக்களாலான அக்ஷமாலையினைப் பெற்றவரும், ஞானமுத்திரையால் உபதேசம் செய்பவரும், பாம்பினை அணிந்தவரும், சந்திரனைத் தலையில் தரித்தவரும், மூன்று கண்களைப்பெற்றவரும், பல்வேறு வகையான அணிகலன்களை அணிந்துள்ளவருமான தக்ஷிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

## चामुण्डादेवीध्यानम्

शङ्खारिचापशरभिन्नकरां त्रिणेत्रां
तिग्मेतरांशुकलया विलसत्किरीटाम् ।
सिंह्मस्थितां स सुरसिद्धनतां च दुर्गां
दूर्वा निभां (च) दुरितौघहरां नमामि ।।

(S. 251 / No. less - 3)

சாமுண்டாதேவி-த்யானம்

சங்காரிசாபசரபின்னகராம் த்ரிணேத்ராம்
திக்மேதராம்சுகலயா விலஸத்கிரீடாம் ।
ஸிஹ்மஸ்திதாம் ஸ ஸுரஸித்தனதாம் ச துர்காம்
தூர்வா நிபாம் (ச) துரிதௌகஹராம் நமாமி ॥

பொருள் : சங்கு, சக்ரம், வில், அம்பு ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தியவரும், மூன்று கண்களுடன் விளங்குபவரும், சந்திரகாந்தியோடு விளங்கும் கிரீடத்தை அணிந்தவரும், சிம்ம வாகனத்தில் அமர்ந்துள்ளவரும், தேவலோகத்து சித்தாதியரால் வணங்கப்பட்டவரும், அருகுபோல் பசுமை நிறமுடையவரும், பாபத்தினை நசிப்பவருமான துர்காதேவியை வணங்குகிறேன்.

## देवीध्यानम्

अङ्कुशं चाक्षसूत्रं च पाशपुस्तकधारिणीम् ।
मुक्ताहारसमायुक्तां देवीं ध्यायेच्चतुर्भुजाम् ।।

(B. 12110 / D.19949)

தேவி-த்யானம்

அங்குசம் சாக்ஷஸூத்ரம் ச பாசபுஸ்தகதாரிணீம் ।
முக்தாஹாரஸமாயுக்தாம் தேவீம் த்யாயேச்சதுர்புஜாம் ॥

பொருள் : அங்குசம், அக்ஷமாலை, பாசக்கயிறு, புஸ்தகம் ஆகியவற்றைக் கையில் தரித்துள்ளவரும், முத்துமாலையை அணிந்திருப்பவருமான நான்கு புஜங்களுடன் கூடிய தேவியை தியானம் புரியவேண்டும்.

## बालाध्यानम्

वरदाभयपुस्तकाक्षमाला
विलसत्पाणिसरोजभासमानम् ।
शरदिन्दुसहस्रकोटिसदृशां
परमानन्दमयीं प्रणौमि बालाम् ।।

(B. 8535 / D. 20073)

பாலா-த்யானம்

வரதாபயபுஸ்தகாக்ஷமாலா
விலஸத்பாணிஸரோஜபாஸமானம் ।
சரதிந்துஸஹஸ்ரகோடிஸத்ருசாம்
பரமானந்தமயீம் ப்ரணௌமி பாலாம் ॥

பொருள் : வரதமுத்திரை, அபயமுத்திரை, புஸ்தகம், அக்ஷரமாலை ஆகிய வற்றைத் தாமரைபோன்ற தனது கரங்களில் தரித்து விளங்குபவரும், ஆயிரம் கோடி சரத்கால சந்திரர்கள் போன்று ஒளிர்பவரும், பரமானந்தத்துடன் காணப்படுபவருமான பாலாதேவியை வணங்குகிறேன்.

महाविद्याध्यानम्

वराङ्कुशं पाशमहातिमुद्रां
करैर्वहन्तीं कमलासनस्थाम् ।
बालार्ककोटिप्रतिभां त्रिणेत्रां
भजेहमाद्यां जगदीश्वरीं ताम् ।।

(B. 12096 / D. 20193)

மஹாவித்யா-த்யானம்

வராங்குசம் பாசமஹாதிமுத்ராம்
கரைர்வஹந்தீம் கமலாஸனஸ்தாம் ।
பாலார்க்ககோடிப்ரதிபாம் த்ரிணேத்ராம்
பஜேஹமாத்யாஞ்ஜகதீச்வரீம் தாம் ॥

பொருள் : வரதமுத்திரை, அங்குசம், பாசக்கயிறு, மஹாதிமுத்திரை முதலான வற்றைத் தன் கரங்களில் கொண்டவரும், கமலாசனத்தில் அமர்ந்துள்ளவரும், கோடிக்கணக்கான இளஞாயிறுகளின் ஒளிபோல் திகழ்பவரும், மூன்று கண்கள் உடையவருமான அந்த உலகநாயகியான மகாவித்யையை நான் வணங்குகிறேன்.

लक्ष्मीध्यानम्

या सा पद्मासनस्था विपुलकटितटी पद्मपत्रायताक्षी
गम्भीरावर्तनाभिस्तनभरनमिता शुभ्रवस्त्रोत्तरीया ।
लक्ष्मीदिव्यैर्गजेन्द्रैर्मणिगणखचितैस्स्थापिता हेमकुम्भै-
र्नित्यं सा पद्महस्ता मम भजगृहे सर्वमाङ्गल्ययुक्ता ।।

(B. 11084 / C. V. No. 116)

லக்ஷ்மீ-த்யாநம்

யா ஸா பத்மாஸனஸ்தா விபுலகடிதடீ பத்மபத்ராயதாக்ஷீ
கம்பீராவர்தநாபிஸ்தனபரநமிதா சுப்ரவஸ்த்ரோத்தரீயா ।
லக்ஷ்மீதிவ்யைர்கஜேந்த்ரைர்மணிகணகசிதைஸ்ஸ்தாபிதா ஹேமகும்பைர்-
நித்யம் ஸா பத்மஹஸ்தா மம பஜக்ருஹே ஸர்வமாங்கல்யயுக்தா ॥

பொருள் : யாவளொருவள் பத்மாஸனத்தில் காட்சி தருபவளாயும், விஸ்தாரமான இடுப்புப் பகுதியை உடையவளாயும், தாமரை இதழ்போன்ற நீண்ட கண்களைப் பெற்றவளாயும், ஆழம், வட்டம் ஆகியவற்றுடன் கூடிய உந்தியை உடையவளாயும், நகில்களின் பாரத்தால் சற்று வணங்கிய உடலைப் பெற்றவளாயும், வெண்மையான வஸ்த்ரோத்தரீயங்களை அணிந்தவராயும், இருமருங்கும் பொற்கலசம் கொண்டு

கஜேந்திரர்களால் அபிஷேகம் செய்யப்படுபவராயும், தாமரை மலர்களைத் தன் கைகளில் பெற்று விளங்குபவராயும் அனைத்து நன்மைகளையும் அளிப்பவராயுமுள்ள அந்த லக்ஷ்மி என் வீட்டில் நித்யவாஸம் செய்யட்டும்.

## लिङ्गध्यानम्

नराकारं ज्योतिर्मयं कमलमत्यन्तममलं
महादीर्घं स्थूलं निरवयवमत्यन्तरुचिरम् ।
महानाथं लिङ्गं शमय न मुनिध्येयमतुलं
मनो मार्गातीतं हरिहरहयन्नौमि लिङ्गं च हृदये ।।

(B. 11084 / C. V. No. 116)

லிங்க-த்யானம்

நராகாரம் ஜ்யோதிர்மயம் கமலமத்யந்தமமலம்
மஹாதீர்கம் ஸ்தூலம் நிரவயவமத்யந்தருசிரம் ।
மஹாநாதம் லிங்கம் சமய ந முனித்யேயமதுலம்
மனோ மார்காதீதம் ஹரிஹரஹயன்நௌமி லிங்கம் ச ஹ்ருதயே ॥

பொருள் : மனித உருவாயும், ஜோதி வடிவாயும், தாமரை போன்றும், மிகவும் சுத்தமாயும், நீண்டும், பருத்தும், அவயங்களின்றியதாயும், மிக்க அழகுடையதாயும், முனிவர்களால் துதிக்கப்பெற்றதாயும், ஒப்பற்றவராயும், மனத்தாலும் அறியவொண்ணாத நிலையிலிருப்பவராயும், விஷ்ணு-சிவ-ப்ரம்ம ஸ்வரூபியுமான லிங்கத்தை இதயத்தில் தியானிக்கவேண்டும்.

## दुर्गाध्यानम्

कालीं चतुर्भुजां चैव श्यामवर्णां सुयौवनाम् ।
अभयं ऊरुहस्तां च शङ्खचक्रयुतेश्वरीम् ।।
महिषोपरिस्थितां दुर्गां ध्यायेद्गौरीं शिवप्रियाम् ।।

(B. 11084 / C. V. No. 116)

துர்கா-த்யானம்

காலீம் சதுர்புஜாம் சைவ ச்யாமவர்ணாம் ஸுயௌவனாம் ।
அபயம் ஊருஹஸ்தாம் ச சங்க்கசக்ரயுதேச்வரீம் ॥
மஹிஷோபரிஸ்திதாம் துர்காம் த்யாயேத்கௌரீம் சிவப்ரியாம் ॥

பொருள் : நாற்கரங்கள், கருமை நிறம், வாலிபம், அபயஹஸ்தம், ஊருஹஸ்தம், சங்கு, சக்ரம் ஆகியவற்றுடன் மகிஷத்தின்மேல் காட்சி தருபவரும், சிவனுக்குப் ப்ரியையும், கௌரி காளி ஸ்வரூபியுமான துர்கையைத் தியானிக்கவேண்டும்.

## शरभध्यानम्

चन्द्रार्काग्नित्रिदृष्णौ कुलिशनखवरं चञ्चलयुद्युग्रजिह्वा
काली दुर्गा च पक्षौ हृदय जठरकौ भैरवो बाडवाग्निः ।
ऊरुस्तौ व्याधिमृत्यूचटुलनखवरा चण्डवातादि वेगाः
संहर्ता सर्वशत्रून् सुजयति शरभः सालुवो पक्षिराजः ।।

சரப-த்யானம்

சந்த்ரார்காக்னித்ரித்ருஷ்ணௌ குலிசநகவரம் சஞ்சலயுத்யுக்ரஜிஹ்வா
காலீ துர்கா ச பக்ஷௌ ஹ்ருதய ஜடரகௌ பைரவோ பாடவாக்னி: ।
ஊருஸ்தௌ வ்யாதிம்ருத்யூசடுலநகவரா சண்டவாதாதி வேகா:
ஸம்ஹர்தா ஸர்வசத்ருன் ஸுஜயதி சரப: ஸாளுவோ பக்ஷிராஜ: ॥

பொருள் ; திங்கள், ஆதவன், அக்னி ஆகிய மூன்றைக் கண்களாகப் பெற்றவரும், வஜ்ராயுதம் போன்ற நக ப்ரதேசங்களை உடையவரும், சஞ்சரிக்கின்ற (தொங்குகின்ற) உக்ரமான நாக்கை உடையவரும், காளியையும் துர்கையையும் இரண்டு சிறகுகளாகக் கொண்டவரும், பைரவபாடபாக்னிகளை இதய நாபிளாக வைத்துள்ளவரும், வியாதி மிருத்யுக்களை தொடைகளாகப் பெற்றவரும், தீக்ஷ்ணமான நகங்களை உடையவரும், புயற்காற்றைப்போல வேகமுடையவரும், எதிரிகள் அனைவரையும் ஒழிப்பவராயும், ஸாளுவ பக்ஷிராஜனாகிற சரபர் விளங்குகின்றார்.

## वीरभद्रध्यानम्

नीलाभं रक्तवस्त्रं भृकुटियुतमुखं ज्वालकेशं त्रिणेत्रं
सव्ये खड्गं च दण्डं त्रिशिखपरशुकं वामभागे कपोलम् ।
खेटं बण्डामहाद्यं मुसलमपि दधत्किङ्किणी मालयाढ्यं
सिद्धद्वर्गीतसार्थो स्फुरतु मम पुरो वीरभद्रस्वरूपम् ।।

(C. V. No. 116)

வீரபத்ர-த்யானம்

நீலாபம் ரக்தவஸ்த்ரம் ப்ருகுடியுதமுகம் ஜ்வாலகேசம் த்ரிணேத்ரம்
ஸவ்யே கட்கம் ச தண்டம் த்ரிசிகபரசுகம் வாமபாகே கபோலம் ।
கேடம் பண்டாமஹாத்யம் முஸலமபி ததத்கிங்கிணீ மாலயாட்யம்
ஸிம்மத்வர்கீதஸார்தோ ஸ்புரது மம புரோ வீரபத்ரஸ்வரூபம் ॥

பொருள் : நீலவர்ணத்துடன் விளங்குபவரும், ரக்தவஸ்த்ரம், புருவப் பகுதியோடு கூடிய முகம், ஜ்வாலை போன்ற கேசம், மூன்று கண்கள் ஆகியவற்றுடன் திகழ்பவரும், வலது கைகளில் கத்தி, தண்டம், முச்சிகையுள்ள ஆயுதம், கோடரி போன்றவற்றைப் பெற்றவரும், இடது கைகளில் கபாலம், கேடயம், முசலம் (உலக்கை) போன்றவற்றை உடையவரும் கிங்கிணி மாலையைத் தரித்தவருமாகிய வீரபத்திரருடைய ஸ்வரூபம் எனது முன்பு தோன்றட்டும்.

## वीरभद्रध्यानम्

नीलं नीलाभ्रवर्णं विकसितवदनं नीलकण्ठं त्रिणेत्रं
कालं कालाग्निरुद्रं करतलकमलं खड्गखेटं कपालम् ।
भीमं भीमाट्टहासं त्रिभुवनविजयं वीरभद्रं प्रसन्नं
वन्देहं शङ्कराख्यं सकलरिपुहरं प्राणसंहारवीरम् ॥

வீரபத்ர-த்யானம்

நீலம் நீலாப்ரவர்ணம் விகஸிதவதனம் நீலகண்டம் த்ரிணேத்ரம்
காலம் காலாக்னிருத்ரம் கரதலகமலம் கட்ககேடம் கபாலம் ।
பீமம் பீமாட்டஹாஸம் த்ரிபுவனவிஜயம் வீரபத்ரம் ப்ரஸன்னம்
வந்தேஹம் சங்கராக்யம் ஸகலரிபுஹரம் ப்ராணஸம்ஹாரவீரம் ॥

பொருள் : நீலமாயும், நீல மழை முகில் போன்றும், மலர்ந்த முகத்துடனும், நீலக்கழுத்தை உடையவரும், மூன்று கண்களை உடையவரும், காலனாயும், காலாக்னி ருத்திரனாயும், கரதலத்தில் கமலம் பெற்றவரும், கத்தி, கேடயம், கபாலம் ஆகியவற்றுடன் பயங்கரமாயும், பயங்கரமான அட்டகாசம் புரிபவராயும் மூவுலகை வெல்பவராயும், மங்களத்தைத் தருவதால் சங்கரன் எனப்படுபவராயும், அனைத்து எதிரிகளை அழிப்பவராயும் விளங்கும் வீரபத்திரரை நான் வணங்குகிறேன்.

भैरवध्यानम्

एकास्यं तु चतुर्भुजं त्रिणयनं कृष्णं सुवृत्तेक्षणं
शूलं ब्रह्मकपालकं डमरुकं नागं वहन्तं करैः ।
ज्वालाकेशभयङ्करं शशिधरं दंष्ट्रां करालाननं
घण्टा दाम विभूषितं श्वनयुतं श्रीभैरवेशं भजेत् ॥

(C. V. No. 116)

பைரவ-த்யானம்

ஏகாஸ்யம் து சதுர்புஜம் த்ரிணயநம் க்ருஷ்ணம் ஸுவ்ருத்தேக்ஷணம்
சூலம் ப்ரம்மகபாலகம் டமருகம் நாகம் வஹந்தம் கரை: ।
ஜ்வாலாகேசபயங்கரம் சசிதரம் தம்ஷ்ட்ராம் கராளாননனம்
கண்டா தாம விபூஷிதம் ச்வனயுதம் ஸ்ரீபைரவேசம் பஜேத் ॥

பொருள் : ஒரு முகம், நான்கு கைகள், மூன்று கண்கள், கருமைவண்ணம், வட்டமான கண்கள், சூலம், பிரம்மகபாலம், டமருகம், முதலானவற்றைக் கரத்தினில் கொண்டவரும், நாகத்தைத் தரித்திருப்பவரும், ஜ்வாலாகேசத்துடன் பயங்கரமாயும், சந்திரனைத் தலையில் அணிந்தும், கோரைப்பற்களுடன் அச்சம்தரும் முகத்துடனும் மணியோடும், நாயுடனும் விளங்கும் ஸ்ரீபைரவரை வணங்குதல் வேண்டும்.

कालीध्यानम्

एकवक्त्रां चतुर्भुजां सर्पाभरणभूषिताम् ।
शूलं सव्येऽक्षमालां च पूर्णपात्रं च शोभिताम् ॥
प्रेतासनां स्मरेद्देवीं ब्रह्मचामुण्डिरूपिणीम् ॥

(C. V. No. 116)

காளீ-த்யானம்

ஏகவக்த்ராம் சதுர்புஜாம் ஸர்பாபரணபூஷிதாம் ।
சூலம் ஸவ்யேऽக்ஷமாலாம் ச பூர்ணபாத்ரம் ச சோபிதாம் ॥
ப்ரேதாஸனாம் ஸ்மரேத்தேவீம் ப்ரம்மசாமுண்டிரூபிணீம் ॥

பொருள் : ஒரு முகம், நான்கு கைகள் ஆகியவற்றுடன் ஸர்பங்களை ஆபரணமாக அணிந்தவரும், சூலம், அக்ஷமாலைகளை வலது கைகளில் பெற்றவரும், பூர்ண பாத்திரத்துடன் கூடிய பிரம்மசாமுண்டி ஸ்வரூபியும், பிரேதாஸனத்தில் இருப்பவருமான தேவியைத் தியானித்தல் (நினைத்தல்) வேண்டும்.

## मार्यम्बाध्यानम्

दक्षे शूलं सुखड्गं डमरुकमपरे ब्रह्मपात्रं किरीटां
ज्वालामालाविभूषां त्रिणयनसहितां कर्णयोः पत्रके च ।
दक्षालम्बितवामनिद्रितपदां कारण्डिकां उज्वलां
एवं लोकवशीकरीं च शुभदां मारिकां देविरूपाम् ।।

(C. V. No. 116)

மார்யம்பா-த்யானம்

தக்ஷே சூலம் ஸுகட்கம் டமருகமபரே ப்ரம்மபாத்ரம் கிரீடாம்
ஜ்வாலாமாலாவிபூஷாம் த்ரிணயநஸஹிதாம் கர்ணயோ: பத்ரகே ச ।
தக்ஷாலம்பிதவாமநித்ரிதபதாம் காரண்டிகாம் உஜ்வலாம்
ஏவம் லோகவசீகரீம் ச சுபதாம் மாரிகாம் தேவிரூபாம் ॥

பொருள் : வலது கரங்களில் சூலம், கத்தி, இடது கரங்களில் டமருகம்; பிரம்ம பாத்திரம் ஆகியவற்றைப் பெற்றவரும், கிரீடம், ஜ்வலிக்கின்றதான மாலை முதலானவற்றை அணிந்து விளங்குபவரும், மூன்று கண்களை உடையவரும், கர்ணபத்ரத்தைக் காதுகளில் அணிந்தவரும், வலது காலைத் தொங்கவிட்டுள்ளவரும், சுகாஸனமாக மடக்கிவைத்துள்ள இடது காலை உடையவரும், ஜ்வலிக்கின்ற கரண்ட மகுடத்தை உடையவரும், உலகை வசீகரிப்பவரும், சுபத்தைத் தருபவருமான மாரியம்மனை இவ்வாறு (மேற்கூறியவற்றை எல்லாம் மனதில் கொண்டு) தியானிக்க வேண்டும்.

## एल्लैयम्मन्ध्यानम्

अरुणमणिनिभाङ्गां अग्निकेशीं करण्डां
डमरुकयुतशूलां खड्गहस्तां कपालाम् ।
अनलनयननागां आसनं पद्मपीठां
अखिलभुवनमाता रेणुकादेविरूपाम् ।।

(C. V. No. 116)

எல்லையம்மன்-த்யானம்

அருணமணிநிபாங்காம் அக்னிகேசீம் கரண்டாம்
டமருகயுதசூலாம் கட்கஹஸ்தாம் கபாலாம் ।
அநலநயனநாகாம் ஆஸனம் பத்மபீடாம்
அகிலபுவனமாதா ரேணுகாதேவிரூபாம் ॥

பொருள் : செந்நிறமணிகள் போன்றொளிர்பவரும், கரண்ட மகுடத்தின் அக்னி ஜ்வாலை போன்ற கேசத்தை உடையவரும், டமருகம், சூலம், கத்தி, கபாலம் ஆகியவற்றைக் கையில் தரித்தவரும், நெருப்புப் போன்ற கண்கள் உடைய நாகத்தைத் தரித்தவரும், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், லோகமாதாவுமான ரேணுகாதேவியை தியானிக்கவேண்டும்.

गरुडध्यानम्

पिङ्गलाक्षं गरुत्मन्तं स्वर्णवर्णसमप्रभम् ।
कुञ्चितं वामपादं तु दक्षिणं पृष्ठतः स्थितम् ।।

अनन्तो वामकटकं यज्ञसूत्रं तु वासुकिः ।
तक्षको कटिसूत्रं च हारः कार्कोटकस्तथा ।।

पद्मो दक्षिणकर्णे तु महापद्मस्तु वामके ।
शङ्खः शिरःप्रदेशे तु गुलिकस्तु भुजान्तरे ।।
एवं ध्यायेत् त्रिसन्ध्यायां गरुडं क्ष्वेडनाशकम् ।।

(C. V. No. 116 & Vaish-Icono-P. No. 216)

கருட த்யானம்

பிங்களாக்ஷம் கருத்மந்தம் ஸ்வர்ணவர்ணஸமப்ரபம் ।
குஞ்சிதம் வாமபாதம் து தக்ஷிணம் ப்ருஷ்டத: ஸ்திதம் ॥

அநந்தோ வாமகடகம் யஜ்ஞஸூத்ரம் து வாஸுகி: ।
தக்ஷகோ கடிஸூத்ரம் ச ஹார: கார்கோடகஸ்ததா ॥

பத்மோ தக்ஷிணகர்ணே து மஹாபத்மஸ்து வாமகே ।
சங்க: சிர:ப்ரதேசே து குளிகஸ்து புஜாந்தரே ॥
ஏவம் த்யாயேத் த்ரிஸந்த்யாயாம் கருடம் க்ஷ்வேடநாசகம் ॥

பொருள் : விஷத்தை ஒழிப்பவரும், மஞ்சள்நிறக் கண்களுடையவரும், பொன் நிறத்தால் ஒளிர்பவரும், இடது காலைக் குத்திட்டவராய் வலது காலை பின்புறமாய் வைத்திருப்பவரும், அனந்தனைக் கடகமாகவும், வாசுகியை யக்ஞ சூத்ரமாகவும், தக்ஷகனை இடுப்புக் கயிராகவும், கார்க்கோடகனை கழுத்தணியாகவும், பத்மத்தை வலது காதணியாகவும், மகாபத்மத்தை இடது காதணியாகவும் சங்கத்தைத் தலையிலும், குளிகத்தைத் தோள்களிலும் தரித்துள்ள கருடமூர்த்தியை முச்சந்திகளிலும் தியானிக்கவேண்டும்.

## वीराञ्चनेयध्यानम्

श्यामं वर्णसुवर्णकुण्डलधरं कौपीनमौञ्जीधरं
पुच्छं श्रोणिधरं त्रिशूलवदनं यज्ञोपवीतान्वितम् ।
ऊर्ध्वं दक्षिणमुद्धृताभयकरं वामे करे पङ्कजं
लङ्कां रावणराक्षसस्य हनुमद्ध्यानं भजेत्सन्ततम् ।।

(C. V. No. 116-P. No. 19)

வீராஞ்சநேய-த்யானம்

ச்யாமம் வர்ண ஸுவர்ணகுண்டலதரம் கௌபீனமௌஞ்ஜீதரம்
புச்சம் ச்ரோணிதரம் த்ரிசூலவதனம் யஜ்ஞோபவீதாந்விதம் ।
ஊர்த்வம் தக்ஷிணமுத்த்ருதாபயகரம் வாமே கரே பங்கஜம்
லங்காம் ராவணராக்ஷஸஸ்ய ஹநுமத்த்யாநம் பஜேத்ஸந்ததம் ॥

பொருள் : கரிய மேனியனாய், பொற்குண்டலங்களையும், கௌபீனம், மௌஞ்சி (முஞ்சிப்பில்லால் செய்யப்படும் மேகலை) ஆகியவற்றைத் தரித்தும், இடுப்புப் பகுதியில் வாலையும், த்ரிசூலாகாரத்தில் முகமும்கொண்டு யக்ஞோபவீத்தை உடையவராயும், உயரே தூக்கிய நிலையில் வலது கையினை அபயஹஸ்தமாயும், இடது கையில் தாமரை மலரைப் பெற்றும் இலங்கேசனுக்கு எதிரியான அனுமனின் தியானத்தை எப்போதும் தியானிக்கவேண்டும்.

## हनुमद्ध्यानम्

चन्द्राभं चरणारविन्दवदनं कौपीनमौञ्जीधरं
बालं श्रोणिधरं त्रिशूलवदनं यज्ञोपवीतान्वितम् ।
हस्ताभ्यामवलम्ब्य साञ्जलिपुटं हारावलीकुण्डलं
पश्चाल्लम्बशिखःप्रसन्नवदनं श्रीवायुपुत्रं भजेत् ।।

(C. V. No. 116-P. No. 20)

ஹநுமத்-த்யானம்

சந்த்ராபம் சரணாரவிந்தவதனம் கௌபீநமௌஞ்ஜீதரம்
பாலம் ச்ரோணிதரம் த்ரிசூலவதனம் யஜ்ஞோபவீதாந்விதம் ।
ஹஸ்தாப்யாமவலம்ப்ய ஸாஞ்ஜலிபுடம் ஹாராவளீகுண்டலம்
பச்சால்லம்பசிக:ப்ரஸந்நவதனம் ஶ்ரீவாயுபுத்ரம் பஜேத் ॥

பொருள் : திங்கள் போன்றொளிர்பவரும், தாமரை போன்ற கால்களையும், முகத்தினையும் உடையவரும், கௌபீனம், மௌஞ்சி ஆகியவைத் தரித்தவரும், இடுப்புப் பகுதியில் வாலை உடையவரும், த்ரிசூலம் போன்ற முகத்தை உடையவரும், யக்ஞோபவீதத்தை அணிந்திருப்பவரும், தன்னிரு கைகளால் இறைவனைத் தொழுகின்ற (அஞ்சலி) முத்திரையோடும், கழுத்தணி, குண்டலம் போன்றவற்றைத் தரித்துள்ளவரும், தொங்கவிடப்பட்ட சிகையை உடையவரும், மலர்ந்த (பிரகாசமான) முகம் பெற்றவருமான ஸ்ரீ வாயு மைந்தனைத் தியானிக்கவேண்டும்.

## वरदराजध्यानम्

ध्यायेन्नीलाम्बरालकं समनिशं श्रीवत्सवक्षाङ्कितं
श्रीभूमीसहितं सुदर्शनकरं शङ्खं वरञ्चाभयम् ।
भास्वद्रत्नकिरीटकौस्तुभमणी केयूरहारोल्लसत्-
श्रीमद्विष्णुरथध्वजाब्जनयनं इन्दुं स्वमन्दस्मितम् ।।

(C. V. No. 116-P. No. 20)

வரதராஜ-த்யானம்

த்யாயேந்நீலாம்பராலகம் ஸமநிசம் ஸ்ரீவத்ஸவக்ஷாங்கிதம்
ஸ்ரீபூமீஸஹிதம் ஸுதர்சனகரம் சங்கம் வரஞ்சாபயம் ।
பாஸ்வத்ரத்னகிரீடகௌஸ்துபமணீ கேயூரஹாரோல்லஸத்
ஸ்ரீமத்விஷ்ணுரதத்வஜாப்ஜநயனம் இந்தும் ஸ்வமந்தஸ்மிதம் ।

பொருள் : நீல நிறப்பட்டாடை போன்ற கருங்கூந்தலைப் பெற்றவரும், ஸ்ரீவத்ஸம் என்னும் மருவினை இதயத்தில் கொண்டு திகழ்பவரும், ஸ்ரீதேவி-பூதேவி ஆகிய உபயநாச்சியார்களுடன் கூடியவரும், சக்ரம், சங்கு, வரதம், அபயம் ஆகிய ஹஸ்தங்களுடன் விளங்குபவரும், ஜ்வலிக்கின்ற ரத்னகிரீட கௌஸ்துபமணிகளுடன் திகழ்பவரும், கேயூரம், ஹாரம், கருடக்கொடி, ஊர்தி ஆகியவற்றுடன் தாமரைக் கண்ணனாய்த் திகழ்பவரும், திங்களைப் பழிக்கக்கூடிய வகையில் புன்முறுவல் பூத்த முகம் உடையவருமான வரதராஜனை எப்போதும் தியானிக்கவேண்டும்.

## विष्णुध्यानम्

श्यामं नीलं कालमेघस्वरूपं
पद्माकारं नेत्रयुग्मं किरीटम् ।
शङ्खं चक्रं ऊरुहस्ताभयं स्यात्
श्रीवत्साङ्कं विष्णुमूर्तिं नमामि ।।

(C. V. No. 116-P. No. 20)

விஷ்ணு-த்யாநம்

ச்யாமம் நீலம் காலமேகஸ்வரூபம்
பத்மாகாரம் நேத்ரயுக்மம் கிரீடம் ।
சங்கம் சக்ரம் ஊருஹஸ்தாபயம் ஸ்யாத்
ஸ்ரீவத்ஸாங்கம் விஷ்ணுமூர்த்திம் நமாமி ॥

பொருள் : கருமை, நீலம், நீருண்ட மேகம் போன்ற நிறம் கொண்டவனும், பத்மம் (தாமரை) போன்ற கண்ணிணைகள், கிரீடம், சங்கம், சக்கரம், கடிஹஸ்தம், அபயஹஸ்தம் ஆகியவற்றுடன் ஸ்ரீவத்ஸாங்கம் (ஸ்ரீவத்ஸம் என்ற மருவினை) உடைய விஷ்ணுமூர்த்தியை வணங்குகிறேன்.

## कोदण्डरामध्यानम्

वामे कोदण्डदण्डं निजकरकमले दक्षिणे बाणमेकं
पश्चाद्भागेन नित्यं दधतमपि सोल्लसत्तूणिभारम् ।
वामे वामांसलाभ्यां सहललिततनुं जानकीलक्ष्मणाभ्यां
रामं श्यामं भजेऽहं प्रणमतजनितं खेदविच्छेदरक्षम् ॥

(C. V. No. 116-P. No. 21)

கோதண்டராம-த்யாநம்

வாமே கோதண்டதண்டம் நிஜகரகமலே தக்ஷிணே பாணமேகம்
பச்சாத்பாகேன நித்யம் ததுதமபி ஸோல்லஸத்தூணிபாரம் ।
வாமே வாமாம்ஸலாப்யாம் ஸஹலலிததநும் ஜானகீலக்ஷ்மணாப்யாம்
ராமம் ச்யாமம் பஜேऽஹம் ப்ரணமதஜநிதம் கேதவிச்சேதரக்ஷம் ॥

பொருள் : இடது கையில் கோதண்டமென்னும் வில்லையும், வலது கையில் கணையொன்றினையும், பின்பக்கத்தில் அம்பராத்தூணியுடன் திகழ்பவரும், இடது பார்ச்வத்தில் சுந்தரியான ஜானகி, பலசாலியான லக்ஷ்மணனுடனும், அண்டியவர்களின் இடர்களைந்து காக்கின்றவரும், கருமைநிறங்கொண்டவருமான கோதண்டராமனை நான் வணங்குகிறேன்.

## वैकुण्ठवासध्यानम्

चतुर्भुजं द्विनेत्रं च श्यामवर्णधरं हरिम् ।
शङ्खचक्रधरं मूर्तिं सुखासनसमन्वितम् ॥

लम्बहस्तधरं वामं दक्षिणे योगहस्तकम् ।
किरीटमकुटं कर्णपुष्पधाम बलोयकम् ॥

मकरकुण्डलसंयुक्तं समसूत्रं तथापरम् ।
श्रीभूमिशक्ती पार्श्वे तु शेषमण्डलमुद्धृतम् ।।

तामसं बेरसंयुक्तं तोरणाद्यैरलङ्कृतम् ।
अष्टाङ्गपुष्टिसंयुक्तं सर्वाभरणभूषितम् ।।

(C. V. No. 116-P. No. 21)

வைகுண்டவாஸ-த்யாநம்

சதுர்புஜம் த்விநேத்ரம் ச ச்யாமவர்ணதரம் ஹரிம் ।
சங்கசக்ரதரம் மூர்த்திம் ஸுகாஸனஸமன்விதம் ॥

லம்பஹஸ்ததரம் வாமம் தக்ஷிணே யோகஹஸ்தகம் ।
கிரீடமகுடம் கர்ணபுஷ்பதாம பலோயகம் ॥
மகரகுண்டலஸம்யுக்தம் ஸமஸூத்ரம் ததாபரம் ।
ஸ்ரீபூமிசக்தீ பார்ச்வே து சேஷமண்டலமுத்ருதம் ॥

தாமஸம் பேரஸம்யுக்தம் தோரணாத்யைரலங்க்ருதம் ।
அஷ்டாங்கபுஷ்டிஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் ॥

பொருள் : நான்கு கைகள், இருகண்கள், கருமை நிறம், சங்கு, சக்ரம் ஆகியவற்றுடன் சுகாஸனத்தில் வீற்றிருப்பவரும், இடது கையைத் தொங்க விட்டிருப்பவரும், வலது கையை யோக ஹஸ்தமாய் வைத்துள்ளவரும், கிரீடம், மகுடம், கர்ணபுஷ்பம் ஆகியவற்றைப் பெற்றவரும், மகரகுண்டலத்தை உடையவரும், இருமருங்கிலும் ஸ்ரீபூமிதேவிகளை உடையவரும், பணாமண்டலத்துடன் கூடிய ஆதிசேஷனை இருக்கையாக உடையவரும், தோரணாதிகளால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் கொலுவீற்றிருப்பவரும், அஷ்டாங்க புஷ்டியுடன் ஸர்வாபரணபூஷிதருமான வைகுண்டவாஸரைத் தியானிக்கவேண்டும்.

## भिक्षाटनेशध्यानम्

सारङ्गांसे तु दूर्वाङ्कुरमपि दधतं सव्यहस्ते च शूलं
कर्णे क्षिप्त्वापरेण कलितकटितटामूलमन्यद्विहस्ते ।
सो विभ्राणं कपालं डमरुकममलं पादुकासक्तपादं
नग्नं स्त्रीमोहकाङ्गं प्रमथगणयुतं नौमि भिक्षाटनेशम् ।।

(C. V. No. 116 - P. No. 23)

பிக்ஷாடனேச-த்யானம்

ஸாரங்காம்ஸே து தூர்வாங்குரமபி தததம் ஸவ்யஹஸ்தே ச சூலம்
கர்ணே க்ஷிப்த்வாபரேண கலிதகடிதடாமூலமந்யத்விஹஸ்தே ।
ஸோ விப்ராணம் கபாலம் டமருகமமலம் பாதுகாஸக்தபாதம்
நக்னம் ஸ்த்ரீமோஹகாங்கம் ப்ரமதகணயுதம் நௌமி பிக்ஷாடனேசம் ॥

பொருள் : இடது கையில் மானையும், அருகம் புல்லையும், வலது கையில் சூலத்தையும், காதொன்றில் காதோலையினையும் அணிந்தவராய் மற்ற இருகைகளின் முழங்கைப் பகுதி இடுப்பின் மூலத்தில் தொடங்குவதாய் அமையப்பெற்றவரும், கபாலம், டமருகம், மிதியடி ஆகியவை தரித்தும், திகம்பரராய், பெண்கள் மோகிக்கும்படியான அங்கத்தைக் கொண்டு பிரமத கணங்களுடன் கூடியும் விளங்கும் பிக்ஷாடனமூர்த்தியை வணங்குகின்றேன்.

## अनुबन्धः - ५*

## सूर्यध्यानम्

रक्तमम्बोरुहारूडं दाडिमीकुसुमप्रभम् ।
स्फुरद्रक्तमहातेजो वृत्तमण्डलमध्यगम् ।।

हंसारक्तस्फुटत्पद्मवराभयकरद्वयम् ।
एकास्यंचिन्तयेद्भानुं द्विनेत्रं[1] रक्तवाससम् ।।
आदित्यं बिम्बमध्यस्तं रक्तमूर्तिं अहं भजे ।।

ஸௌர்ய-த்யானம்

ரக்தமம்போருஹாரூடம் தாடிமீகுஸுமப்ரபம் ।
ஸ்புரத்ரக்தமஹாதேஜோ வ்ருத்தமண்டலமத்யகம் ॥

ஹம்ஸாரக்தஸ்புடத்பத்மவராபயகரத்வயம் ।
ஏகாஸ்யஞ்சிந்தயேத்பானும் த்விநேத்ரம்[1] ரக்தவாஸஸம் ॥
ஆதித்யம் பிம்பமத்யஸ்தம் ரக்தமூர்த்திம் அஹம் பஜே ॥

---

* இதிலிருந்து "த்யானரத்னாவளி" (Green No. 1275. TMSSM Library, Thanjavur.) ச்லோகங்கள் தொடங்குகின்றன.

1. त्रिणेत्रं इति मूर्तिध्याने - P. No. 200.

பொருள் : செந்தாமரையின்மீது விளங்குபவரும், மாதுளை மலர்போல் சிவந்த தேஜஸ்ஸுடன் திகழ்பவரும், வட்டமான மண்டலத்தின் நடுவே காட்சி தருபவரும், இரு தாமரைகள், வரத-அபயமுத்திரைகள் ஆகியவற்றைக் கரத்தில் பெற்றவரும், ஆதித்ய பிம்பத்தின் நடுவில் ரக்தவண்ணமூர்த்தியாகவும், செவ்வாடை உடுத்தியவரும், ஒருமுகம், இரண்டு கண்கள் முதலியவற்றோடும் காணப்படுபவரும்ான சூரியனைத் தியானிக்கிறேன்.

## षण्मुखसुब्रह्मण्य-ध्यानम्

रसमुखकरभानुं रक्तवर्णं किरीटं
धनुवरकुलिशखेटं प(द्म)पाशं च वामे ।
शरमभ(यस)खड्गं अङ्कुशं चक्रहस्तं
सुरपतिविधिवन्द्यं शूरसंहाररूपम् ॥

ஷண்முகஸுப்ரஹ்மண்ய-த்யானம்

ரஸமுககரபானும் ரக்தவர்ணம் கிரீடம்
தனுவரகுலிசகேடம் ப(த்ம)பாசம் ச வாமே ।
சரமப(யஸ)கட்கம் அங்குசம் சக்ரஹஸ்தம்
ஸுரபதிவிதிவந்த்யம் சூரஸம்ஹாரரூபம் ॥

பொருள் : சூரியனுடைய ஒளிக்கொப்பான முகப்பொலிவுடன் திகழ்பவரும், செந்நிறக் கிரீடத்தைத் தாங்கியவரும், வில், வரதமுத்திரை, வஜ்ராயுதம், கேடம், பத்மம், பாசம் ஆகியவற்றை இடது கையில் தரித்தவரும், அம்பு, அபயமுத்திரை, கத்தி, அங்குசம், சக்கரம் முதலியவற்றை வலது கையில் கொண்டவரும், தேவேந்திரன், பிரம்மா முதலானோரால் வணங்கப்பெற்றவரும், சூராசுரனைக் கொன்றவருமான ஆறுமுகஸுப்ரமண்யரைத் தியானிக்கவேண்டும்.

## सदाशिवध्यानम्

कुन्देन्दुस्पटिकाभासं जटामकुटमण्डितम् ।
पञ्चमूर्धासमायुक्तं पञ्चवक्त्रं चतुर्भुजं ॥

वक्त्रं प्रीतिविशेषेण त्रिलोचनसमन्वितम् ।
तनुरेकं दशाभुजं द्विपादं पद्मसंस्थितम् ॥

शूलं परशु खड्गं च वज्राभयं च दक्षिणे ।
नागं पाशाङ्कुशञ्चैव घण्टां वह्निं च वामके ।।

सर्वलक्षणसंयुक्तं सर्वाभरणभूषितम् ।
शान्तरूपं स्मरेन्नित्यं धर्मकामार्थमोक्षदम् ।।

ஸதாசிவ-த்யாநம்

குந்தேந்துஸ்படிகாபாஸம் ஜடாமகுடமண்டிதம் ।
பஞ்சமூர்தாஸமாயுக்தம் பஞ்சவக்த்ரம் சதுர்புஜம் ॥

வக்த்ரம் ப்ரீதிவிசேஷேண த்ரிலோசனஸமன்விதம் ।
தனுரேகம் தசபுஜம் த்விபாதம் பத்மஸம்ஸ்திதம் ॥

சூலம் பரசு கட்கம் ச வஜ்ராபயம் ச தக்ஷிணே ।
நாகம் பாசாங்குசஞ்சைவ கண்டாம் வஹ்னிம் ச வாமகே ॥

ஸர்வலக்ஷணஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் ।
சாந்தரூபம் ஸ்மரேந்நித்யம் தர்மகாமார்த்தமோக்ஷதம் ॥

பொருள் : முல்லை மலர், சந்திரன், ஸ்படிகமணி ஆகியவைபோன்று வெண்மையானவரும், ஜடாமகுடத்துடன் திகழ்பவரும், ஐந்து தலைகள், ஐந்து முகங்கள், நான்கு புஜங்கள், மூன்று கண்கள் ஆகியவற்றுடனும், ஓர் உடல், பத்து கைகள், இரண்டு பாதங்களுடன் பத்மாஸனத்தில் இருப்பவராய், சூலம், பரசு, கத்தி, வஜ்ராயுதம், அபயமுத்திரை ஆகியவற்றை வலது கைகளிலும், நாகம், பாசம், அங்குசம், மணி, தீ ஆகியவற்றை இடது கைகளிலும் அமைக்கப்பெற்றவராகவும் ஸர்வ லக்ஷணத்துடன் ஸர்வாபரண பூஷிதராய், சாந்தஸ்வரூபியாய், அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அருள்பவராய்க் காட்சிதரும் சதாசிவமூர்த்தியைத் தினமும் தியானம் செய்யவேண்டும்.

## लिङ्गोद्भवध्यानम्

स्तम्भाकाराम्बुमध्ये चोद्यन्तं ब्रह्मविष्णुकम् ।
मध्ये लिङ्गोद्भवं रुद्रं हरिणीमृगटङ्ककम् ।।
अभयं ऊरुहस्तौ च लिङ्गोद्भवस्वरूपकम् ।।

லிங்கோத்பவ-த்யானம்

ஸ்தம்பாகாராம்புமத்யே சோத்யந்தம் ப்ரம்மவிஷ்ணுகம் ।
மத்யே லிங்கோத்பவம் ருத்ரம் ஹரிணீம்ருகடங்ககம் ॥
அபயம் ஊருஹஸ்தௌ ச லிங்கோத்பவஸ்வரூபகம் ॥

பொருள் : தூண் வடிவாகிற ஜலத்தின் நடுவில் பிரம்ம-விஷ்ணுக்களால் தேடப்பெற்றவரும், மேல் இடக்கையில் பெண்மான், மேல் வலக்கையில் டங்கம் ஆகியவற்றுடன், கீழ் வலது கையில் அபயமுத்திரையினையும், இடது கையினை இடுப்பில் வைத்தும் காட்சி தருகின்ற ருத்திரரை லிங்கோத்பவரூபியாகத் தியானித்தல் வேண்டும்.

## मनोन्मणिध्यानम्

इन्दुनिभवेदकरवह्निनयनं स्यात्
पङ्कजवराभयकरोत्पलचतुष्कम् ।
अङ्गहिमभूषणविचित्रवदनं स्यात्
तुङ्गमकुटोज्वलमनोन्मणिस्वरूपम् ।।

மனோன்மணி-த்யானம்

இந்துநிபவேதகரவஹ்னிநயனம் ஸ்யாத்
பங்கஜவராபயகரோத்பலசதுஷ்கம் ।
அங்கஹிமபூஷணவிசித்ரவதனம் ஸ்யாத்
துங்கமகுடோஜ்வல மனோன்மணிஸ்வரூபம் ॥

பொருள் : திங்களைப்போல் பிரகாசிப்பவரும், வேதமாகிய நாற்கரங்களைப் பெற்றவரும், நெருப்புப் போன்ற கண்களை உடையவரும், தாமரை, வரதமுத்திரை, அபயமுத்திரை, ஆம்பல் ஆகிய நான்கினைத் தன்னுடைய நாற்கரங்களில் தரித்தவரும், குளிர்ச்சியான உடல், அணிகலன்கள், விசித்திரமான முகம், உயர்மகுடம் போன்றவற்றுடன் ஒளிருபவருமான மனோன்மணிதேவியைத் தியானித்தல்வேண்டும்.

## मनोन्मणिध्यानम्

उत्पलं पङ्कजं चैव अभयं चोरुहस्तकाम् ।
श्यामवर्णां त्रिणेत्रां च करण्डमकुटोज्वलाम् ।।

पीतम्बरधरां देवीं सर्वावयवसुन्दरीम् ।
एवं ध्यात्वा(येत्)महादेवीं ईश्वरस्य मनोन्मणीम् ।।

மனோன்மணி-த்யானம்

உத்பலம் பங்கஜம் சைவ அபயம் சோருஹஸ்தகாம் ।
ச்யாமவர்ணாம் த்ரிணேத்ராம் ச கரண்டமகுடோஜ்வலாம் ॥

பீதம்பரதராம் தேவீம் ஸர்வாவயவஸுந்தரீம் ।
ஏவம் த்யாத்வா(யேத்)மஹாதேவீம் ஈச்வரஸ்ய மனோன்மணீம் ॥

பொருள் : ஆம்பல், தாமரை ஆகியவற்றை மேலிருகைகளிலும், கீழ்வலது கையில் அபயமுத்திரையினையும் தாங்கியவராய், இடது கையினை இடுப்பினில் வைத்தும், கருமை வண்ணம், முக்கண், கரண்டமகுடம் ஆகியவற்றைப் பெற்றுத் திகழ்பவளும், பீதாம்பரத்தைத் தரித்திருப்பவளும், அழகிய அங்கத்தைப் பெற்றவளுமான மனோன்மணி மஹாதேவியைத் தியானிக்கவேண்டும்.

## शङ्करीध्यानम्

श्यामाभां च सुयौवनां त्रिणयनां सम्पूर्णचन्द्राननां
वामेकण्डिकमुद्रिकां तदितरे रुद्राक्षमालाभयाम् ।
पीनोत्तुङ्गकुचां जटां (च) मकुटां पीताम्बरालङ्कृतां
वामाद्यादि सुशक्तिभिः परिवृतां वन्दे महाशङ्करीम् ।।

சங்கரீ த்யானம்

ச்யாமாபாம் ச ஸுயௌவனாம் த்ரிணயநாம் சம்பூர்ணசந்த்ராননாம்
வாமேகண்டிகமுத்ரிகாம் ததிதரே ருத்ராக்ஷமாலாபயாம் ।
பீனோத்துங்ககுசாம் ஜடாம்(ச) மகுடாம் பீதாம்பராலங்க்ருதாம்
வாமாத்யாதி ஸுசக்திபி: பரிவ்ருதாம் வந்தே மகாசங்கரீம் ॥

பொருள் : கறுத்தமேனியோடு விளங்குபவளும், வாலிபப் பருவத்தினளாயும், முக்கண்களைப் பெற்றவளும், முழுமதிபோன்ற முகமுடையவளும், தன் இடது கைகளில் கண்டிகை, வரதமுத்திரை, வலது கைகளில் ருத்ராக்ஷமாலை, அபயமுத்திரை ஆகியவற்றைப் பெற்றவரும், பருத்துயர்ந்த கொங்கைகளையும், ஜடை மகுடத்தினையும் மஞ்சள்நிறப் பட்டாடையும் கொண்டிலங்குபவளும், வாமாதி சக்திகளால் சூழ்ந்து காணப்படு பவளுமான மகாசங்கரியை வணங்குகிறேன்.

## शिवशक्ति-ध्यानम्

पद्माक्षमालां अभयोरुहस्तां
श्यामांगनेत्रत्रयसुन्दराढ्याम् ।
करण्डिकं वा मकुटेन्दु चूडां
श्रीकामकोटीं शिवशक्तिमीडे ।।

## சிவசக்தி-த்யானம்

பத்மாக்ஷமாலாம் அபயோருஹஸ்தாம்
ச்யாமாங்கநேத்ரத்ரயஸுந்தராட்யாம் ।
கரண்டிகம் வா மகுடேந்து சூடாம்
ஸ்ரீகாமகோடீம் சிவசக்திமீடே ॥

பொருள் : தாமரை, அக்ஷமாலை, அபயமுத்திரை, கடிஹஸ்தம், கருமை வண்ணம், மூன்று கண்கள், மூவுலகிலும் காணவரிய அழகு, கரண்டகம், திங்கள் ஆகியவற்றைத் தரித்திருப்பவளுமான காமகோடி சிவசக்தியை வணங்குகிறேன்.

## पराशक्तिध्यानम्

पञ्चवक्त्रां दशभुजां पीनोन्नतपयोधराम् ।
सूर्यकोटिप्रतीकाशां सिन्दूरारुणविग्रहाम् ।।

अक्षमालाकपालं च त्रिशूलां खड्गमेव च ।
मुण्डखट्वाङ्कहस्तां च वरदाभयपाणिकाम् ।।
पाशाङ्कुशधरां देवीं पराशक्तीं विचिन्तयेत् ।।

## பராசக்தி-த்யானம்

பஞ்சவக்த்ராம் தசபுஜாம் பீநோந்நதபயோதராம் ।
ஸூர்யகோடிப்ரதீகாசாம் ஸிந்தூராருணவிக்ரஹாம் ॥

அக்ஷமாலாகபாலம் ச த்ரிசூலாம் கட்கமேவ ச ।
முண்டகட்வாங்கஹஸ்தாம் ச வரதாபயபாணிகாம் ॥
பாசாங்குசதராம் தேவீம் பராசக்தீம் விசிந்தயேத் ॥

பொருள் : ஐந்து முகங்கள், பத்துக் கைகள், பருத்துயர்ந்த கொங்கைகள் ஆகியவற்றுடன் கோடிசூரியர்களின் ஒளிக்கொப்பாய்த் திகழ்பவளும், செந்தூரம்போல் சிவந்த நிறத்துடன், அக்ஷமாலை, கபாலம், திரிசூலம், கத்தி, முண்டம், கட்வாங்கம், வரத முத்திரை, அபயமுத்திரை, பாசம், அங்குசம் முதலியவை கொண்டிலங்குபவளுமான பராசக்திதேவியை நினைக்கவேண்டும்.

## महालक्ष्मीध्यानम्

हेमवर्णां विशालाक्षीं लक्ष्मीं पद्मासनस्थिताम् ।
हस्तद्वये गृहीताब्जां शोभितां हेमवस्त्रकाम् ।।

हस्तीशुण्डाग्रकुम्भाभ्यां सिच्यमानशिरोरुहाम् ।
प्रसारितपदद्वन्द्वां पद्मपत्रनिभेक्षणाम् ।।

पार्श्वद्वये च कन्याभ्यां चामराभ्यां विशेषतः ।
वीज्यमानां महालक्ष्मीं विशालां विष्णुवल्लभाम् ।।

மஹாலக்ஷ்மீ-த்யானம்

ஹேமவர்ணாம் விசாலாக்ஷீம் லக்ஷ்மீம் பத்மாஸனஸ்திதாம் ।
ஹஸ்தத்வயே க்ருஹீதாப்ஜாம் சோபிதாம் ஹேமவஸ்த்ரகாம் ॥

ஹஸ்தீசுண்டாக்ரகும்பாப்யாம் ஸிச்யமானசிரோருஹாம் ।
ப்ரஸாரிதபதத்வந்த்வாம் பத்மபத்ரநிபேக்ஷணாம் ॥

பார்ச்வத்வயே ச கன்யாப்யாம் சாமராப்யாம் விசேஷத: ।
வீஜ்யமானாம் மஹாலக்ஷ்மீம் விசாலாம் விஷ்ணுவல்லபாம் ॥

பொருள் : பொன்நிறங்கொண்டு நீண்ட கண்களுடன், பத்மாசனத்தில் இரு கால்களையும் தொங்கவிட்டபடி வீற்றிருப்பவளும், தனது இரு கரங்களில் தாமரைமலரைத் தாங்கியும், பொன்நிற ஆடையை அணிந்திருப்பவளும், இருபக்கமும் யானைகளின் தும்பிக்கை நுனியிலுள்ள குடங்களின் நீரால் நீராட்டுவிக்கப்படு கின்றவளும், தாமரைமலர்போன்ற கண்களைப் பெற்றவரும், இருபுறமும் இரண்டு கன்னிப் பெண்களால் (வ்ருத்தி-புஷ்டிகளால்) சாமரம் வீசப்பெற்றவளும், விஷ்ணுவின் நாயகியுமான மஹாலக்ஷ்மியைத் தியானிக்கவேண்டும்.

## वीणादक्षिणामूर्तिध्यानम्

धवलरुचिरगात्रं सर्पराजोपवीतं ।
शशिधरमथवह्निं चाक्षमालावहन्तम्[1] ।
स्फुरितकनकवीणां कुञ्चितं कुञ्चिताङ्घ्रि[2]
गिरिवरशिखरस्थं दक्षिणामूर्तिदेवम् ।।

வீணாதக்ஷிணாமூர்த்தி-த்யானம்

தவளருசிரகாத்ரம் ஸர்ப்பராஜோபவீதம்
சசிதரமதவஹ்நிம் சாக்ஷாமாலாவஹந்தம்[1]।
ஸ்புரிதகனகவீணாம் குஞ்சிதம் குஞ்சிதாங்க்ரிம்[2]
கிரிவரசிகரஸ்தம் தக்ஷிணாமூர்த்திதேவம் ॥

பொருள் : வெண்மையும், அழகும் நிறைந்த உடலுடையவரும், பாம்பரையனை முப்புரிநூலாய்த் தரித்தவரும், சந்திரன், தீ, அக்ஷமாலை அகியவற்றை உடையவரும், கையில் பொன் வீணையைக் கொண்டவரும், மலைச்சிகரத்தில் இருக்கின்றவருமான தக்ஷிணாமூர்த்தி தேவரை தியானிக்கவேண்டும்.

## योगदक्षिणामूर्तिध्यानम्

चिन्मुद्रामक्षमालां परशुमपिकरैस्सव्यवामेर्वहन्तं
वामे भागे च जानूपरि निहितकरं योगपट्टावृताङ्गम् ।
सव्ये लम्ब्यङ्घ्रिपद्मं सनकमुखयुतं भूतपृष्ठस्थपादं
शान्तं त्र्यक्ष्यप्रसन्नगिरिवरसहितं दक्षिणामूर्तिमीडे ।।

யோகதக்ஷிணாமூர்த்தி-த்யானம்

சின்முத்ராமக்ஷமாலாம் பரசுமபிகரைஸ்ஸவ்யவாமேர்வஹந்தம்
வாமே பாகே ச ஜானூபரி நிஹிதகரம் யோகபட்டாவ்ருதாங்கம் ।
ஸவ்யே லம்ப்யங்க்ரிபத்மம் ஸனகமுகயுதம் பூதப்ருஷ்டஸ்தபாதம்
சாந்தம் த்ர்யக்ஷ்யப்ரஸன்னகிரிவரஸஹிதம் தக்ஷிணாமூர்த்திமீடே ॥

---

1. अनलसहितहस्तं अक्षमालां दधानम् । (C.V. No. 116)

2. फालनेत्रम् (C.V. No. 116)

பொருள் : சின்முத்திரை, அக்ஷமாலை, கோடரி ஆகியவற்றைத் தன்னுடைய கைகளில் தாங்கியவரும், இடது காலை வலது முழங்கால்மீது வைத்துள்ளவரும், தனது கீழ் இடது கையினை முழங்காற் பகுதியில் வைத்தவரும், யோகபட்டம் அணிந்தவரும், ஸனகாதியர் முன்பு காட்சி தருபவராய், வலது காலினைத் தொங்கவிட்டபடி பூதத்தின் முதுகின்மீது வைதத்துள்ளவரும், சாந்த உருவினரும், மூன்று கண்களைப் பெற்றவருமான தக்ஷிணாமூர்த்தியை வணங்குகின்றேன்.

## दक्षिणामूर्तिध्यानम्

पादेनाक्रम्यभूतं तदुपरिगुणितं पादमेकं निधाय
व्याकुर्वन् सर्वशब्दान्निजकटकमहीभागभाजां ऋषीणाम् ।
व्यालव्याख्यानमुद्रा हुतवहकलिका पो(पु)स्तकं हस्तपद्मैः
नित्यं बिभ्रश्चतुर्भिः स्पुरति मम पुरो दक्षिणामूर्तिरीशः ।।

தக்ஷிணாமூர்த்தி-த்யானம்

பாதேனாக்ரம்யபூதம் ததுபரிகுணிதம் பாதமேகம் நிதாய
வ்யாகுர்வன் ஸர்வசப்தாந்நிஜகடகமஹீபாகபாஜாம் ரிஷீணாம் ।
வ்யாளவ்யாக்யானமுத்ரா ஹுதவஹகலிகா பொ(பு)ஸ்தகம் ஹஸ்தபத்மை:
நித்யம் பிப்ரச்சதுர்பி: ஸ்புரதி மம புரோ தக்ஷிணாமூர்த்திரீச: ॥

பொருள் : பாதத்தால் பூதத்தை ஆக்ரமித்துக் கொண்டும், அதன்மேல் ஒருகாலை ஊன்றியும், கையால் சர்வசப்தத்தின் பொருளை இருடிகளுக்கு வியாகரித்துக் கொண்டும், கரகமலங்களில் வியாக்யானமுத்திரை, புத்தகம் ஆகியவற்றின் இலங்குபவரும், சனகாதி நால்வருக்கு எப்போதும் உபதேசம் புரிபவராய்க் காட்சி தரும் தக்ஷிணாமூர்த்தி தேவரைத் தியானிக்கவேண்டும்.

## आनन्दवल्यम्बिका ध्यानम्

अरुणकनकभासां तुङ्गपीनादि पात्रां
स्तनयुगलशुभाढ्यां मन्दहस्तां द्विहस्ताम् ।
करधृतकनकाब्जां लम्बहस्तां च वामे
तरुणतपनशोभां चन्द्रमौलेर्भवन्तीम् ।।

ஆனந்தவல்லீ அம்மன் த்யானம்

அருணகனகபாஸாம் துங்கபீனாதி பாத்ராம்
ஸ்தனயுகளசுபாட்யாம் மந்தஹஸ்தாம் த்விஹஸ்தாம் ।
கரத்ருதகனகாப்ஜாம் லம்பஹஸ்தாம் ச வாமே
தருணதபனசோபாம் சந்த்ரமௌலேர்பவந்தீம் ॥

பொருள் : சிகப்பும், மஞ்சளுமாய்க் காட்சி அளிப்பவளும், பருத்துயர்ந்த கொங்கைகளை உடையவளும், இரு கைகளைப் பெற்றவளும், பொன்தாமரையினைக் கையில் தரித்திருப்பவளும், இடதுகையைத் தொங்கவிட்டிருப்பவளும், தருண சூர்யனைப்போன்று பிரகாசிப்பவளாயும், சந்த்ரமௌலியின் நாயகியுமான ஆனந்த வல்லியைத் தியானித்தல் வேண்டும்.

## कालीताण्डवध्यानम्

किञ्चित्कुञ्चितवामपादनिकरं मञ्जीरमञ्जुक्वणत्-
चञ्चत्काञ्चनकिङ्किणीझणझणद्रावं जगद्रञ्जनम् ।
कालीताण्डवखण्डनं प्रविलसद्रक्तोज्वलत्कुण्डलं
चण्डं रक्षतु चण्डिका प्रतिकृतं सम्पत्करं ताण्डवम् ॥

காளீதாண்டவ-த்யானம்

கிஞ்சித்குஞ்சிதவாமபாதநிகரம் மஞ்சீரமஞ்சுக்வணத்-
சஞ்சத்காஞ்சனகிங்கிணீஜணஜணத்ராவம் ஜகத்ரஞ்ஜநம் ।
காளீதாண்டவகண்டனம் ப்ரவிலஸத்ரக்தோஜ்வலத்குண்டலம்
சண்டம் ரக்ஷது சண்டிகா ப்ரதிக்ருதம் ஸம்பத்கரம் தாண்டவம் ॥

பொருள் : சதங்கைகளிலிருந்து இனிமையான ஒலி எழும் வகையில் சற்று உயரத்தே தூக்கிய இடதுகாலை உடையவரும், அத்தகைய தாண்டவத்தால் அழகிய பொற்கிண்கிணியின் ஓசை ஜண்-ஜண் என ஒலித்து உலகையே மகிழச் செய்பவரும். செந்நிறமான குண்டலங்களைத் தன் காதிணைகளில் அணிந்திருப்பவரும், செல்வம் தரவல்லத் தாண்டவத்தைப் புரிபவருமான காளிகாதேவியைத் தியானம் செய்யவேண்டும்.

## शिवकाम्यम्बाध्यानम्

पद्मस्थां कनकप्रभां परिलसत्पद्माक्षियुग्मोज्वलां
अक्षस्रक्शुकधारिणीं करलसत्[1] कल्हारहस्ताब्जनीम् ।
रक्तस्रक्सुविलेपनाम्बरधरां राजीवनेत्रार्चितां
तां ध्यायेत् शिवकामकोष्ठनिलयां नृत्तेश्वरस्य प्रियाम् ।।

சிவகாமி அம்மன்-த்யானம்

பத்மஸ்தாம் கனகப்ரபாம் பரிலஸத்பத்மாக்ஷி யுக்மோஜ்வலாம்
அக்ஷஸ்ரக்சுகதாரிணீம் கரலஸத் கல்ஹாரஹஸ்தாப்ஜநீம் ।
ரக்தஸ்ரக்ஸுவிலேபனாம்பரதராம் ராஜீவநேத்ரார்சிதாம்
தாம் த்யாயேத் சிவகாமகோஷ்ட்டநிலயாம் ந்ருத்தேச்வரஸ்ய ப்ரியாம் ॥

பொருள் : பத்மாஸனத்தில் நின்றிருப்பவளும், பொன்னிறமாய் ஒளிர்பவளும், தாமரைமலர் போன்ற கண்களுடன் திகழ்பவளும், அக்ஷமாலை, கிளி, கல்ஹார (அரளி) புஷ்பம் ஆகியவற்றைக் கையினில் தாங்கியவரும், செம்மாலை , சிவந்த ஆடை ஆகியவற்றுடன் சிவகாமகோஷ்டத்தில் விளங்குபவளும், ந்ருத்தேசரான நடராஜரின் மனைவியுமான (சதுர்புஜ) சிவகாமிதேவியைத் தியானிக்கிறேன்.

## शिवकामसुन्दरी द्विभुजदेविध्यानम्

श्यामवर्णां त्रिणेत्रां च द्विभुजामेकवक्त्रकाम् ।
करण्डमकुटोपेतां सर्वाभरणभूषिताम् ।।

वामे तु लम्बितं चैव कटकं दक्षिणे करे ।
त्रिभङ्गीं लज्जयोपेतां पीताम्बरधरां शिवाम् ।।
मन्दस्मितमिमां गौरीं ध्यायेत् सुन्दरिकाख्यकाम् ।।

சிவகாமஸுந்தரீ த்விபுஜதேவி-த்யானம்

ச்யாமவர்ணாம் த்ரிணேத்ராம் த்விபுஜாமேகவக்த்ரகாம் ।
கரண்டமகுடோபேதாம் ஸர்வாபரணபூஷிதாம் ॥

---

1. शारिकां कटिकरां (C. V. No. 116)

வாமே து லம்பிதம் சைவ கடகம் தக்ஷிணே கரே ।
த்ரிபங்கீம் லஜ்ஜயோபேதாம் பீதாம்பரதராம் சிவாம் ॥
மந்தஸ்மிதமிமாம் கௌரீம் த்யாயேத் ஸுந்தரிகாக்யகாம் ॥

பொருள் : கறுத்த நிறமும், முக்கண்ணும், ஒரு முகமும் கொண்டு, இரு கைகளுடன் கரண்டமகுடத்தினைத் தரித்தும், அணிகலன்களால் அணிவிக்கப்பெற்றும், தன் இடது கையைத் தொங்கவிட்டுக்கொண்டும், திரிபங்கியோடும், நாணமுற்றவராய், மஞ்சள் பட்டாடை உடுத்தியவரும், மங்கலமூர்த்தியாயும், குறுநகை புரிபவராயும், சுந்தரி என்று அழைக்கப்படுபவருமான கௌரிதேவியைத் தியானிக்கவேண்டும்.

## सरस्वती-ध्यानम्

शुक्लांबरधरामक्षमालापो(पु)स्तकधारिणीम् ।
सव्यवामकराभ्यब्जसुप्रसन्नां सरस्वतीम् ।।

### ஸரஸ்வதீ-த்யானம்

சுக்லாம்பரதராமக்ஷமாலாபோ(பு)ஸ்தகதாரிணீம் ।
ஸவ்யவாமகராப்யப்ஜ ஸுப்ரஸன்னாம் ஸரஸ்வதீம் ॥

பொருள் : வெண்பட்டாடை உடுத்தியவராய், அக்ஷமாலை, புஸ்தகம் ஆகியவற்றைத் தன்னிரு கைகளில் தரித்து பிரஸன்னவதனத்துடன் காட்சிதரும் ஸரஸ்வதிதேவியைத் தியானம் புரியவேண்டும்.

## विष्णु-ध्यानम्

नीलाङ्गरूपं च मुखारविन्दं
पीताम्बराभयकरोरुहस्तम् ।
चक्रायुधं शङ्खकिरीटमौलिं
नमामि शान्तं परवासुदेवम् ।।

### விஷ்ணு-த்யானம்

நீலாங்கரூபம் ச முகாரவிந்தம்
பீதாம்பராபயகரோருஹஸ்தம் ।
சக்ராயுதம் சங்ககிரீடமௌலிம்
நமாமி சாந்தம் பரவாஸுதேவம் ॥

பொருள் : நீலநிறமான அங்கத்தை உடையவரும், தாமரைபோன்ற முகத்தைப் பெற்றவரும், மஞ்சள் பட்டாடை அணிந்தவரும், அபயமுத்திரை, ஊருஹஸ்தம், சக்கரம், சங்கம், ஆயுதம் ஆகியவற்றைக் கையில் தரித்தவரும். கிரீடம் புனைந்த மௌலியை உடையவரும், சாந்தருமான பரவாஸுதேவரை வணங்கவேண்டும்.

## अधिकारनन्दिकेश्वरध्यानम्

बिभ्राणं परशुं मृगं करतले ईशप्रणामाञ्जलिं
भस्मोद्धूलितकन्धरं शशिकला गङ्गा कपर्दोज्वलम् ।
पर्यायात्रिपुरान्तके ज्येष्टं गणेन्द्रावृतं
ब्रह्मेन्द्राच्युतवन्दिताङ्घ्रिकमलं श्रीनन्दिकेशं भजे ॥

அதிகாரநந்திகேச்வர-த்யானம்

பிப்ராணம் பரசும் ம்ருகம் கரதலே ஈசப்ரணாமாஞ்ஜலிம்
பஸ்மோத்தூலிதகந்தரம் சசிகலா கங்கா கபர்தோஜ்வலம் ।
பர்யாயாத்ரிபுராந்தகே ஜ்யேஷ்டம் கணேந்த்ராவ்ருதம்
ப்ரஹ்மேந்த்ராச்யுதவந்திதாங்க்ரிகமலம் ஸ்ரீநந்திகேசம் பஜே ॥

பொருள் : மழு, மான் ஆகிய இரண்டினையும் தன்னுடைய மேலிருகரத்தில் தரித்திருப்பவரும், தன் கீழிருகைகளால் சிவபெருமானுக்கு அஞ்ஜலி செய்பவரும், சந்திரன், கங்கை, ஜடை ஆகியவைகளைத் தரித்தவராய்ப் பிரகாசிப்பவரும், பிரம்மன், இந்திரன், அச்சுதன் போன்றோர்களால் வணங்கப்பெற்ற திருவடிகமலத்தை உடையவருமான ஸ்ரீநந்திகேசரை வணங்குகிறேன்.

## ब्रह्मध्यानम्

ब्रह्माणं चतुर्मुखं देवं चतुर्दोर्दण्डमण्डितम् ।
सृग्गण्डिकाञ्जलिपुटं जटिलं हंसवाहनम् ॥

ப்ரம்ம-த்யானம்

ப்ரஹ்மாணம் சதுர்முகம் தேவம் சதுர்தோர்தண்டமண்டிதம் ।
ஸ்ருக்கண்டிகாஞ்ஜலிபுடம் ஜடிலம் ஹம்ஸவாஹனம் ॥

பொருள் : நான்கு முகங்கள், நான்கு கைகள், அக்ஷமாலை, கமண்டலம், ஜடை ஆகியவற்றுடன் அஞ்சலி முத்திரையோடு அன்னவாஹனருமான பிரம்மதேவரைத் தியானிக்கவேண்டும்.

सोमास्कन्दध्यानम्

दक्षालम्बितवामनिद्रितपदं कृष्णं मृगञ्चाभयं
टङ्कं च दधतं वरं च कटकं बिभ्राणकं वामके ।
वामालम्बितनिद्रितानिपदयोः देव्यायुतं मध्यतः
स्कन्देनाब्जकरद्वयेन सहितं सोमागुहेशं भजे ।।

ஸோமாஸ்கந்த-த்யானம்

தக்ஷாலம்பிதவாமநித்ரிதபதம் க்ருஷ்ணம் ம்ருகஞ்சாபயம்
டங்கம் ச தததம் வரஞ்ச கடகம் பிப்ராணகம் வாமகே ।
வாமாலம்பிதநித்ருதாநிபதயோ: தேவ்யாயுதம் மத்யத:
ஸ்கந்தேநாப்ஜகரத்வயேன ஸஹிதம் ஸோமாகுஹேசம் பஜே ॥

பொருள் : வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கி சுகாஸனமாய் வீற்றிருப்பவரும், நாற்கரங்களில் அபயமுத்திரை, டங்கம் (மழு), கரியமான், கடக (நண்டைப்போன்ற) ஹஸ்தம் ஆகியவற்றை முறையே வலது கீழ் மேற்கைகளிலும், இடது மேற்கீழ்க்கைகளிலும் பெற்றுத்திகழ்பவரும், இடது பார்ச்வத்தில் இருகைகளுடன் தன் வலது காலை மடக்கியும், வலது கையில் கடகஹஸ்தத்தினையும் கொண்டு, இடது கைகால்களை தொங்கவிட்டும், அமர்ந்த வடிவில் அமையப்பெற்ற தேவியின் நடுவில் இருகையுடைய கந்தனை உடையவருமான ஸோமாஸ்கந்தரை வணங்குகிறேன்.

भोगशक्ति-ध्यानम्

द्विभुजां च द्विनेत्रां च करण्डमकुटान्विताम् ।
श्यामवर्णशरीरां च सर्वाभरणभूषिताम् ।।

कटकं दक्षिणे हस्ते[1] वरदं वामहस्तके[2] ।
शयनं सव्यपादं तु वामपादं तु लम्बिताम्[3] ।।
सोमं वामसमायुक्तं गौरीरूपमिति स्मृतम् ।।

1. प्रलम्बदक्षहस्तेन इति मूर्तिध्याने पृ. सं. 73
2. उत्पलं वामहस्तेन इति मूर्तिध्याने पृ. सं. 73
3. त्रिभङ्गिकाम् इति मूर्तिध्याने पृ. सं. 73

போகசக்தி-த்யானம்

த்விபுஜாம் ச த்விநேத்ராம் ச கரண்டமகுடான்விதாம் ।
ச்யாமவர்ணசரீராம் ச ஸர்வாபரணபூஷிதாம் ॥

கடகம் தக்ஷிணே ஹஸ்தே[1] வரதம் வாமஹஸ்தகே[2] ।
சயனம் ஸவ்யபாதம் து வாமபாதம் து லம்பிதாம்[3] ॥
ஸோமம் வாமஸமாயுக்தம் கௌரீரூபமிதி ஸ்ம்ருதம் ॥

பொருள் : இரு தோள்கள், இரு கண்கள், கரண்டமகுடம், கருமை நிறம் ஆகியவற்றுடன் அணிகலன்களை அணிந்து, வலது கைத்தலத்தினைக் கடக ஹஸ்தமாகவும், வரதமுத்திரையை இடது கையிலும் பெற்றவராய்த் தன் வலது காலைச் சயனநிலையிலும், இடது காலைத் தொங்கவிட்டும், சந்திரனோடும் விளங்கும் கௌரி தேவியாகிய போகசக்தியைத் தியானித்தல்வேண்டும்.

## स्कन्दध्यानम्

द्विनेत्रं द्विभुजं पद्मं करण्डमकुटान्वितम् ।
द्विपादं नृत्तसंयुक्तं द्विकर्णं पत्रसंयुतम् ।।
सर्वाभरणसंयुक्तं बालस्कन्दमिति स्मृतम्[1] ।।

ஸ்கந்த-த்யானம்

த்விநேத்ரம் த்விபுஜம் பத்மம் கரண்டமகுடான்விதம் ।
த்விபாதம் ந்ருத்தஸம்யுக்தம் த்விகர்ணம் பத்ரஸம்யுதம் ॥
ஸர்வாபரணஸம்யுக்தம் பாலஸ்கந்தமிதி ஸ்ம்ருதம் ॥

பொருள் : இருகண்கள், இருகைகள் கொண்டு, பத்மம், கரண்ட மகுடம் ஆகியவற்றைத் தரித்து இருபாதங்களையும் பெற்று நடன கோலத்தில் காட்சி தருபவரும், கர்ண பத்திரங்களோடு கூடிய காதிணைகளை உடையவரும், அனைத்து லக்ஷணங்களும் பொருந்தியவரான பாலசுப்ரமண்யமூர்த்தியைத் தியானித்தல்வேண்டும்.

## ध्वनिचण्डेश्वरध्यानम्

युग्मकररत्ननिभसव्यकरटङ्कं
वामकरमूरुपरिशान्तमुखमेकम् ।

1. बिभ्रत्प्रयकरं वन्दे बालरूपं दिगम्बरम् ।। (C. V. No. 116)

श्वेतमयवस्त्रयुतभस्मपरिधानं[1]
शम्भुपदध्यानमयभक्तध्वनिचण्डम् ॥

த்வனிசண்டேச்வர-த்யாநம்

யுக்மகரரத்னநிபஸவ்யகரடங்கம்
வாமகரமூருபரிசாந்தமுகமேகம் ।
ச்வேதமயவஸ்த்ரயுதபஸ்மபரிதானம்
சம்புபதத்யானமயபக்தத்வனிசண்டம் ॥

பொருள் : இரத்தினம் போன்று பிரகாசிக்கும் பரசுவைத் தன் கையிணைகளில் வலக்கரத்தினில் தரித்துள்ளவரும், இடக்கரத்தினைத் தனது தொடைமீது வைத்துள்ளவரும், சாந்தமான முகத்தை உடையவரும், வெண்மையான வஸ்திரத்தையும், திருநீற்றையும் அணிந்தவரும், சிவபெருமானின் திருவடிகளை நினைத்துக் கொண்டிருக்கும் பக்தருமான த்வனி சண்டேசுவரரைத் தியானித்தல் வேண்டும்.

## मारियम्बा-ध्यानम्

अरुणकिरणरूपं अग्निकेशं करण्डं
डमरुकश्रितशूलं खड्गखेटं कपालम् ।
अनलनयननागं आसनं पद्मपीठं
अखिलभुवनमाता शीतलादेवीमीडे ॥

மாரியம்மன்-தியானம்

அருணகிரணரூபம் அக்னிகேசம் கரண்டம்
டமருகச்ரிதசூலம் கட்ககேடம் கபாலம் ।
அநலநயனநாகம் ஆஸனம் பத்மபீடம்
அகிலபுவனமாதா சீதளாதேவீமீடே ॥

பொருள் : அருணகிரணம் போன்ற உருவுடையவரும், அக்னிகேசத்தையும், கரண்டமகுடத்தினையும் பெற்றவளும், உடுக்கையுடன் கூடிய சூலத்துடன் விளங்குபவளும், கத்தி, கேடயம், கபாலம் ஆகியவற்றைக் கொண்டவரும், அனல் போன்ற கண்களுள்ள நாகத்தைப் பெற்றவளும், பத்மபீடத்தில் வீற்றிருப்பவளும், உலகனைத்திற்கும் தாயுமான சீதளாதேவியை வணங்குகிறேன்.

---

1. धरदेहं - (C. V. No. 116)

अस्त्रदेव-ध्यानम्

असुरहरणमस्त्रं शूलमामण्डलाग्रं
सकलसुरमयं तं[1] शम्बुहस्तप्रियं स्यात् ।
त्रिशिखसहितवह्निं [2]वायुराकाशमूर्तिं
ज्वलनपतितकान्तिं अस्त्रदेवस्वरूपम् ॥

அஸ்த்ரதேவ-த்யாநம்

அஸுரஹரணமஸ்த்ரம் சூலமாமண்டலாக்ரம்
ஸகலஸுரமயம் தம் சம்புஹஸ்தப்ரியம் ஸ்யாத் ।
த்ரிசிகஸஹிதவஹ்நிம் வாயுராகாசமூர்த்திம்
ஜ்வலனபதிதகாந்திம் அஸ்த்ரதேவஸ்வரூபம் ॥

பொருள் : அசுரரை மாய்க்கவல்லதும், வளைவான அமைப்பை நுனியில் பெற்று சூலவடிவாய் திகழ்வதும், எல்லாத் தேவர்களிடத்திலும் சிறப்பாக சிவபெருமானுடைய கரத்தில் இருக்கவிரும்புவதும், தீ கால் விசும்புகளை மூன்று அக்னிக் கதிர்களாகக்கொண்டு ஜ்வலிப்பதும், அழகுடையதாய் விளங்குவதுமாகிற அஸ்த்ரதேவருடைய உருவைத் தியானம் செய்யவேண்டும்.

वृषभारूड-ध्यानम्

सव्येस्याद्वक्रतुण्डान्वितकनककरो गोपतेर्मस्तकस्तं [1]
वामस्यार्धं सुपक्षं सुकरकरयुतं (वामकट्यां) दधानम् ।
पृष्टेचोष्णप्रसन्नं त्रिणयनसहितं बद्धवेणीकिरीटं
वामे गौर्यासमेतं भसितशुभकरं तं वृषारूडमीशम् ॥

வ்ருஷபாரூட-த்யானம்

ஸவ்யேஸ்யாத்வக்ரதுண்டான்விதகனககரோ கோபதேர்மஸ்தகஸ்தம்
வாமஸ்யார்தம் ஸுபக்ஷம் ஸுகரகரயுதம் (வாமகட்யாம்) ததானம் ।
ப்ருஷ்டேசோஷ்ணப்ரஸன்னம் த்ரிணயநஸஹிதம் பத்தவேணீகிரீடம்
வாமே கௌர்யா ஸமேதம் பஸிதசுபகரம் தம் வ்ருஷாரூடமீசம் ॥

பொருள் : தன்னுடைய வலது கையினை விநாயகரின் தும்பிக்கைபோல் வளைத்தவாறு (அல்லது) வளைந்த அலகினைப்போல் வைத்துக்கொண்டு இருப்பவரும்,

1. तटिलिपि (दिव) ज्वलिताभं (C. V. No. 116)

2. स्पर्शन (C. V. No. 116)

அப்பொற்கரத்தினை (வலது முட்டிப் பகுதியை) கோபதியின் (விருஷபத்தின்) மத்தகத்தில் வைத்துள்ளவரும், இடது கையின் பாதி அளவுவரைச் சுகமாகவும், கைதலப்பகுதியினைத் தன்னிடத்து தொடைப் பகுதியில் வைத்தும், பிருஷ்ட பாகத்தில் உஷ்ணத்தால் ஏற்பட்ட செந்நிறத் தழும்பினை உடையவரும், மூன்று கண்களுடன் திகழ்பவரும், முடித்திரளாலே கட்ட(அ்மைக்க)ப்பெற்ற கிரீடத்தை உடையவரும் இடது பக்கத்தில் கௌரியோடு கூடியவரும், விபூதி பூசி சுபமளிக்கவல்ல திருமேனியோடு விளங்கும் வ்ருஷபாரூடரைத் தியானம் செய்யவேண்டும்.

## अर्धनारीश्वर-ध्यानम्

वामे श्यामलमन्यविद्रुमनिभं हस्तौ चतुर्बाहुकौ
नेत्र द्वित्रिपयोधराधिकतया तद्भूषणं शम्बरैः ।
स्थित्वा सव्यतलस्य लम्बितवृषस्कन्दे न्यसेत्कूर्परं
टङ्कञ्चोत्पलपाशहस्तकटकं वन्देऽर्धनारीश्वरम् ।।

### அர்தநாரீச்வர-த்யானம்

வாமே ச்யாமலமன்யவித்ருமநிபம் ஹஸ்தௌ சதுர்பாஹுகௌ
நேத்ர த்வித்ரிபயோதராதிகதயா தத்பூஷணம் சம்பரை:।
ஸ்தித்வா ஸவ்யதலஸ்ய லம்பிதவ்ருஷஸ்கந்தே ந்யஸேத்கூர்ப்பரம்
டங்கஞ்சோத்பலபாசஹஸ்தகடகம் வந்தேऽர்தநாரீச்வரம் ॥

பொருள் : இந்த மூர்த்தியின் வலது பார்ச்வத்தில் பவளம் போன்ற மேனியுடன் மூன்று கண்கள், மேற்கையில் டங்கம், கீழ்க்கையில் பாசம் ஆகியவற்றைப் பெற்றவரும், (அல்லது) கீழ்க்கையினை காளை மாட்டின்மீது வைத்துள்ளவரும், இடது பார்ச்வத்தில் கறுத்தமேனியுடன் இரு கண்களோடு மேற்கையில் அல்லி மலரையும், கீழ்க்கையினை கடக (நண்டின் வடிவம்போல் அமையப்பெற்ற விரல்கள் உடைய) ஹஸ்தத்தையும் கொண்டு (அல்லது) கீழ்க்கையைத் தொங்கவிட்டுள்ளவரும் இருபாலருக்குரிய அணிகலன்களை முறையே அணிந்தும் நின்றநிலையில் காட்சி தருபவருமான அர்தநாரீச்வரரை வணங்குகிறேன்.

## सोमध्यानम्

सोमं कुमुदकुन्दाभं कल्हारं च करद्वये ।
बिभ्राणं च शिरोवृत्तं दुकूलवदनान्वितम् ।।
प्रभामण्डलसंयुक्तं मुक्तादामैरलङ्कृतम् ।।

1. वृषभस्य शिरोर्ध्वे तु विन्यसेत् वामकूर्परम् इति सकलाधिकारे (8 : 2 - 71)

ஸோமத்யாநம்

**ஸோமம் குமுதகுந்தாபம் கல்ஹாரம் ச கரத்வயே ।**
**பிப்ராணம் ச சிரோவ்ருத்தம் துகூலவதனான்விதம் ॥**
**ப்ரபாமண்டலஸம்யுக்தம் முக்தாதாமைரலங்க்ருதம் ॥**

**பொருள்** : அல்லி, முல்லை மலர்களைப் போன்று தூய்மையாய்ப் பிரகாசிப்பவரும், செங்கழுநீர்ப்பூவைக் கையிணைகளில் வைத்திருப்பவரும், பட்டாடை உடுத்தியவரும், தலைப்பகுதியில் வ்ருத்தாகார பிரபாமண்டலத்துடன் கூடியவரும், முத்துக்களாலான அணிகளால் அலங்கரிக்கப்பெற்றவருமான ஸோமனைத் தியானம் புரியவேண்டும்.

## शास्तृ-ध्यानम्

**श्यामवर्णशरीरसुयौवनं**
**तुङ्गभृङ्गसहरत्नकुण्डलम् ।**
**योगवेष्टित पद्मसुखासनं**
**वामपुष्कलदक्षिणपूर्णयोः ।।**

சாஸ்த்ரு-தியானம்

**ச்யாமவர்ணசரீரஸுயௌவநம்**
**துங்கப்ருங்கஸஹரத்னகுண்டலம் ।**
**யோகவேஷ்டித பத்மஸுகாஸனம்**
**வாமபுஷ்கலதக்ஷிணபூர்ணயோ: ॥**

**பொருள்** : கருமை நிறமுடைய உடலைப் பெற்றவரும், வாலிபப் பருவத்தை உடையவரும், வண்டுகள் மொய்க்கும்படியான கூந்தலுடன் இரத்தின குண்டலங்களைத் தரித்தவரும், யோக வேஷ்டியுடன் (பட்டத்துடன்) பத்மாஸனத்தில் · வீற்றிருப்பவரும், இடது பக்கம் புஷ்கலை, வலது பக்கம் பூர்ணை ஆகியோரைப் பெற்றவருமான சாஸ்தாவைத் தியானம் புரியவேண்டும்.

## मूकाम्बिका-ध्यानम्

**एकवक्त्रां द्विनयनां चतुर्भुजसमन्विताम् ।**
**अभयं वरदोपेतां शङ्खचक्रधरान्विताम् ।।**

**पद्मासने सुखासीनां शिवपूजनतत्पराम् ।**
**सर्वाभरणसंयुक्तां ध्यायेत् मूकाम्बिकामुमाम् ।।**

மூகாம்பிகா-த்யானம்

ஏகவக்த்ராம் த்விநயநாம் சதுர்புஜஸமன்விதாம் ।
அபயம் வரதோபேதாம் சங்கசக்ரதரான்விதாம் ॥

பத்மாஸநே ஸுகாஸீனாம் சிவபூஜனதத்பராம் ।
ஸர்வாபரணஸம்யுக்தாம் த்யாயேத் மூகாம்பிகாமுமாம் ॥

பொருள் : ஒரு முகம், இரண்டு கண்கள், நான்கு கைகள் ஆகியவற்றைப் பெற்றவரும், அபயம், வரதம், சங்கு, சக்ரங்களை நாற்கரங்களில் கொண்டவரும், பத்மாஸனத்தில் சுகமாய் வீற்றிருப்பவரும், சிவபூஜையில் ஈடுபாடுள்ளவரும், அணிகலன் அனைத்தும் அணிந்தவரும், மூகாம்பிகையுமான உமையைத் தியானிக்க வேண்டும்.

## अष्टभैरव-ध्यानम्

असिताङ्गो रुरुश्चण्डो क्रोधश्चोन्मत्तभैरवाः ।
कपालभीषणश्चैव संहाराश्चाष्टभैरवाः ।।

அஷ்டபைரவ-தியானம்

அஸிதாங்கோ ருருச்சண்டோ க்ரோதச்சோன்மத்தபைரவா: ।
கபாலபீஷணச்சைவ ஸம்ஹாராச்சாஷ்டபைரவா: ॥

பொருள் : அஸிதாங்கர், ருரு, சண்டர், க்ரோதர், உன்மத்தர், கபாலர், பீஷணர், ஸம்ஹாரர் என்பதாக பைரவர்கள் எண்மராவர்.

## अष्टाष्टविग्रहध्यानम्

लिङ्गं लिङ्गोद्भवं चैव मुखलिङ्गं सदाशिवम् ।
महासदाशिवं सोमं महेश्वरमतःपरम् ।।

सुखासीनं उमेशश्च सोमास्कन्दं तथैव च ।
चन्द्रशेखरमूर्तिं च वृषारूढं वृषान्तिकम् ।।

भुजङ्गललितं चैव भुजङ्गत्रासमेव च ।
सन्ध्यानृत्तं ताण्डवं च जाह्नवीधरमेव च ।।

गङ्गाविसर्जनं चैव त्रिपुरान्तकमेव च ।
कल्याणसुन्दरं चैव अर्धनारीश्वरं तथा ।।

गजयुद्धं ज्वरापघ्नं शार्दूलहरविग्रहम् ।
तथा पाशुपतं चैव कङ्कालं केशवार्थकम् ।।

भिक्षाटनं च सिंहघ्नं चण्डश्वरप्रसादकम् ।
दक्षिणामूर्तिकं चैव योगवीणाधरं तथा ।।

कालान्तकं च कामारिं लकुलीशं च भैरवम् ।
आपदुद्धरणं चैव वटुकं क्षेत्रपालकम् ।।

. . . . मखोशस्त दक्षयज्ञहरस्तथा ।
किरातं गुरुमूर्तिं च अश्वारूढं गजान्तिकम् ।।

जलन्धरवधं चैव एकपादं त्रिमूर्तिकम् ।
अमूर्तिमेकपादं च तथा गौरीवरप्रदम् ।।

वज्रदानं . . . . . . . . . . . . . . . ।
चक्रदानस्वरूपं च गौरीलीलासमन्वितम् ।
विषापहरणं चैव पुरं दाहनमेव च ।।

तथा ब्रह्मशिरच्छेदं कूर्मसंहारमेव च ।
मत्स्यारिं च वराहारिं प्रधानमूर्तिमेव च ।।

रक्तभिक्षाप्रदानं च शिष्यभावं तथैव च ।
षडाननं तथा चैवमष्टाष्टविग्रहं तथा ।।

அஷ்டாஷ்டவிக்ரஹ-தியானம்

லிங்கம் லிங்கோத்பவம் சைவ முகலிங்கம் ஸதாசிவம் ।
மஹாஸதாசிவம் ஸோமம் மஹேச்வரமத:பரம் ॥

ஸுகாஸீனம் உமேசச்ச ஸோமாஸ்கந்தம் ததைவ ச ।
சந்த்ரசேகரமூர்த்திம் ச வ்ருஷாரூடம் வ்ருஷாந்திகம் ॥

புஜங்கலலிதம் சைவ புஜங்கத்ராஸமேவ ச ।
ஸந்த்யாந்ருத்தம் தாண்டவம் ச ஜாஹ்நவீதரமேவ ச ॥

கங்காவிஸர்ஜநம் சைவ த்ரிபுராந்தகமேவ ச ।
கல்யாணஸுந்தரம் சைவ அர்தநாரீச்வரம் ததா ॥

கஜயுத்தம் ஜ்வராபக்னம் சார்தூலஹரவிக்ரஹம் ।
ததா பாசுபதம் சைவ கங்காலம் கேசவார்தகம் ॥

பிக்ஷாடநம் ச ஸிம்ஹக்நம் சண்டச்வரப்ரஸாதகம் ।
தக்ஷிணாமூர்த்திகம் சைவ யோகவீணாதரம் ததா ॥

காலாந்தகம் ச காமாரிம் லகுலீசம் ச பைரவம் ।
ஆபதுத்தரணம் சைவ வடுகம் க்ஷேத்ரபாலகம் ॥

. . . . மகோசஸ்த தக்ஷயஜ்ஞஹரஸ்ததா ।
கிராதம் குருமூர்த்திம் ச அச்வாரூடம் கஜாந்திகம் ॥

ஜலந்தரவதம் சைவ ஏகபாதம் த்ரிமூர்த்திகம் ।
அமூர்த்திமேகபாதம் ச ததா கௌரீவரப்ரதம் ॥

வஜ்ரதாநம் . . . . . . . . . . . . . . . . . . . . ।
சக்ரதானஸ்வரூபம் ச கௌரீலீலாஸமன்விதம் ।
விஷாபஹரணம் சைவ புரம் தாஹனமேவ ச ॥

ததா ப்ரம்மசிரச்சேதம் கூர்மஸம்ஹாரமேவ ச ।
மத்ஸ்யாரிம் ச வராஹாரிம் ப்ரதானமூர்த்திமேவ ச ॥

ரக்தபிக்ஷாப்ரதானம் ச சிஷ்யபாவம் ததைவ ச ।
ஷடானனம் ததா சைவமஷ்டாஷ்டவிக்ரஹம் ததா ॥

பொருள் : லிங்கம், லிங்கோத்பவம், முகலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், ஸோமம், மகேச்வரம், சுகாஸீனம், உமேசம், ஸோமாஸ்கந்தம், சந்த்ரசேகரமூர்த்தி, வ்ருஷாரூடம், வ்ருஷாந்திகம், புஜங்கலலிதம், புஜங்கத்திராஸம், ஸந்த்யாந்ருத்தம், தாண்டவம், ஜானவீதரம், கங்காவிஸர்ஜனம், திரிபுராந்தகம், கல்யாணசுந்தரம், அர்தநாரீச்வரம், கஜயுத்தம், ஜ்வராபக்னம், சார்தூலஹரம், பாசுபதம், கங்காளம், கேசவார்த்தகம், பிக்ஷாடனம், ஸிம்மக்னம், சண்டேச்வர பிரசாதமூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி, யோகதக்ஷிணாமூர்த்தி, வீணாதரதக்ஷிணாமூர்த்தி, காலாந்தகம், காமாரி (மன்மதனுக்கு எதிரி), லகுளீசம், பைரவம், ஆபதுத்தாரணம், வடுகம், க்ஷேத்திரபாலகம், தக்ஷயக்ஞஹரம், கிராதம், குருமூர்த்தி, அச்வாரூடம், கஜாந்திகம், ஜலந்த்ரவதம், ஏகபாதம், த்ரிமூர்த்தி, அமூர்த்தி, கௌரீவரப்ரதம், சக்ரதானமூர்த்தி, கௌரீ லீலையுடன் கூடியவர், விஷத்தை அபஹரித்தவர், த்ரிபுரதாஹனம், பிரம்மனின் தலையைக் கொய்தவர், கூர்மஸம்ஹாரமூர்த்தி, மீனின் எதிரி, கேழலின் எதிரி, பிரதானமூர்த்தி, ரக்தபிக்ஷாபிரதானமூர்த்தி, சிஷ்யாபாவமூர்த்தி, ஷடானனமூர்த்தி முதலான அஷ்டாஷ்ட (8x8=64) மூர்த்திகளைத் தியானம்புரிதல் வேண்டும்.

## षोडशसुब्रह्मण्यनामानि

ज्ञानशक्तिधरस्कन्दो देवसेनापतिस्तथा ।
सुब्रह्मण्यगजारूढो शरकाननसम्भवः ।।

कार्तिकेयः कुमारश्च षण्मुखस्तारकान्तकः ।
सेनानि ब्रह्मशास्ता च वल्लीकल्याणसुन्दरः ।।

बालश्च क्रौञ्चभेदी च शिखिवाहनकस्तथा ।
एतानि स्वामिनामानि षोडशं प्रत्यहं नरः ।।

यः पठेत्सर्वपापेभ्यो समुच्येत महामुनेः ।
एतेषां पूर्णरूपाणां ध्यानं चैवाधुनोच्यते ।।

ஷோடசஸுப்ரஹ்மண்யநாமானி

ஜ்ஞாநசக்திதரஸ்கந்தோ தேவஸேநாபதிஸ்ததா ।
ஸுப்ரஹ்மண்யகஜாரூடோ சரகானனஸம்பவ: ॥

கார்திகேய: குமாரச்ச ஷண்முகஸ்தாரகாந்தக: ॥
ஸேநானி: ப்ரஹ்மசாஸ்தா ச வல்லீகல்யாணஸுந்தர: ॥

பாலச்ச க்ரௌஞ்சபேதீ ச சிகிவாஹனகஸ்ததா ।
ஏதானி ஸ்வாமிநாமானி ஷோடசம் ப்ரத்யஹம் நர: ॥

ய: படேத் ஸர்வபாபேப்யோ ஸமுச்யேத மஹாமுனே: ।
ஏதேஷாம் பூர்ணரூபாணாம் த்யானம் சைவாதுனோச்யதே ॥

பொருள் : ஞானசக்திதரர், ஸ்கந்தர், தேவஸேனாபதி, சுப்ரமண்யர், கஜாரூடர், சரகானனர், கார்த்திகேயர், குமரன், ஷண்முகர், தாரகாந்தகர், (தாரகனின் எமன்), ஸேநானி, பிரம்மசாஸ்தா, வல்லீகல்யாணசுந்தரர், பாலர், கிரௌஞ்சபேதீ, சிகிவாஹனர் ஆகிய பதினாறு வகையான சுப்ரமண்யரின் திருநாமங்களை தினமும் படிப்பவர் பாபங்களனைத்திலிருந்தும் விடுபடுகின்றனர்.

## एकादशरुद्रनामानि

महादेवो हरो रुद्रः शङ्करो नीललोहितः ।
ईशानो विजयो नाम देवदेवो भवोद्भवः ।।
कपालीशश्च विज्ञेयः रुद्रो एकादशस्तथा ।।

ஏகாதசருத்ரநாமானி

மஹாதேவோ ஹரோ ருத்ர: சங்கரோ நீலலோஹித:।
ஈசானோ விஜயோ நாம தேவதேவோ பவோத்பவ:॥
கபாலீசஸ்ச விக்ஞேய: ருத்ரோ ஏகாதசஸ்ததா ॥

பொருள் : மகாதேவர், ஹரர், ருத்ரர், சங்கரர், நீலலோஹிதர், ஈசானர், விஜயர், தேவதேவர், பவோத்பவர், கபாலர், ஈசர் ஆகியோர் பதினொரு ருத்திரர்களாவர்.

## सप्तताण्डवनामानि

आनन्दताण्डवं पूर्वं सन्ध्याताण्डवकं परम् ।
गौरीताण्डवकं प्रोक्तं तथा त्रिपुरताण्डवम् ।।

कालीताण्डवमेवोक्तं मुनीनां चैव ताण्डवम् ।
संहारताण्डवं चैव इत्येते सप्तताण्डवम् ।।

ஸப்ததாண்டவ-நாமானி

ஆனந்ததாண்டவம் பூர்வம் ஸந்த்யாதாண்டவகம் பரம் ।
கௌரீதாண்டவகம் ப்ரோக்தம் ததா த்ரிபுரதாண்டவம் ॥

காளீதாண்டவமேவோக்தம் முனீனாம் சைவ தாண்டவம் ।
ஸம்ஹாரதாண்டவம் சைவ இத்யேதே ஸப்ததாண்டவம் ॥

பொருள் : ஆனந்ததாண்டவம், சந்த்யாதாண்டவம், கௌரீதாண்டவம், த்ரிபுரதாண்டவம், காளீதாண்டவம், முனிவர்களுக்கான தாண்டவம், ஸம்ஹாரதாண்டவம் ஆகியன ஏழுவகைத் தாண்டவங்களாம்.

## महासदाशिवध्यानम्

प्रसन्नपञ्चविंशतिः स्फुटाननं जटाधरं
सपञ्चसप्ततीक्षणं कपोलकुण्डलाङ्कितम् ।
शतार्धभूषितं करं[1] वराभयान्वितं स्थितो
भुजङ्गभूषणं परं भजे महासदाशिवम् ।।

---

1. हस्तभूषितं - (C. V. No. 116; P. No. 26)

மஹாஸதாசிவ-த்யானம்

ப்ரஸன்னபஞ்சவிம்சதி: ஸ்புடானனம் ஜடாதரம்
ஸபஞ்சஸப்ததீக்ஷணம் கபோலகுண்டலாங்கிதம் ।
சதார்தபூஷிதம் கரம் வராபயான்விதம் ஸ்திதோ
புஜங்கபூஷணம் பரம் பஜே மஹாசதாசிவம் ॥

பொருள் : ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற வகைகளில் மேலிருந்து கீழாக அமைகின்ற இருபத்தைந்து முகங்களைப் பெற்றவரும், ஜடாதாரியும், எழுபத்தைந்து (25x3) கண்களைப் பெற்றவரும், கபோலகுண்டலங்களுடன் காட்சி நல்குபவரும், 50 கைகளைப் பெற்றவரும், வரதாபயமுத்திரைகளைத் தாங்கியவரும், பாம்பை அணியாகப் பெற்றவருமான மகாசதாசிவரை வணங்குகின்றேன்.

## शिवाष्टविद्येश्वरध्यानम्

अनन्तेशस्तथासूक्ष्मो शिवोत्तमं चैकनेत्रकः ।
एकरुद्राक्ष्यमूर्तिश्च श्रीकण्ठश्च शिखण्डिनः ।।

சிவாஷ்டவித்யேச்வர-த்யானம்

அனந்தேசஸ்ததாஸூக்ஷ்மோ சிவோத்தமம் சைகநேத்ரக: ।
ஏகருத்ராக்ஷ்யமூர்த்திஸ்ச ஸ்ரீகண்டஸ்ச சிகண்டின: ॥

பொருள் : அனந்தேசன், சூக்ஷ்மன், சிவோத்தமன், ஏகநேத்ரகன், ஏகருத்ரன், அக்ஷிமூர்த்தி, ஸ்ரீகண்டன், சிகண்டி ஆகியோர் சிவாஷ்டவித்யேச்வரர்கள் ஆவர்.

## अनन्तविद्येश्वरध्यानम्

अनन्तेशं चतुर्वक्त्रं जटामकुटमण्डितम् ।
खण्डेन्दुमौलिनं देवं गङ्गापद्मासनस्थितम् ।।

खड्गखेटधनुर्बाणं कमण्डल्वक्षसूत्रिणम् ।
वराभयकरं देवं शूलं पङ्कजधारिणम् ।।

அனந்தவித்யேச்வர-தியானம்

அனந்தேசம் சதுர்வக்த்ரம் ஜடாமகுடமண்டிதம் ।
கண்டேந்துமௌலினம் தேவம் கங்காபத்மாஸனஸ்திதம் ॥

கட்ககேடதனுர்பாணம் கமண்டல்வக்ஷசூத்ரிணம் ।
வராபயகரம் தேவம் சூலம் பங்கஜதாரிணம் ॥

பொருள் : நான்கு முகத்தோடும், ஜடையையே மகுடமாகக் கொண்டவரும், பிறை நிலவையும், கங்கையையும் தலையில் சூடியவரும், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், கத்தி, கேடயம், வில், அம்பு, கமண்டலம், அக்ஷசூத்ரம் ஆகியவற்றைத் தரித்தவரும், வரதாபயமுத்திரைகளையும், சூலம், தாமரை போன்றவற்றையும் பெற்று விளங்கும் சிவாஷ்டவித்யேச்வரருள் முதல்வரான அநந்தேசரைத் தியானிக்கவேண்டும்.

## सूक्ष्मविद्येश्वर-ध्यानम्

रक्ताङ्गं सूक्ष्मदेहञ्च वराभयकराब्जकम् ।
शूलाक्षं गण्डिकां चैव सर्वावयवसुन्दरम् ।।
खड्गखेटधनुर्बाणं जटाचन्द्रकलाधरम् ।
पद्मासनसमायुक्तं पद्ममालाविभूषितम् ।।

ஸூக்ஷ்மவித்யேச்வர-தியானம்

ரக்தாங்கம் ஸூக்ஷ்மதேஹம் ச வராபயகராப்ஜகம் ।
சூலாக்ஷம் கண்டிகாம் சைவ ஸர்வாவயவஸுந்தரம் ॥
கட்ககேடதநுர்பாணம் ஜடாசந்த்ரகலாதரம் ।
பத்மாஸனஸமாயுக்தம் பத்மமாலாவிபூஷிதம் ॥

பொருள் : செந்நிற உடல், சூக்ஷ்மதேஹம், வரதமுத்திரை, அபயமுத்திரை, சூலம், அக்ஷமாலை, கமண்டலம் ஆகியவை கொண்டு அங்கமனைத்தும் அழகுடனே திகழ்பவரும், கத்தி, கேடயம், வில், அம்பு, ஜடை, சந்திரனின் கலை, பத்மமாலை போன்றவற்றுடன் பத்மாஸனத்தில் வீற்றிருப்பவருமான சூக்ஷ்மவித்யேச்வரரைத் தியானிக்கவேண்டும்.

## शिवोत्तमविद्येश्वरध्यानम्

शिवोत्तमं नीलवर्णं गङ्गावर्णजटाधरम् ।
चापबाणपराभीति खड्गखेटाब्जगण्डिकम् ।।
त्रिशूलमक्षमालां च दधानं करपङ्कजैः ।
प्रसन्नास्यं त्रिणेत्रं च पङ्कजासनसंस्थितम् ।।

சிவோத்தமவித்யேச்வர-தியானம்

> சிவோத்தமம் நீலவர்ணம் கங்காவர்ணஜடாதரம் ।
> சாபபாணபராபீதி கட்ககேடாப்ஜகண்டிகம் ॥
> த்ரிசூலமக்ஷமாலாம் ச ததானம் கரபங்கஜை: ॥
> ப்ரஸன்னாஸ்யம் த்ரிணேத்ரம் ச பங்கஜாஸனஸம்ஸ்திதம் ॥

பொருள் : நீலவண்ணம் கொண்டு கங்கையைப் போன்ற தூய்மையான ஜடையைத் தரித்திருப்பவரும், அம்பு, அபயம், கத்தி, கேடயம், தாமரை, கமண்டலம், த்ரிசூலம், அக்ஷமாலை ஆகியவற்றைத் தன் கைகளில் பெற்றவரும், நிர்மலமான முகம், மூன்று கண்கள் போன்றவற்றுடன் பத்மாஸனத்தில் காட்சி தருபவருமான சிவோத்தம வித்யேச்வரரைத் தியானம் புரியவேண்டும்.

## एकनेत्रविद्येश्वरध्यानम्

> भृङ्गाभमेकनेत्रं वैचाक्षमालां कमण्डलुम् ।
> खड्गखेटधनुर्बाणं वरदाभयशूलकम् ॥
> इन्दुगङ्गाधरं देवं प्रसन्नवदनान्वितम् ॥

ஏகநேத்ரவித்யேச்வர-த்யானம்

> ப்ருங்காபமேகநேத்ரம் வைசாக்ஷமாலாம் கமண்டலும் ।
> கட்ககேடதனுர்பாணம் வரதாபயசூலகம் ॥
> இந்துகங்காதரம் தேவம் ப்ரஸன்னவதனான்விதம் ॥

பொருள் : வண்டின் கண்போல் விளங்குவதும், ஒரு கண், அக்ஷமாலை, கமண்டலம், கத்தி, கேடயம், வில், அம்பு, வரதமுத்திரை, அபயமுத்திரை, சூலம், சந்திரன், கங்கை, நிர்மலமான முகம் ஆகியவற்றுடன் கூடிய ஏகநேத்ரவித்யேச்வரரைத் தியானிக்கவேண்டும்.

## एकरुद्रविद्येश्वरध्यानम्

> शशाङ्कमेकरुद्रं च गङ्गाचन्द्रधरं शुभम् ।
> खड्गखेटधनुर्बाणं अक्षमालां कमण्डलुम् ॥
> पद्मं शूलाभयञ्चैव वरदं पङ्कजासनम् ॥

ஏகருத்ரவித்யேச்வர-த்யானம்

சசாங்கமேகருத்ரம் ச கங்காசந்த்ரதரம் சுபம் ।
கட்ககேடதனுர்பாணம் அக்ஷமாலாம் கமண்டலும் ॥
பத்மம் சூலாபயஞ்சைவ வரதம் பங்கஜாஸனம் ॥

பொருள் : முயலை அடையாளமாகக் கொண்ட திங்களையும், கங்கையையும் தரித்து மங்களமாய்க் காட்சி தருபவரும், கத்தி, கேடயம், வில், அம்பு, அக்ஷமாலை, கமண்டலம், தாமரை, சூலம் போன்றவற்றுடன் அபய - வரத முத்திரைகளோடு பத்மாஸனத்தில் காணப்படுபவரான ஏகருத்ரமூர்த்தியைத் தியானம் புரியவேண்டும்.

## अमूर्त्तिध्यानम्

हेमाभाङ्गं अमूर्तिं च जटामकुटशोभितम् ।
अभयाक्षवरं खड्गं धनुर्बाणं च खेटकम् ॥
गण्डाब्जशूलहस्तं च दधानं पद्मसंस्थितम् ॥

அமூர்த்தி-த்யானம்

ஹேமாபாங்கம் அமூர்த்திம் ச ஜடாமகுடசோபிதம் ।
அபயாக்ஷவரம் கட்கம் தனுர்பாணம் ச கேடகம் ॥
கண்டாப்ஜசூலஹஸ்தம் ச ததானம் பத்மஸம்ஸ்திதம் ॥

பொருள் : பொன்போல் மிளிரும் உடலை உடையவரும், ஜடை, மகுடம் ஆகியவற்றோடு திகழ்பவரும், அபய-வரதமுத்திரைகள், அக்ஷமாலை, வில், அம்பு, கேடயம், கமண்டலம், தாமரை, சூலம் போன்றவற்றுடன் பத்மாஸனத்தில் காணப்படுபவரான அமூர்த்திவித்யேச்வரரைத் தியானம் புரிதல்வேண்டும்.

## श्रीकण्ठविद्येश्वरध्यानम्

श्रीकण्ठं रक्तवर्णं च गङ्गासोमजटान्वितम् ।
अभयाक्षवरं खड्गं खेटकं चापबाणकम् ॥
पङ्कजं शूलगण्डीं च बिभ्राणं सर्वभूषणम् ॥

ஸ்ரீகண்டவித்யேச்வர-த்யானம்

ஸ்ரீகண்டம் ரக்தவர்ணம் ச கங்காஸோமஜடான்விதம் ।
அபயாக்ஷவரம் கட்கம் கேடகம் சாபபாணகம் ॥
பங்கஜம் சூலகண்டீம் ச பிப்ராணம் ஸர்வபூஷணம் ॥

பொருள் : நீலகண்டரும், ரத்தம்போல் சிவப்பு நிறமுடையவரும், கங்கை, சந்திரர்களை சடையினில் அணிந்தவரும், அபய-வரதமுத்திரைகள், அக்ஷமாலை, கத்தி, கேடயம், அம்பு, வில், தாமரை, சூலம், கமண்டலம் ஆகியவற்றைத் தரித்தவரும், அணிகலன்களைப் பூண்டவருமான ஸ்ரீகண்டவித்யேச்வரரைத் தியானித்தல்வேண்டும்.

## शिखण्डिविद्येश्वर-ध्यानम्

शिखण्डी सितवर्णं च वराभयकराब्जकम् ।
खड्गखेटधनुर्बाणं शूलाक्षं कुण्डिकाढ्यकम् ।।
पद्ममध्ये स्थितं देवं जटिलं वक्त्रपङ्कजम् ।।

சிகண்டிவித்யேச்வர-தியானம்

சிகண்டீ ஸிதவர்ணம் ச வராபயகராப்ஜகம் ।
கட்ககேடதநுர்பாணம் சூலாக்ஷம் குண்டிகாட்யகம் ॥
பத்மமத்யே ஸ்திதம் தேவம் ஜடிலம் வக்த்ரபங்கஜம் ॥

பொருள் : வெண்மையான நிறத்துடன் அபயம்-வரதமுத்திரைகள், கத்தி, கேடயம், வில், அம்பு, சூலம், அக்ஷமாலை, கமண்டலம் ஆகியவற்றுடன் விளங்குபவரும், தாமரையின்மீது வீற்றிருப்பவரும், தாமரையையொத்த முகம் கொண்டவருமான சிகண்டிதேவரை தியானம் புரிதல்வேண்டும்.

## स्कन्दाष्टविद्येश्वराः

जयन्तोऽग्निशिखी चैव कृत्तिकापुत्रकस्ततः ।
भूतपतिश्च सेनानीश्चाग्निभूश्च तथैव च ।।
वह्निशूलविशालाक्षाः स्कन्दविद्येश्वराष्टकाः ।।

ஸ்கந்தாஷ்டவித்யேச்வரர்கள்

ஜயந்தோऽக்னிசிகீ சைவ க்ருத்திகாபுத்ரகஸ்தத: ।
பூதபதிச்ச ஸேனானீச்சாக்னிபூச்ச ததைவ ச ॥
வஹ்னிசூலவிசாலாக்ஷா: ஸ்கந்தவித்யேச்வராஷ்டகா: ॥

பொருள் : ஜயந்தன், அக்னிசிகீ, க்ருத்திகையின் புத்திரன், பூதபதி:, ஸேனானீ:, அக்னிபூ:, வன்னிசூலன், விசாலாக்ஷன் ஆகிய இவர்கள் ஸ்கந்தாஷ்டவித்யேச்வரர்கள் ஆவர்.

## जयन्तविद्येश्वरध्यानम्

जयन्तं कुङ्कुमप्रख्यं चतुर्भुजसमन्वितम् ।
करण्डमकुटोपेतं अभयं वरदान्वितम् ।।
वज्रशक्तिसमायुक्तं सर्वाभरणभूषितम् ।।

ஜயந்தவித்யேச்வர-த்யானம்

ஜயந்தம் குங்குமப்ரக்யம் சதுர்புஜஸமன்விதம் ।
கரண்டமகுடோபேதம் அபயம் வரதான்விதம் ॥
வஜ்ரசக்திஸமாயுக்தம் ஸர்வாபரணபூஷிதம் ॥

பொருள் : குங்குமம்போல் சிவந்தமேனியுடன், நாற்கரங்களோடு கூடியவரும், கரண்டமகுடங்களைத் தரித்தவரும், அபயவரதமுத்திரைகளுடன் விளங்குபவரும், வஜ்ர சக்தியுடன் கூடியவரும், ஸர்வாபரணபூஷிதருமான ஜயந்தவித்யேச்வரரைத் தியானிக்க வேண்டும்

## अग्निशिखीविद्येश्वरध्यानम्

रक्तवर्णञ्चाग्निशिखं चतुर्भुजसमन्वितम् ।
करण्डमकुटोपेतं वज्रशक्त्यभयान्वितम् ।।

அக்னிசிகீவித்யேச்வர-த்யானம்

ரக்தவர்ணஞ்சாக்னிசிகம் சதுர்புஜஸமந்விதம் ।
கரண்டமகுடோபேதம் வஜ்ரசக்த்யபயான்விதம் ॥

பொருள் : ரக்தம்போல் சிவந்தநிறம், அக்னி சிகை, நான்கு கைகள், கரண்டமகுடம் ஆகியவற்றுடன் வஜ்ரசக்த்யாயுதங்களையும், வரதாபயமுத்திரை களையும் தனது நாற்கரங்களில் கொண்டவரான அக்னிசிகாவித்யேச்வரரைத் தியானிக்க வேண்டும்.

## कृत्तिकापुत्रविद्येश्वरध्यानम्

कृत्तिकापुत्ररूपं तु अभयं वरदान्वितम् ।
वज्रशक्तिधरोपेतं सर्वाभरणभूषितम् ।।

க்ருத்திகாபுத்ரவித்யேச்வர-த்யானம்

க்ருத்திகாபுத்ரரூபம் து அபயம் வரதான்விதம் ।
வஜ்ரசக்திதரோபேதம் ஸர்வாபரணபூஷிதம் ॥

பொருள் : வஜ்ரசக்த்யாதி ஆயுதங்களையும், அபயவரதமுத்திரைகளையும் நாற்கரங்களில் பெற்று அனைத்து அணிகலன்களுடன் திகழ்கின்றவரான கிருத்திகா புத்ரனைத் தியானிக்கவேண்டும்.

## भूतपतिविद्येश्वरध्यानम्

कृष्णवर्णसमायुक्तं खड्गखेटकधारिणम् ।
अभयं वरदोपेतं वज्रशक्तिधरान्वितम् ।।

பூதபதிவித்யேச்வர-த்யானம்

க்ருஷ்ணவர்ணஸமாயுக்தம் கட்ககேடகதாரிணம் ।
அபயம் வரதோபேதம் வஜ்ரசக்திதரான்விதம் ॥

பொருள் : கருமைநிறத்தோடு கூடியவரும், கத்தி, கேடயம் முதலியவற்றைத் தரித்தவரும், அபயவரதமுத்திரைகளையும், வஜ்ரசக்தி ஆயுதங்களையும் பெற்றவரான பூதபதியைத் தியானித்தல் வேண்டும்.

## सेनानिविद्येश्वरध्यानम्

सेनापति शुक्लवर्णं वज्रशक्त्यभयं भजे ।
हारकेयूरकटकं सर्वलक्षणसंयुतम् ।।

ஸேனானிவித்யேச்வர-தியானம்

ஸேனாபதி சுக்லவர்ணம் வஜ்ரசக்த்யபயம் பஜே ।
ஹாரகேயூரகடகம் ஸர்வலக்ஷணஸம்யுதம் ॥

பொருள் : வெண்மை நிறத்துடன் வஜ்ரம், சக்தி ஆகிய ஆயுதங்களையும், அபயவரதமுத்திரைகளையும் கொண்டு கழுத்தணி, கேயூரம் (முழங்கைக்கும் தோள்பட்டைக்கும் இடைப்பகுதியில் அணியப்பெறும் அணி) கைவளைபோன்ற அணிகலன்களை அணிந்து ஸர்வலக்ஷணங்களோடு கூடிய ஸேனானிவித்யேச்வரரைத் தியானித்தல் வேண்டும்.

## अग्निभूविद्येश्वरध्यानम्

**विद्रुमाभं गुणोपेतं करण्डमकुटान्वितम् ।**
**अभयं वरदोपेतं वज्रशक्तिधरं भजे ।।**

அக்னிபூவித்யேச்வர-த்யானம்

வித்ருமாபம் குணோபேதம் கரண்டமகுடான்விதம் ।
அபயம் வரதோபேதம் வஜ்ரசக்திதரம் பஜே ॥

பொருள் : பவளம்போல் மிளிர்பவரும், குணத்துடன் கூடியவரும், கரண்ட மகுடத்தை அணிந்திருப்பவரும், அபயவரதமுத்திரைகளையும், வஜ்ரம், சக்தி ஆகிய ஆயுதங்களையும் கொண்டு நாற்கரத்துடன் திகழ்பவருமான அக்னிபூவித்யேச்வரரைத் தியானிக்கவேண்டும்.

## हेमशूलविद्येश्वरध्यानम्

**हेमशूलं विशालाक्षं अभयं वरवज्रकम् ।**
**शक्तिहस्तसमोपेतं सर्वाभरणभूषितम् ।।**

ஹேமசூலவித்யேச்வர-த்யானம்

ஹேமசூலம் விசாலாக்ஷம் அபயம் வரவஜ்ரகம் ।
சக்திஹஸ்தஸமோபேதம் ஸர்வாபரணபூஷிதம் ॥

பொருள் : விசாலமான கண்களைப் பெற்றவரும், அபயவரதமுத்திரைகளையும், வஜ்ரசக்தி ஆயுதங்களையும் தரித்தவரும், ஸர்வாபரண பூஷிதருமான ஹேமசூல (பொன்னிறச்சூலமுடைய) வித்யேச்வரரைத் தியானிக்கவேண்டும்.

## विशालाक्षविद्येश्वरध्यानम्

**विशालाक्षं चतुर्हस्तं अभयं वरदान्वितम् ।**
**शक्तिवज्रधरं शुभ्रं सर्वाभरणभूषितम् ।।**

விசாலாக்ஷவித்யேச்வர-த்யானம்

விசாலாக்ஷம் சதுர்ஹஸ்தம் அபயம் வரதான்விதம் ।
சக்திவஜ்ரதரம் சுப்ரம் ஸர்வாபரணபூஷிதம் ॥

பொருள் : விசாலமான கண்களைப் பெற்றவரும், நாற்கரங்கள், அபய-வரத முத்திரைகள், சக்திவஜ்ராதி ஆயுதங்கள் போன்றவற்றுடன் தூய்மையாய் மிளிர்பவரும், ஸர்வாபரணபூஷிதருமான விசாலாக்ஷவித்யேச்வரரைத் தியானித்தல் வேண்டும்.

## इन्द्रध्यानम्

ऐरावतगजारूढं स्वर्णवर्णं[1] किरीटिनम् ।
सहस्रनयनं चक्रं वज्रपाणिं विभावयेत् ।।

இந்த்ர-த்யானம்

ஐராவதகஜாரூடம் ஸ்வர்ணவர்ணம்[1] கிரீடினம் ।
ஸஹஸ்ரநயனம் சக்ரம் வஜ்ரபாணிம் விபாவயேத் ॥

பொருள் : ஐராவதம் என்ற வெள்ளை யானையின்மீது அமர்ந்தவரும், பொற்கிரீடம் அணிந்தவரும், ஆயிரம் கண்களுடன் சக்கரம், வஜ்ரம் ஆகியவற்றைத் தரித்தவருமான இந்திர திக்பாலரைத் (கிழக்குத் திசைக்கு அதிபதியைத்) தியானித்தல் வேண்டும்.

## अग्निध्यानम्

सप्तार्चिषं च बिभ्राणं अक्षमाला कमण्डलुम् ।
ज्वालमालाकुलं रक्तं शक्तिहस्तं[2] अजासनम् ।।

அக்னி-த்யானம்

ஸப்தார்சிஷம் ச பிப்ராணம் அக்ஷமாலா கமண்டலும். ।
ஜ்வாலமாலாகுலம் ரக்தம் சக்திஹஸ்தம் அஜாஸனம் ॥

1. श्यामं - गौतमीयतन्त्रे - अध्यायः - १० श्लोकः - ९९
2. शक्तितोमर - गौतमीयतन्त्रे - अध्यायः - १० श्लोकः - १००

பொருள் : ஏழு நாக்குகளை உடையவரும், அக்ஷமாலை, கமண்டலம் ஆகியவற்றோடு ஜ்வலிக்கின்ற மாலையை அணிந்து செந்நிறமாய்க் காட்சி தருபவரும், சக்தி ஆயுதத்தைக் கையிற்கொண்டு ஆட்டின்மீது அமர்ந்துள்ளவருமான அக்னி திக்பாலரைத் (தென்கிழக்குத் திசைக்கதிபதியைத்) தியானித்தல் வேண்டும்.

यमध्यानम्

कृतान्तं महिषारूढं दण्डहस्तं भयानकम् ।
कालपाशधरं कृष्णं ध्यायेत् दक्षिणदिक्पतिम् ।।

யம-த்யானம்

க்ருதாந்தம் மஹிஷாரூடம் தண்டஹஸ்தம் பயானகம் ।
காலபாசதரம் க்ருஷ்ணம் த்யாயேத் தக்ஷிணதிக்பதிம் ॥

பொருள் : க்ருதாந்தர் எனப்படுபவரும், மகிஷத்தின் மீதமர்ந்தவரும், தண்டத்தைக் கையினில் வைத்திருப்பவரும், பயங்கரமானவரும், காலபாசத்தைக் கையில் கொண்டு கருமை நிறமாய்க் காட்சி தருபவரும், தென்திசைக்கதிபதியைத் (யம திக்பாலரைத்) தியானிக்கவேண்டும்.

निऋतिध्यानम्

रक्तनेत्रशवारूढं नीलोत्पलदलप्रभम् ।
कृपाणं पाणिमसौ खं पिबन्तं राक्षसेश्वरम् ।।

நிர்ருதி-த்யானம்

ரக்தநேத்ரசவாரூடம் நீலோத்பலதளப்ரபம் ।
க்ருபாணம் பாணிமஸௌ கம் பிபந்தம் ராக்ஷஸேச்வரம் ॥

பொருள் : சிவந்த கண்களுடன் சவத்தின் மீதமர்ந்தவரும், நீலோத்பலதளம் போன்ற பிரகாசத்தை உடையவரும், கத்தியைக் கையில் வைத்திருப்பவரும், அரக்கர்தம் தலைவருமான நிர்ருதியைத் (குதிரை வாஹனரும் - கௌதமீய தந்த்ரம் - அத். 10, ச்லோ. எண். 102, தென்மேற்குத் திசைப் பாலகரைத்) தியானித்தல்வேண்டும்.

वरुणध्यानम्

नागपाशधरं हृष्टं रत्नौघद्युतिविग्रहम् ।
शशाङ्कधवलं ध्यायेत् वरुणं मकरासनम् ।।

வருண-த்யானம்

நாகபாசதரம் ஹ்ருஷ்டம் ரத்னௌகத்யுதிவிக்ரஹம் ।
சசாங்கதவளம் த்யாயேத் வருணம் மகராஸனம் ॥

பொருள் : நாகபாசத்தைத் தரித்திருப்பவரும், மகிழ்ச்சியாய் இருப்பவரும், ரத்தினத்திரளின் ஒளிபோல் விளங்குபவரும், சந்திரன்போல் வெண்மையானவரும்,

முதலையை இருக்கையாக உடையவருமான வருணனைத் (மேற்றிசைப் பாலகரைத்) தியானிக்கவேண்டும்.

## वायुध्यानम्

आपीनं हरितश्चया विलोलध्वजधारिणम् ।
प्राणभूतं च भूतानां हरिणस्तं[1] समीरणम् ।।

**வாயு-த்யானம்**

**ஆபீனம் ஹரிதச்சயா விலோலத்வஜதாரிணம் ।**
**ப்ராணபூதம் ச பூதானாம் ஹரிணஸ்தம்[1] ஸமீரணம் ॥**

பொருள் : மிகவும் பருத்தும், பச்சை நிறத்துடனும், அசைந்தாடும் கொடியைத் தரித்தவரும், உயிரினங்களின் உயிராய்த் திகழ்பவரும், மான் வாகனத்தில் அமர்ந்திருப்பவருமானவாயுவைத் (வடமேற்குத்திசைப் பாலகரைத்) தியானித்தல் வேண்டும்.

## कुबेरध्यानम्

कुबेरं मनुजासीनं सगर्वं खर्वविग्रहम् ।
स्वर्णच्छायं गदाहस्तं उत्तराशापतिं स्मरेत् ।।

**குபேர-த்யானம்**

**குபேரம் மனுஜாஸீனம் ஸகர்வம் கர்வவிக்ரஹம் ।**
**ஸ்வர்ணச்சாயம் கதாஹஸ்தம் உத்தராசாபதிம் ஸ்மரேத் ॥**

பொருள் : மனிதனை வாகனமாகக் கொண்டவரும், கர்வத்துடனும், குட்டையான மூர்த்தியாயும், பொன்போன்றொளிர்பவரும், கதையைக் கையில் கொண்டவரும், வடதிசைக்கதிபதியுமான (முயலை அடையாளமாகக்கொண்ட - கௌதமீயதந்த்ரம் - அத். 10, சு. எண். 105) குபேரனைத் தியானிக்கவேண்டும்.

## ईशानध्यानम्

ईशानं वृषभारूढं त्रिशूलं व्यालधारिणम् ।
शरच्छन्द्रवदाकारं चन्द्रमौलिं त्रिलोचनम् ।।

---

1. दक्षहस्तांकुशमेणवाहनं - गौतमीयतन्त्रे 54 / 104

ஈசான-த்யானம்

**ஈசானம் வ்ருஷபாரூடம் த்ரிசூலம் வ்யாளதாரிணம் ।**
**சரச்சந்த்ரவதாகாரம் சந்த்ரமௌலிம் த்ரிலோசனம் ॥**

பொருள் : எருதுமேல் வீற்றிருப்பவரும், த்ரிசூலத்தைக் கையினில் பெற்றவரும், புலித்தோலை உடுத்தியவரும், சரத்கால சந்திரனைப்போன்று வெளுப்பான உடலை உடையவரும், சந்திரனைத் தலையணியாகப் பெற்றவரும், முக்கண்ணுடையவருமான ஈசானரைத் (வடகிழக்குத் திசைப்பாலகரைத்) தியானிக்கவேண்டும்.

## दशायुधध्यानम्

**वज्रं स्यात् पुरुषस्थूलः कर्कशोऽतिदृढो बलिः ।**

வஜ்ர-தியானம்

**வஜ்ரம் ஸ்யாத் புருஷஸ்தூல: கர்க்கசோऽதித்ருடோ பலி: ।**

பொருள் : ஆண் வடிவாயும், பருமனாயும், கரடுமுரடாயும், த்ருடமாயும், வலிமையாயும் உள்ள வஜ்ரத்தைத் தியானிக்கவேண்டும்.

## शक्तिध्यानम्

**शक्तिस्तु योषिताकारो लोहिताङ्घ्रित्रिकोणगा ।**

சக்தி-த்யானம்

**சக்திஸ்து யோஷிதாகாரோ லோஹிதாங்க்ரித்ரிகோணகா ।**

பொருள் : பெண் உருவாயும், செந்நிறக்கால்களுடன் மூன்று திசைகளில் செல்லும்படியாய் அமைந்த முனைப்பகுதியை உடைய சக்தி எனப்படும் ஆயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

## दण्डध्यानम्

**दण्डोऽपि पुरुषः कृष्णो वपुर्लोहितलोचनः ।**

தண்ட-த்யானம்

**தண்டோऽபி புருஷ: க்ருஷ்ணோ வபுர்லோஹிதலோசன: ।**

பொருள் : புருஷகாரமாயும், கருமை நிறமேனியாயும், சிவந்த கண்களை உடையதாயும் உள்ள தண்டாயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

खड्गध्यानम्

खड्गं च पुरुषश्श्यामशरीरः क्रुद्धलोचनः ।

கட்க-த்யானம்

கட்கம் ச புருஷச்ச்யாமசரீர: க்ருத்தலோசன: ।

பொருள்: புருஷ வடிவாயும், கருமை நிறத்தோடும், கோபமான பார்வையுடனும், விளங்கும் கத்தி எனும் ஆயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

पाशध्यानम्

पाशसप्तफणोपेतः पुरुषः पुच्छसंयुतः ।

பாச-த்யானம்

பாஸஸப்தபணோபேத: புருஷ: புச்சஸம்யுத: ।

பொருள் : புருஷாகார்மாயும், ஏழு படங்களுடன் கூடியவராயும், வாலுடன் கூடியவராயும் விளங்கும் பாசாயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

ध्वजध्यानम्

ध्वजस्तु पुरुषः पीतः व्यापृतांसो महाभुजः ।

த்வஜ-த்யானம்

த்வஜஸ்து புருஷ: பீத: வ்யாப்ருதாம்ஸோ மஹாபுஜ: ।

பொருள் : ஆண் வடிவாயும், மஞ்சள் நிறத்தோடும், விஸ்தாரமாயுமுள்ள தோள்களைப் பெற்றிலங்கும் துவஜாயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

गदाध्यानम्

गदा पीतप्रभा कन्या स्त्रीपीने जघनस्थलाम् ।

கதா-த்யானம்

கதா பீதப்ரபா கன்யா ஸ்த்ரீபீனே ஜகனஸ்தலாம் ।

பொருள் : மஞ்சள் நிறத்துடனும், பெண் வடிவமாயும், பருத்த பிருஷ்டபாகத்தை உடையதாயும், விளங்கும் கதாயுதத்தைத் தியானித்தல் வேண்டும்.

### त्रिशूलध्यानम्

शूलस्तु पुरुषो दिव्यो नभश्यामकलेबरः ।

த்ரிசூல- த்யானம்

சூலஸ்து புருஷோ திவ்யோ நபச்யாமகளேபர: ।

பொருள் : புருஷாகாரமாயும், திவ்யமாயும், வானம்போல் கருத்த உடல் உடையதுமான சூலாயுதத்தைத் தியானித்தல் வேண்டும்.

### पद्मध्यानम्

पद्मं च पुरुषो दिव्यो शुक्लाङ्गं शुभलोचनम् ।

பத்ம-த்யானம்

பத்மம் ச புருஷோ திவ்யோ சுக்லாங்கம் சுபலோசனம் ।

பொருள் : ஆண் வடிவமாயும், திவ்யமாயும், வெண்மையான அங்கத்தையும், சுபமான கண்களையும் உள்ள பத்மாயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

### चक्रध्यानम्

शतारचक्रभृन्मूर्ध्निचक्रश्यामतनुः पुमान् ।

சக்ர-த்யானம்

சதாரசக்ரப்ருன்மூர்த்நிசக்ரச்யாமதநு: புமான் ।

பொருள் : நூறு ஆரமுள்ள சக்கரத்தைத் தலையில் தரித்தவரும், கருமையான உடலுடன் புருஷ வடிவாயும் காட்சிதரும் சக்ராயுதத்தைத் தியானிக்கவேண்டும்.

### विमानध्यानम्

द्विपादं च त्रिणयनं भस्मपाण्डरविग्रहम् ।
शूलं शक्तिधनुर्बाणं पाशचक्रगदाब्जधृक् ।।

अष्टहस्तसमोपेतं स्तूप्यान्तं मकुटान्वितम् ।
रक्तवर्णं विशालाक्षं स्थूललिङ्गाकृतिं भवेत् ।।

उपानमङ्घ्रिदेशस्तु कुमुदं जङ्घदेशके ।
पद्मान्तं चैव मूर्धा तु मकुटे मकुटं तथा ।।

द्विपार्श्वं करयुग्मं च एवं वै शिवरूपकम् ।
एवं ध्यात्वा विशेषेण स्थूललिङ्गस्य पूजनम् ।।

விமான-த்யானம்

த்விபாதம் ச த்ரிணயனம் பஸ்மபாண்டரவிக்ரஹம் ।
சூலம் சக்திதநுர்பாணம் பாசசக்ரகதாப்ஜத்ருக் ॥

அஷ்டஹஸ்தஸமோபேதம் ஸ்தூப்யாந்தம் மகுடான்விதம் ।
ரக்தவர்ணம் விசாலாக்ஷம் ஸ்தூலலிங்காக்ருதிம் பவேத் ॥

உபானமங்க்ரிம்தேசஸ்து குமுதம் ஜங்கதேசகே ।
பத்மாந்தம் சைவ மூர்தா து மகுடே மகுடம் ததா ॥

த்விபார்ச்வம் கரயுக்மம் ச ஏவம் வை சிவரூபகம் ।
ஏவம் த்யாத்வா விசேஷேண ஸ்தூலலிங்கஸ்ய பூஜனம் ॥

பொருள் : இருபாதங்கள், மூன்று கண்கள், பஸ்மம் பூசப்பட்டு வெண்மையாகக் காணப்படும் தேஹம், சூலம், சக்தி, வில், அம்பு, பாசம், சக்கரம், கதை ஆகிய ஆயுதங்களோடும், எட்டு கைகளுடனும் ஸ்தூபியின் எல்லைவரை மகுடத்தோடும், சிவப்பு வர்ணம், விசாலமான கண்கள் ஆகியவை பொருந்தியது ஸ்தூல லிங்க வடிவாகும். உபான பகுதியே அதன் கால்கள். குமுதமே அதன் தொடை. பத்மம் வரை உள்ள பகுதியே அதன் தலை. மகுடமே தலையணி. அதன் இருபக்கமே இரண்டு கைகள். இவ்வாறாகச் சிவரூபஸ்தூல லிங்கத்தைத் தியானித்துப் பூஜை செய்யவேண்டும்.

## पीठशक्तिध्यानम्

चतुर्भुजां प्रसन्नाक्षीं द्विनेत्रां द्विभुजान्विताम् ।
रक्तवर्णां त्रिभङ्ग्याङ्गीं चित्रवस्त्रेण वेष्टिताम् ।।

सुमुखां गन्धपुष्पाढ्यां कोमलालकभूषिताम् ।
पद्मोत्पलधरां वापि वरदाभयपाणिनाम् ।।

इति ध्यात्वा विशेषेण ध्यायेद्देवीं मनोन्मनीम् ।।

பீட சக்தி-த்யானம்

சதுர்புஜாம் ப்ரஸன்னாக்ஷீம் த்விநேத்ராம் த்விபுஜான்விதாம் ।
ரக்தவர்ணாம் த்ரிபங்க்யாங்கீம் சித்ரவஸ்த்ரேண வேஷ்டிதாம் ॥

ஸுமுகாம் கந்தபுஷ்பாட்யாம் கோமளாலகபூஷிதாம் ।
பத்மோத்பலதராம் வாபி வரதாபயபாணினாம் ॥

இதி த்யாத்வா விசேஷேண த்யாயேத் தேவீம் மனோன்மணீம் ॥

பொருள் : நான்கு கரங்கள், நிர்மலமான கண் இணைகள், சிவந்த நிறத்துடன் கூடிய உடல், திரிபங்கி, விசித்திரமான உடை அணிந்திருத்தல், இன்முகம், வாசனைப் புஷ்பங்களைத் தரித்தல், அழகிய கூந்தல், தாமரை-அல்லி மலர்கள், வரதாபய முத்திரைகள் ஆகியவற்றோடு இலங்கும் மனோன்மணிதேவியைத் (பீட சக்தியைத்) தியானிக்கவேண்டும்.

## इडुम्बध्यानम्

कुङ्कुमाभं द्विनेत्रं च किरीटं मकुटान्वितम् ।
दक्षिणे तर्जनीहस्तं वामहस्ते तथा धरम् ।।

उग्रभीमं महाघोरं राक्षसं गुहवाहनम् ।
सर्वाभरणसंयुक्तं इडुम्बं तं अहं भजे ।।

இடும்ப-த்யானம்

குங்குமாபம் த்விநேத்ரம் ச கிரீடம் மகுடாந்விதம் ।
தக்ஷிணே தர்ஜனீஹஸ்தம் வாமஹஸ்தே ததா தரம் ॥

உக்ரபீமம் மஹாகோரம் ராக்ஷஸம் குஹவாஹனம் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் இடும்பம் தம் அஹம் பஜே ॥

பொருள் : குங்குமம்போல் சிவந்தவரும், இரு கண்களைப் பெற்றவரும், கிரீடாதிகளை அணிந்தவரும், தமதிருகைகளில் தர்ஜனீ முத்திரை (ஆள்காட்டி விரலை விரித்துயரே தூக்கி, மற்ற நான்கு விரல்களை மடக்கிவைத்திருப்பது) கொண்டு மிகப்பயங்கர உருவத்தினரும், ராக்ஷஸரும் குக (குதிரை) வாகனரும், ஸர்வாபரணத்தையும் அணிந்து காட்சி கொடுக்கும் இடும்பனை நான் வணங்குகிறேன்.

## सप्तर्षीणां नामानि

अगस्त्यश्च पुलस्त्यश्च विश्वामित्रपराशरः ।
जमदग्निश्च वाल्मीकी सनत्कुमारश्च सप्त च ।।

ஸப்தர்ஷீணாம் நாமானி

அகஸ்த்யச்ச புலஸ்த்யச்ச விச்வாமித்ர பராசர: ।
ஜமதக்நிச்ச வால்மீகீ ஸனத்குமாரச்ச ஸப்த ச ॥

பொருள் : அகஸ்த்யர், புலஸ்த்யர், விச்வாமித்ரர், பராசரர், ஜமதக்னி, வால்மீகி, ஸனத்குமாரர் ஆகியோர் ஏழு ரிஷிகளாவர்.

## भद्रकालिध्यानम्

श्यामाङ्गां रक्तवस्त्रां ज्वलितशिखयुतां चाष्टहस्तैर्धृतञ्च
शूलं वेतालखड्गं डमरुकसहितां वामहस्ते कपालाम् ।
जानूबद्धो हि खेटंहलमुसलयुतां रौद्रभावां त्रिणेत्रां
चामुण्डां रुपमेतद्भुवनवशिकरां भद्रकालीं नमस्ते ।।

பத்ரகாளி-த்யானம்

ச்யாமாங்காம் ரக்தவஸ்த்ராம் ஜ்வலிதசிகயுதாம் சாஷ்டஹஸ்தைர்த்ருதம் ச
சூலம் வேதாளகட்கம் டமருகஸஹிதாம் வாமஹஸ்தே கபோலாம் ।
ஜாநூபத்தோ ஹிகேடம்ஹலமுஸலயுதாம் ரௌத்ரபாவாம் த்ரிணேத்ராம்
சாமுண்டாம் ருபமேதத்புவனவசிகராம் பத்ரகாளீம் நமஸ்தே ॥

பொருள் : கறுத்த மேனியோடும், சிவந்த ஆடை, ஜ்வாலையுடன் கூடிய சிகாமண்டலத்தை உடையவளும், எட்டுக் கைகளுடன் வலது நாற்கரங்களில் சூலம், வேதாளம், கத்தி, உடுக்கை ஆகியவற்றைப் பெற்றவரும், முழங்காலை மடக்கிவைத்துக் கொண்டு சுகாஸனத்தில் அமர்ந்திருப்பவரும், இடது நாற்கரங்களில் கபாலம், கேடயம், கோடரி, உலக்கை முதலியவற்றுடன் கூடியவரும், கோரமான பாவத்துடன் மூன்று கண்களைப் பெற்று உலகையே வசியம் பண்ணக்கூடியவரும் பத்ரகாளியுமான தங்களுக்கு வணக்கம்.

## बिल्वध्यानम्

दर्शनाद् बिल्ववृक्षस्यस्पर्शनात्पापनाशनम् ।
अघोरपापसंहारं एकबिल्वं शिवार्चनम् ।।

त्रिदलं त्रिगुणाकारं त्रिणेत्रं च त्र्यायुतम् ।
त्रिजन्मपापसंहारं एकबिल्वं शिवार्चनम् ।।

பில்வ-த்யானம்

தர்சநாத்பில்வவ்ருக்ஷஸ்ய ஸ்பர்சநாத் பாபநாசனம் ।
அகோரபாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ச்சனம் ॥

த்ரிதளம் த்ரிகுணாகாரம் த்ரிணேத்ரம் ச த்ரயாயுதம் ।
த்ரிஜன்மபாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ச்சனம் ॥

பொருள் : பில்வ வ்ருக்ஷத்தைப் பார்ப்பதாலும், தொடுவதாலும், பாபங்கள் அழிந்துபோகும். யாவனொருவன் கொடியதான பாபத்தைச் செய்திருந்தவனாயினும், மூன்று தளங்கள், முக்குணங்கள், மூன்று கண்கள் ஆகிய மூன்றையும் கொண்ட வில்வதளம் ஒன்றை எடுத்துப் பக்தியோடு சிவபெருமானை அர்ச்சித்தானானால் அவன் மூன்று பிறவிகளில் செய்த பாபங்களை ஒழித்தவனாகிறான்.

## सिंहध्यानम्

पीतवर्णं चतुष्पादं लम्बोदरगजान्तकम् ।
दम्ष्ट्रां करालमत्युग्रं सिंहरूपं विभावयेत् ।।

ஸிம்ஹ-த்யானம்

பீதவர்ணம் சதுஷ்ப்பாதம் லம்போதரகஜாந்தகம் ।
தம்ஷ்ட்ராம் கராளமத்யுக்ரம் ஸிம்ஹரூபம் விபாவயேத் ॥

பொருள் : மஞ்சள் நிறமாயும், நான்கு பாதத்தோடும், யானையின் எதிரியாயும் யானையைத்தின்னும் பெருவயிறு படைத்ததாயும், கோரைப்பற்கள் ஆகியவற்றுடன் மிகவும் உக்ரமாயும் விளங்கும் ஸிம்ம ரூபத்தைத் தியானிக்கவேண்டும்.

।। शुपमस्तु ।।

*சுபமஸ்து*